

தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன் பம்புகளை வாங்குங்கள்

வார முரசொலி
VARAMURASOLI

Pump With Standard Accessories

Select Newtone - Pumps

முரசு 3 ஒலி 91 ஞாயிற்றுக்கிழமை 12-03-1989 (மாசி 29) ஷஃபான் 03 விலை ரூபா நான்கு

# வடகிழக்கு பகுதி நீதிபதிகளை கொழும்பு வருமாறு அழைப்பு

## உண்மைநிலையை நேரில் அறிய பிரதம நீதியரசர் சந்திக்கிறார்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த நீதிபரிபாலன சேவைத்துறை அதிகாரிகள் அனைவரையும் பிரதம நீதியரசர் திரு. பரிந்த ரணசிங்கா இவ்வார இறுதியில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்பு இம்மாதம் 17-ம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரியவந்துள்ளது

மாவட்ட நீதிபதிகள், மேலதிக மாவட்ட நீதிபதிகள், மாஜிஸ்டிரேட்டுகள், மேலதிக மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரும் இச்சந்திப்புக்காக பிரதம நீதியரசரால் அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு, மாகாணத்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். இந்து மைதானம் அருகே குண்டு வெடிப்பினால் பதற்றம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் நேற்றுப் பிற்பகலளவில் குண்டுவீச்சு நடைபெற்றதைத் தொடர்ந்து அப் பகுதி சிறிது நேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

இந்துக்கல்லூரிக்கும் கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்குமிடையே கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இச் சம்பவம் நடைபெற்றதையடுத்து பார்வையாளர்களும், போட்டி வீரர்களும் ஓட்டம் பிடித்தனர்.

இக் குண்டு வெடிப்பையடுத்து அமைதிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருந்தால் இங்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்குமென்று கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## தாம்பரத்தில் கடத்தப்பட்ட இலங்கை மாலுமி போலிஸில்

(சென்னை)

இலங்கைத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு அவர்களிடமிருந்து தப்பிவந்ததாகக் கூறப்படும் இலங்கைமாலுமி ஒருவர் இதுகுறித்து சென்னை பொலிஸாரிடம் புகார் செய்துள்ளதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

வடபழனியில் சில வருடங்களாக குடும்பத்துடன் வசித்து வரும் தயாராஜன் என்பவரே தம்மை தீவிரவாதிகள் கடத்தியதாக புகார் செய்துள்ளார்.

## ஜானகி - ஜெயலலிதா பண மோசடி விசாரணை ஆரம்பம்

முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி ஆரின் மனைவி ஜானகி ராமச்சந்திரனும், செல்வி ஜெயலலிதாவும் பல கோடி

→16 ஆம் பக்கம் பார்க்க

### ராஜீவ், கருணாநிதியை சந்திக்க

## வடகிழக்கு முதலமைச்சர் நேற்று இந்தியா பயணம்

வடக்கு கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் திரு. ஏ. வரதராஜப்பெருமாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி ஆகியோருடன் வடக்கு கிழக்கு நிலைமைகள் பற்றி பேச்சு நடாத்துவதற்காக நேற்று இந்தியா பயணமானார்.

வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்குரிய இந்திய உதவிகள், மாகாணசபையின்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## அரச ஊழியருக்கு 2000 ரூபா புதுவருட சம்பள முற்பணம்

தமிழ் சிங்களபுத்தாண்டுக்கு முன் அரசாங்க ஊழியர்களுக்கு மாதச் சம்பளத்துடன் இரண்டாயிரம் ரூபா முற்பணமாக வழங்கப்படவுள்ளது. வட்டியில்லாக் கடனாக பத்து மாதங்களில் மாதாந்த தவணை அடிப்படையில்இப்பணம் அறவிடப்படும்.

பொது நிர்வாக அமைச்சின் ஜனவரி சுற்று நிருபப்படி மார்ச் 31-ம் திகதிக்கு முன் அரசாங்க ஊழியர்களுக்கு

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## தோல்வியுற்ற வேட்பாளர்கள் பழைய வேலையில் சேரலாம்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற அபேட்சகர்களுக்கு அவர்கள் முன்பு வேலை செய்த இடங்களில் அதே வேலையை மீண்டும் கோரினால் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரசாங்க, இணைக்ளகூட்டுத்தாபனங்களில் பணிபுரிந்தவர்கள் மீண்டும் தம் பதவிகளைக் கோரி விண்ணப்பித்தால் அப்பதவிக்கு மீண்டும் அவர்களை அமர்த்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

### தமிழக இடைத் தேர்தல்

## மதுரை கிழக்கு, மருங்காபுரி முடிவுகள் இன்றிரவு தெரியும்

(சென்னை)

தமிழக சட்டசபையின் மதுரை கிழக்கு, மருங்காபுரி ஆகிய இரு தொகுதிகளின் இடைத்தேர்தல்கள் நேற்று அமைதியாக நடைபெற்றன.

மதுரை கிழக்கு தொகுதியில் தி. மு. க. ஆதரவிலான மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட், அ. தி. மு க., பாரதிய ஜனதா, இந்திரா காங்கிரஸ் உட்பட முப்பத்தொரு பேர் போட்டியிடுகின்றனர்.

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## இரு விமான விபத்து 33 பேர் பலி

(லண்டன்)

கனடாவிலும் தென் அமெரிக்காவிலுள்ள பெரு நாட்டிலும் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வெவ்வேறு விமான விபத்துக்களில் மொத்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## பாரத கடற்படை தளபதி வந்தார்

(சென்னை)

பாரத கடற்படையின் கிழக்குப் பகுதிதளபதி எல்.ராம்டா இலங்கையில் உள்ள பாரத கடற்படைப் பிரிவுகளை இரு நாட்கள் பார்வையிட்ட பின்னர் நேற்று சென்னை திரும்பினார். தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியையும், அவர் சந்தித்துப் பேச்சு நடாத்தினார்.

## தவறுதல் சூட்டில் ஜவான் பலி

(வவுனியா)

வவுனியா - கண்டி வீதி அமைதிப்படை முகாம் ஒன்றில் ஜவான் வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததினால் ஸ்தலத்திலேயே பலியானார்.

## 30 கிராமசேவகர் ஒரு வருடத்தில் பலி

கடந்த ஒரு வருடத்தில் முப்பது கிராமசேவகர்கள் கொல்லப்பட்டதாகவும், இவர்களில் பெரும்பாலானோர் தெற்கிலேயே கொல்லப்பட்டதாகவும் பொது நிர்வாக அமைச்சர் திரு.யு பி.விஜேகூன் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தம்பதி நடத்திய கொள்ளை

(நியூயோர்க்)

முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ், அவரது மனைவி இமல்டா மார்க்கோஸ் முந்நூற்றி நாற்பது மில்லியன் டொலரை பிலிப்பைன்ஸில் இருந்து கொள்ளையடித்து

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## புதிய அமெரிக்க பாதுகாப்பு மந்திரி

(நியூயோர்க்)

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சராக யோண் ரவர் அமெரிக்க ஜனாதிபதியால் சிபார்சு செய்யப்பட்டு செனற் சபையால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து திரு. டிக்சினியின் பெயரை புதிய பாதுகாப்பு அமைச்சராக திரு. ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

### ★ ஒலிபரப்பு, ரூபவாஹினி கூட்டுத்தாபனங்களுக்கு சிக்கன உத்தரவு

## பணிப்பாளர் வாகனவசதி நிறுத்தம்

## வெளிநாட்டு உற்பத்திப்பொருள் விளம்பரங்கள் குறைப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டும் கடும் சிக்கனத்தைக்கடைப்பிடிக்க வேண்டுமெனவும், வாகனப் பாவனைகளை ஐம்பது வீதம் குறைக்கவேண்டுமெனவும் தகவல் தொடர்புகள் ராஜாங்க அமைச்சர் திரு. ரணசிங்க அறிவித்துள்ளார். மேற்படி கூட்டுத்தாபனங்களின் பணிப்பாளர்கள் தங்கள் வதிவிடங்களிலிருந்து வந்துபோக வழங்கப்பட்ட வாகன வசதி நிறுத்தப்பட்டுள்ளது. இதே போல ஒலிபரப்புக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விசேஷ பஸ் சேவை வசதியும் நிறுத்தப்பட்டுள்ளது. அண்மையில் இரு கூட்டுத்தாபனங்களினதும் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் ரணசிங்க, வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு வழங்கப்படும் விளம்பரங்களை குறைக்கவும், சிங்கள தமிழ் கலாசார நிகழ்ச்சிகளை அதிகரிக்கவும் ஆலோசனை வழங்கினார் உயர் அதிகாரிகள் அலுவலக சேவைக்கு அஞ்சல் உறையை (என்வலப்) இருபக்கமும் பாவிப்பதன் மூலம் இருதடவை பயன்படுத்த முடியுமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# சிறு விளம்பரம்

**பயிற்சி**

றேடியோ, T. V. Deck, ரெப்ரிஜி ரேஷன், ஏர்கண் டிஷனிங், எலக்றிகல் வயறிங், வெல்டிங், பிளம் பிங், றிவைண்டிங், புதிய பிரிவுகள் ஆரம்பமாகி றது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: - Nesta Technical Institute, 59, Station Road, Jaffna. 03293

**விற்பனைக்கு**

பாவித்த தளபாடங்கள் செற்றி, அல்மாரி, கட்டில், கபேட் Show Case மேசை கதிரை, T.V. Zig Zag தையல் மெஷின், மற்றும் பல பொருட்களும் உடன் மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. நடராஜா குருக்கள் வாசம், வீரமாகாளி அம்மன் கோயில் வளவு நல்லூர். 03324

**கல்வி**

பாலர் ஆசிரியர் சங்கம் நடாத்தும் பாலர் ஆசிரியர் பயிற்சிநெறி- 1989. க. பொ. த.(சா/த) சித்தி பெற்ற பெண்கள் கற்கலாம். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் நடைபெறும். நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, 73, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 03282

**காணவில்லை**

ஆறு ப்பிள்ளை யேம்ஸ் எனும் பெயருடையஅடையாள அட்டை காங்கேசன்துறையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பி. யேம்ஸ், 6-ம் வட்டாரம், மயிலிட்டி, காங்கேசன்துறை எனும் விலாசத்திற்கு அனுப்பவும் சன்மானம் வழங்கப்படும். 03332

**சேவை**

சகல விதமானகசற் றேடியோக்கள், ரெலிவிசன், வீடியோ டெக் திருத்திக் கொடுக்கப்படும். மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ் போமர் றீவைண்டிங் செய்தல். அன்ரனு பொருத்துதல், வீட்டு மின்சார வேலை செய்தல் என்பன செய்து கொடுக்கப்படும். விபரங்களிற்கு: Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம் குறிப்பு: திருத்த முடியாத ரெலிவிசன், வீடியோ டெக், றேடியோக்கள் விலைக்கு வாங்கப்படும். 03223

**தேவை**

பண்ணையில் வேலை செய்வதற்கு ஆள் தேவை. நேரில் வரவும். Farm House, Courts Road, Mallakam பாம் ஹவுஸ், கோட் ரோட், மல்லாகம். 03316

**தேவை**

எங்கள் ஸ்தாபனத்துக்கு பெண் உதவியாளர் தேவை. பிறந்த திகதியுடன் விண்ணப்பிக்கவும். மேர்வினஸ் 91/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 03295

**சேவை**

பேப்பர் பொம்மை பயில விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரில் தொடர்பு கொள்ளவும். சேரவிரும்புவோர் மார்ச் 19 - ம் திகதிக்கிடையில் சேரவேண்டும். ரமாவாசா, 22, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 03285

**A/L MATHS**
**ஆசிரியர்: ரவிமோகன்**
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## ஜெய்ப்பூர் அவயவ பாவனையாளர் சங்க பொதுக் கூட்டம்

ஜெய்ப்பூர் செயற்கை அவயவ பாவனையாளர் சங்க விசேட பொதுக்கூட்டம் பழைய பூங்கா வீதியிலுள்ள ஜெய்ப்பூர் தொழிற்சாலையில் இன்று நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர்திரு. ச. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அங்கத்தவருக்கான புனர்வாழ்வு, நிவாரண, கடன் வசதி திட்டங்கள் பற்றி அறிமுகமும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

## இடமாற்றம்

மன்னார் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க பரிசோதகர் திரு. ஏ. ஆர். ஈ, ஜெயரட்ணம் இம்மாதம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

பொல்லனறுவையில் இம்மாதம் முதலாம் திகதி கொலை செய்யப்பட்ட கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவன் நடேசன் மணிவண்ணனுக்கும் மற்றவர்களுக்கும் யாழ், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளதுடன் இவ்வாறான அப்பாவிமக்கள் படுகொலை செய்யப்படுவதையும் வன்மையாக கண்டித்துள்ளது.

## ஹோமியோபதி

அடுத்த ஹோமியோபதி (வைத்திய முறை) வார இறுதி வகுப்புக்கள் 1989, மே மாதம் ஆரம்பமாகின்றன. கற்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் நேரடியாக காலை 9. 00 மணிக்கும் நண்பகல் 12 00 மணிக்குமிடையில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்

**வட இலங்கை ஹோமியோபதி சங்கம்**
5, நாவலர் வீதி (ஐந்து சந்தி) யாழ்ப்பாணம்
03279

# A. A. T. - STAGE II

(SRI LANKA)

**JULY - 1989**
வகுப்புக்கள் ஆரம்பம்
15 March 1989
(Stage i வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன)

Contact:-
**North Ceylon Technical Institute**
14, St Peters Lane.
Hospital Road, Jaffna.
03216

சுன்னாகம்
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்**

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 3000ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/ சங்கத்தில் செலுத்தி சங்க வேலைநாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

17. 03. 89 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
சுன்னாகம். பொது முகாமையாளர்
11. 03. 1989 03361

## உள்ளூர் திரைகளில்

ஹரன வெண்திரையில்
10-30 2-30 4-45
பயங்கர கார் ஓட்டங்களும் தாக்குதல்களும் நிறைந்த
**RVNNING SCARED**
C. Scope
03329

6-வது வெற்றிவாரம்!!
நியூ சாந்தி (யாழ்நகர்)
காலை 10.30, 2.30
*பாண்டியராஜன் *ஊர்வசி *செந்தில்
ஏ. வி. எம்மின்
**பாட்டிசொல்லைத் தட்டாதே**
(ஈஸ்ட்மன் கலர்)
30330

## அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்புக் காட்டுக்கள், புதுமனைப் புகுவிழா அழைப்புக் காட்டுக்கள், விருந்துபசாரக் காட்டுக்கள், அறிமுக அட்டைகள் அடிக்கும் காட்டுக்கள், பிறந்தநின அழைப்புக்காட்டுகள், காகிதாதிகள், எழுதுகருவிகள், மின்சார உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் யாவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும்.

03174

## உதவித் தாதியர் பயிற்சிநெறி (Diploma in Nurses-Aide)

மேற்படி பயிற்சி நெறிகள் 10-04-89-ல் ஆரம்பமாகவுள்ளன. உங்கள் பயிற்சிக்கான பதிவுகளை முன் கூட்டியே செய்துகொள்ளவும்.

1. தகைமை: க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி.
2. வயது: 17 தொடக்கம் 28 வரை.
3. காலம்: $1\frac{1}{2}$ வருடங்கள்.
4. 6 மாதகால அரசாங்க வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி.
5. அரசதொழில் வாய்ப்புக்கு உரித்துடையது.

விபரங்கட்கு:

அதிபர்

**சாயி மெடிக்கல் அக்கடமி**
**(School of Nurses-Aide)**
**இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.**
03254

பிரயாணம்......... பிரயாணம்......... பிரயாணம்.........

## 'M' Three Travel

வழங்கும்

## உடனடிப் பிரயாணம்

| | | |
|---|---|---|
| 1. | Electronic Engineer | 1800 S R |
| 2. | Mechanical Engineer | 1500 S.R |
| 3. | Electrical Engineer | 1500 S.R |
| 4. | Grader Operator | 220 U S D |
| 5. | Excavator Operator | 220 U S.D |
| 6 | Wheel Loader | 220 U S D |
| 7. | Crane Operator | 220 U.S.D |
| 8. | Dober Operator | 220 U.S.D |
| 9. | Cleaners 50 வெற்றிடங்கள் உண்டு. கடவுச்சீட்டு உடன் தொடர்பு கொள்ளவும். | |

★ சிரியா: பணிப்பெண்கள்
(ஒரு வாரகாலத்துக்குள் பயணம் செய்யலாம்)

குறிப்பு:
★ Passport (கடவுச்சீட்டு), Bond (பொன்ட்) என்பன உடன் செய்து கொடுக்கப்படும்.

★★ எமது முகவர் தற்சமயம் இவ்விடம் உள்ளார். கடவுச்சீட்டு (Passport) கொடுத்தவர்கள் உடன்வந்துசந்திக்கவும்.

★ நம்பிக்கை ★ நாணயம்
என்பவற்றிக்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
"M" Three Travel

● உங்கள் எதிர்காலம் ஒளிபெற நாடுங்கள்
'M' Three Travel
இவை எல்லாவற்றிக்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# 'M' Three Travel

**HEAD OFFICE:**
INDRABAVANAM
Sothy Veethy,
Kankesanthurai

**BRANCH OFFICE:**
No.1, 2nd Lane.
Power House Road,
Jaffna.

03319

வார முரசொலி

# தமிழ் அகதிகளின் எதிர்காலம் அவதிநிறைந்ததாகதெரிகிறது

கனேடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவர் தமிழ் அகதிகளின் நிலை பற்றி ஒரு திரைப்படம் எடுக்கும் நோக்கத்துக்காக அண்மையில் இலங்கை வந்திருந்தார். நியூ பவுண்லாந்து கடற்கரையில் அநாதரவாகக் கைவிடப்பட்டு,சிறியபடகில் தத்தளித்த தமிழ் அகதிகளின் அவலத்தையும் கனேடிய மீனவர்களால் அவர்கள் துன்புறுத்தப்பட்டதையும் மையமாகக் கொண்டு இத்திரைப்படம் உருவாக்கப்பட்டது.

முழுக்க முழுக்க வேறுபட்ட கலாசாரத்தைக் கொண்ட பிறிதொரு நாட்டிலிருந்து வந்த ஒரு கூட்டத்தினரின் பிரச்சனையை கனேடிய மீனவக் கிராமத்தினருக்கு விளக்குவது போலவே இத்திரைப்படத்தின் கதை அமைந்திருந்தது

இக்கதையில் ஓரளவு கற்பனையும் கலந்திருக்கிறது. ஆனுல் அதன் அடியில் பொதிந்திருக்கும் உண்மைச் சம்பவம் 1986 ஆம் ஆண்டின் முற்பகுதியில் கனேடிய மீனவர் சிலரால் காப்பாற்றப்பட்ட 155 பேர் கொண்ட இலங்கை அகதிகளின் அவலம் பற்றியதாகும். இச்சம்பவம் சர்வதேச சமூகத்தின் உணர்ச்சியை உலுக்கிய தோடுமட்டுமல்ல மல் கனடாவுக்குள் ஓர் அரசியற் புயலையே கிளப்பிவிட்டிருந்தது. இந்த அகதிகளின் பரிதாப நிலைமைக்காக பெரிதும் வருந்தினர். இதனிடையே கனேடிய பிரதமர் மல்ரோணி அவர்கள்.''இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் கனடா பராமுகமாக இருக்காமாட்டாது'' என வெளிப்படுத்தினுர்.

1983 ஜூலை கலவரத்தையடுத்து ஐம்பதினுயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் தஞ்சம் கோரிப்புகலிடம் தேடினர். இத்தகைய ஒரு சம்பவம் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் போக்கில் பெரியதொரு மாற்றத்தை உண்டு பண்ணியது இதுபோலஒரு கண்டத்திலிருந்து பயந்து வேறொரு

**கலாநிதி நீலன் திருச்செல்வம்**

கண்டத்துக்குப் புகலிடம் தேடி ஓடும் செயல் முன்னர் ஒரு போதும் இடம்பெறவில்லை. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளின் அகதிகள் சட்டம் வெகுதளர்வான தாகவே காட்டப்பட்டது ஆனுல், தமது மொழியைப் பேசாத,தமது கலாசாரத்தைச் சாராத,தமது திருச்சபைகளை வணங்காத ஒரு கூட்டத்தினர். பெருமளவில் பெருக்கெடுத்து வந்தது அவர்களைத் திக்குமுக்காடச் செய்து விட்டது.

கடந்த காலத்தில் அகதிகள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தே வந்தனர். அவர்கள் திறந்த கைகளால் மனமுவந்து வரவேற்கப்பட்டனர். ஆனுல் தமிழ் அகதிகளைப் பொறுத்தவரை பல ஐரோப்பிய அரசாங்கங்கள் ஒரு வித்தியாசமான அணுகுமுறையையே கடைப்பிடித்தன. மேற்கு ஜேர்மனி, சுவிற்சலாந்து,பெரிய பிரித்தானியா, நெதர்லாந்து போன்ற நாடுகளில் இனவாதக் கொள்கைகளை வலுப்படுத்துவதற்கே இந்த அகதிகள் பிரச்சனை பயன்படுத்தப்பட்டது இந்த அரசியற் போக்குகள் பொது மக்கள் அபிப்பிராயத்தை மாற்றத் தலைப்பட்டன இதனுல் ஒருவகையான துன்புறுத்தலிலிருந்து தப்பிய மக்கள் வேறொருவகையான சிக்கலில் மாட்டிக் கொள்ளலாயினர். இவர்கள் பயந்து வாழவேண்டி ஏற்பட்டது விருப்பியபடி எங்கும் செல்ல முடியாது தடுக்கப்பட்டனர். அந்த நாட்டு மொழியைக் கூடக் கற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புகள் தரப்படவில்லை. தொழில் வாய்ப்பு இவர்களுக்கு மறுக்கப்பட்டது விரக்தி, சோகம், புறக்கணிப்பு அவமரியாதை போன்ற நிலைமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர் இவ்விடயம் முழு ஐரோப்பிய நாடுகளின் கவனத்தையும் ஈர்த்தது

கண்மூடித்தனமாக அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பங்களை நிராகரிக்கத் தலைப்பட்டனர். உதாரணமாக நெதர்லாந்து 1985-ல் புதிய சட்டமொன்றையே கொண்டு வந்தது. இது முழுக்க முழுக்க தமிழ் அகதிகள் சம்பந்தப்பட்ட சட்டமாகும். இது ''1985 ஏப்பிரல் 10-ந் தேதிய'' படுக்கை குளிப்பு-பாண் ஒழுங்கு விதிகள்'' எனக் கூறப்பட்டலாம் இந்த ஒழுங்குவிதி மூலம் அகதிகளுக்குக் கிடைக்கும் சொற்ப பண உதவி கூட மறுக்கப்பட்டது. அவர்களின் அத்தியாவசிய தேவைகளான படுக்கையும் குளிப்பும் பாணுமே அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தப் பாரபட்ச நிலைமையைக் கண்டு ஒல்லாந்து மனிதாபிமான நிறுவனங்கள் அதிர்ச்சியடைந்தன. அந்த ஒழுங்குவிதிகளை நீசகஞ்செய்ய வேண்டும் என அவர்கள் வேண்டியும் அது பயனளிக்கவில்லை இந்தக் கொள்கைகள் காரணமாக அகதிகளிடையே பெரும் அதிருப்தி காணப்பட ஏதுவாயிற்று. அகதிகள் நெதர்லாந்தில் 1985 ஏப்ரல் மாதத்தில் உண்ணுவிரதத்தை மேற்கொண்டனர். அவர்கள் இருந்த இரு முகாம்கள் தியிட்டுக் கொளுத்தப்பட்டன. இதே போன்று 1984 இல் நத்தார் பண்டிகைக் காலத்தின் போது பேர்ளினில் உள்ள ஒரு மறியற்சாலை தீப்பற்றியே மூன்று தமிழ் அகதிகள் உயிரிழந்தனர். சுவிற்சலாந்தில் அதிகதிகளை நோக்கி துவக்குகளைக் குறிபார்த்துப் போர் வீரர் மகிழ்வார்கள் என்று ஒரு அகதி விபரித்தார் இது போன்ற இம்சைகள் பலவற்றை அகதிகள் அன்ருடம் அனுபவித்து நொந்தனர்.

அகதிகளைப் பொறுத்தவரை பல ஐரோப்பிய நாடுகளின் போக்கு அவ்வளவு சாதகமாக இருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தின் உதவி ஒத்தாசையோடு. இந்த அகதிகள் உண்மையில் தமது பணத்தை மேலும் பெருக்கவே வந்துள்ளதாகப் பிரசாரம் செய்யப்பட்டது இவர்கள் அரசியல் அகதிகள் அல்லர் எனவும் பொருளாதார அகதிகள் எனவும் விவரிக்கப்பட்டனர் 1983-ல் இடம் பெற்ற இனக் கலவரமும் அதைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலையும் வடக்கு கிழக்கு விவசாயிகளின் பொருளாதாரத்தை முற்ருகச் சீர்குலையச் செய்து விட்டன என்பதை ஒரு சிலரே உணருகின்றனர். இலங்கையின வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் காணப்படும் உண்மையான அரசியல் நிலைமைகளைப் பற்றியோ அல்லது அரசியல், சமூக பொருளாதார நிலைமைகளுக்கிடையே காணப்பட வேண்டிய உறவு நிலை பற்றியோ ஐரோப்பிய உத்தியோகத்தர்கள் அறிந்து கொள்ள முயலவில்லை. நீதிமன்றங்கள் கூட அகதிகளின் விண்ணப்பங்களைக் கடுமையாகவே கருதி வந்தன. தமக்குக் கிடைத்த அற்பதொகையைக் கூட, தமது உறவினருக்கு அனுப்பி வைப்பதற்காக தபால் அலுவலகங்களிலும் வங்கியிலும் பெருமளவில் திரண்டு நிற்கும் அகதிகளின் உண்மை நிலையை விளக்குவதற்கு வேறு விளக்கம் தேவையில்லை.

தமிழ் அகதிகளின் அவலத்துக்கு விடிவே இல்லை இனறும் கூட பராயமடையாத சிறுவர்கள்டென்மார்க் தேசத்துக்கு அநாதரவாக வருகிறர்கள். இவர்கள் டென்மார்க் அரசுக்கு பெரும் தலையிடியாக உள்ளனர் மக்கள் தமது உடைமைகள் எல்லாவற்றையும் விற்று நகைகளை அடைவு வைத்து, காணிகளை ஈடு வைத்து எப்படியாவது வன்செயலிலிருந்து தப்பினுல் போதும் என்ற மனநிலையுடன் இந்த நாடுகளுக்கு வருகிருர்கள் என்பது கவலைக்குரியதே

[15-ம் பக்கம் பார்க்க]

## தரிசனம்

பெருந் தொகையான தமிழர்கள் குறிப்பாக இளைஞர். யுவதிகள் வெளிநாடு செல்வது பற்றி பலதடவை நாம் மன வேதனையடைந்துள்ளோம்.

இப்படியே ஆயிரக்கணக்காக நம்மவர்கள் விமானம் ஏறிக்கொண்டிருந்தால், எங்கள் சனத்தொகை குறைந்து விடும் என்பது எமதுவேதனைக்கு ஒரு காரணம்

அதே சமயம், வெளிநாடு செல்பவர்களின் பிள்ளைகள் தங்கள் மொழியையும், கலாசார பாரம்பரியங்களையும் மறந்து விடுவார்களோ என்ற அச்சம் அடுத்த காரணம்.

ஒரு சில நூறு குடும்பங்கள் என்ருல் பரவாயில்லை. பல நூறு குடும்பங்கள், ஆயிரக்கணக்காகச் செல்லும் போது இவ்வாருன அச்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

வெளிநாடுகளிலுள்ள தமிழ்க் குழந்தைகளின் கல்விக்காக பாடப்புத்தகங்களை அச்சிட்டு இங்கிருந்து அனுப்பினுல் என்ன என்று கூட சிலர் ஆலோசனை வழங்கியிருந்தனர்.

இவ்வாருன ஒரு நிலையில், வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் சஞ்சிகைகள், பத்திரிகைகளை தமிழில் வெளியிடுவதில் காட்டி வரும் ஆர்வம் எம்மை மகிழ்வடையச் செய்துள்ளது.

தமிழர், உலகில் எங்கெல்லாம் பரந்து வாழுகின்ருர்களோ அங்கெல்லாம் தமிழ் மணக்க வேண்டும் என்பதே எமது அவா.

லண்டன் வாழ் தமிழர்கள் சிலகாலத்துக்கு முன்னர் 'தமிழன்' என்ருரு சஞ்சிகையை வெளிக் கொணர்ந்தனர்.

இதே போல நோர்வேயிலுள்ள சில தமிழ் ஆர்வலர்கள் சேர்ந்து 'யாழ்' என்ற பெயரில் சஞ்சிகையொன்றை வெளியிட்டனர்.

இந்த வரிசையில் எமக்குத் தெரிந்தளவில் மூன்ருவதாக கனடாவிலிருந்து புதியதொரு தமிழ்ச் சஞ்சிகை வெளிவர ஆரம்பித்துள்ளது.

இங்குள்ள ஈழத்தமிழர் ஒன்றியம் 'தமிழ் எழில்' என்ற பெயரில் நாற்பத்துநான்கு பக்கங்களில் இதனை பிரசுரஞ் செய்துள்ளது. அருமையானதொரு முயற்சி.

இதேபோல ஜேர்மன் சுவிஸ், அவுஸ்திரேலியா, இத்தாலி போன்ற மேற்கு நாடுகளில் வசிக்கும் நம்மவர்கள் புதுப் புதுச் சஞ்சிகைகளை வெளியிட முன்வர வேண்டும்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்''என்றபாரதி கனவு நனவாக வேண்டாமா?

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

## செயற்கரிய செய்தோர்

**பெருந்தலைச் சாத்தனுர்**

தம்பியாகிய இளங்குமணன் நாட்டைக் கைப்பற்றித் தன்னையும் கொல்ல முற்பட்டதை அறிந்த குமணன் காட்டில் வசித்து வந்தான். குமணனைப பாடிப் பரிசில் பெற நாட்டுக்கு வந்த பெருந்தலைச் சாத்தனுர் என்னும் புலவர் நடந்தவற்றை அறிந்தார் சகோதரர் இருவரையும் ஒற்றுமைப்படுததவேண்டும் என்னும் நல்லுள்ளம் கொண்டார்.

காட்டில் குமணன் இருக்குமிடம் அறிந்து குமணனிடம் சென்ருர். சாததனுருக்குப் பரிசில் கொடுக்க முடியாதிருந்தது. குமணனுக்குத் துன்பமாக இருந்தது. நாட்டை இழந்த துன்பத்திலும் பெருப் துன்பம் ஆகியது.

குமணனின் தலையைக் கொண்டு வருவோர்க்குப் பரிசு கொடுப்பதாக இளங்குமணன் நாட்டில் தெரிவித்த செய்தி குமணனுக்கு நினைவுக்கு வந்தது.

குமணன் தனது வாளை எடுத்துச் சாத்தனுரிடம் கொடுத்து தனது தலையை அரிந்து ளங்குமணனிடம் கொடுத்துப்பரிசு பெறுமாறு கேட்டுக்கொண்டான்.

கைநடுங்க, உளப் பதைக்க வாளை வாங்கிய சாத்தனுர் இளங்குமணனிடம் விரைந்தார். "நான் நின் தமையனைப் பாடி நின்றேன் நான் பொருளில்லாமல் திரும்புவது நாடிழந்த துன்பத்திலும் பெரிது என நினைத்த அவன் தலையை அரிந்து நின்னிடம் கொடுத்துப் பரிசில் பெறுமாறு வாளினைத் தந்தான்'' என்று கூறிய அவர் ''இவ்வுலகத்தில் நிலைபேறு கருதினுேர் கொடையினுல் தம் புகழை நிறுத்தி உயிர் துறந்தார் என்றும் ஒன்றும் கொடாதோர் தம் புகழை நிறுத்தாது மறைந்து போயினர்'' என்றும் கூறினுர்.

குமணனின் கொடைச் சிறப்பையும் இளங்குமணனின் செயலால் ஏற்பட்ட பெரும் பழியையும் சாத்தனுர் குறிப்பாகக் கூற அதனைத் தெரிந்துகொண்ட இளங்குமணன் தன் தவற்றுக்கு வருந்திக் காடு சென்று தன் தமையனை நாட்டுக்கு அழைத்து வந்து அவன்வழி நின்று இன்புற்ருன். கொடைவள்ளல் குமணனுக்கு ஏற்பட்ட அவலத்தை நீக்கிய சாத்தனுர் பெருமகிழ்வு எய்தினுன்.

# பண்டிதர் ஐயாவின் பிட்டுக் (புட்டுக்) கடகம்

பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் மூன்றாவது நினைவுதினம் நாளை 13ம் திகதி. பண்டிதமணி ஐயாவை நினைவுகூரும் முகமாக அவருடன் சம்பந்தப்பட்ட சிறுசிறு சம்பவங்கள் இங்கே கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளது.


## லோக்கல் ற்றெயின்

அந்தக்காலத்தில் (1949—1950-ல்) ஒரு புகை வண்டி பிற்பகல் வேளைகளில் காங்கேசன்துறையில் இருந்து புறப்படடுப் பளை வரை செல்லும். நாலுமணி லோக்கல் ற்றெயின்' என்று எந்தக் குழந்தையும் சொல்லும். பிற்பகல் நான்குமணி இருபத்திரண்டு நிமிஷத்தில் கொக்குவில் புகைவண்டி நிலையத்தில் அந்த வண்டி தவறாது வந்து நிற்கும் .அந்தப் புகைவண்டியைச் சனிக்கிழமை நாட்களில் பண்டிதர் ஐயா அவர்கள் தவற விடுவதேயில்லை. சனிக்கிழமை ஞாயிற்றுக் கிழமை நாட்கள் அவரது தனங்கிளப்பு நாட்கள். சனிக்கிழமை பிர்பகல் புகைவண்டி மூலம் சாவகச்சேரிக்குப் போய் அங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ள தனங்கிளப்புக்குச் செல்வதும், ஞாயிறு காலையில் தனங்கிளப்பு காரைத்தூ விநாயகருக்கு நடைபெறு் விசேட பூசையிற பங்குபற்றி விட்டு அங்கிருந்து பஸ்வண்டி மூலம் திருநெல்வேலிக்குத் திரும்புவதும் வழக்கமாக இடம் பெறும்.

நான்கு இருபத்திரண்டுக்குப் புகைவண்டி வரும்வரை தங்கும் அறையில் தங்கியிருக்கும் பண்டிதர் ஐயா அவர்கள் பல விஷயங்கள் பற்றியும் பேசுவார்கள் சனிககிழமை பிற்பகல் நான்கு இருபத்திரண்டுக்கு முன்னர் கொக்குவில் புகைவண்டி நிலையத்தில் ஐயாவை எதிர்பார்த்தும் சிலர் நிற்பதுண்டு. 'கோண்டாவிலுக்கு றெயில் வந்து விட்டது போல் இருக்கிறது; எட்டிப பாரும்' என்பார்கள். புகையிரத மேடையில் நின்றபடி வடக்கு நோக்கிப்பார்க்க, நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மை கோயிலையுந் தாண்டி அந்த வண்டி தெற்கு நோக்கி வந்து கொண்டிருக்கும். கொக்குவில் (பழைய நிலையம்) புகைவண்டி நிலையத்தில் வண்டி சில நிமிஷங்கள் தாமதிப்பதுண்டு. ஏறிக் கொள்வோம். வில்வம்,அறுகு, பூ. பூமாலை முதலாம் அர்ச்சனைப் பொருட்கள் அடங்கிய பார்சலை என்னிடம் தந்து 'பக்குவம்' பக்குவம் என்பார்கள். அவர்களது பக்குவ நிலை அவ்வளவுக்கு இருந்தது. நானோ அப்பொழுது அவ்வளவுக்குப் பக்குவம் அடையாதவன்.

ஐயாவைப் புகைவண்டியிற் கண்டதும் மற்றமற்ற வகுப்புகளில் உள்ளவர்கள்—முன்பின் அறிந்தவர்கள் ஐயா இருக்குமிடநதேடி வந்து சேர்ந்து விடுவார்கள். இராமாயணம் பாரதம் பற்றிய பேச்சுக்கள், புராண ஆராய்ச்சிகள் எல்லாம் இடம் பெறும். இந்தச் சம்பாஷணைகள் ஆராய்ச்சிகளை அவதானித்து எனக்குத் தெரிந்த அளவில் மகிழ்ச்சி கொண்டதுண்டு.

வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களைக் கவிநயச் சககரவர்த்தி என்று பண்டிதர் ஐயா அவர்கள் பல சந்தர்ப்பங்களில் வர்ணித்திருக்கிறார்கள், 'கவி நயங்களை எடுத்துச் சொல்லும் போது. தேன் குடத்தைச் சூழ்ந்திருக்கும் மது கரங்களைப் போல' வித்துவசிரோமணியைச் சூழ்ந்து இரசிகர்கள் இருப்பார்கள்'' என்று பண்டிதர் ஐயா அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தக் காட்சியைத்தான் யானும் புகைவண்டியிற் பார்த்து நினைவு கூர முடிந்தது.



ஏறக்குறைய மாலை ஐந்து முப்பது மணியளவில் அந்த வண்டி சாவகச்சேரியைச் சென்றடையும்.

## வயல்வெளி

சாவகச்சேரியில் தேநீர் சிற்றுண்டி யாவும் கிடைக்கும். தெற்கு நோக்கி நடப்போம். நல்ல மாலைவேளை மென்தென்றல் தவழ்ந்து கொண்டிருக்கும். செக்கர் வானம் சூரியாஸ்தமனக் காட்சி, நாம் நடக்கத் தாம் நடக்கும் காமர் நெடுங்காநி போல, தனங்கிளப்பு வயல்வெளிகளும் எமது நடைக்கு நீண்டு கொண்டே செல்லும்.

## புண்ணியவதி

தனங்கிளப்பில் பண்டிதர் ஐயாவின் ஆசிரம வாசலில் வடக்கேயிருக்கும் சாவகச்சேரியை நோக்கிய வண்ணம் வைத்த கண் வாங்காமல் எதிர் பார்த்துக் கொண்டிருப்பார் ஒரு கிழவியார் வயது எழுபதுஇருக்கலாம் நரைமயிர் சொருகிய கொண்டை உயரமோ ஐந்து அடி, நெற்றியில் திருநீறு. சந்தனப்பொட்டு, காதில் அணிந்திருந்த பாரிய சிவப்புக்கலுத்தோடு கிழவியாரின் தோள்களை வருடிக் கொண்டிருக்கும். சுருக்கு விழுந்த சொக்கு,புன்முறுவலுடன் கூடிய பொன் வாய் கழுத்திலே உருத்திராக்கம். பால்போன்ற வெண்ணிற ஆடை அழகியதொரு குறுக்குக்கட்டு. இவ்வாறான கோலமுடையவர் தான் திருமதி பொன்னையா சின்னத்தங்கம் என்னும் பெயருடைய மூதாட்டியார்.

''வாருங்கோ, பண்டிதர் வாருங்கோ தம்பியும் வா'' நடந்து நல்லாய்க் களைச்சுப் போனியள், செம்பு நிறையத் தேத்தண்ணி இருக்கு. வயிறு முட்டக் குடியுங்கோ பிறகு புட்டுச் சாப்பிடலாம் என்று கூறிக்கொண்டே வரவேற்பார் அந்த மாதரசியார் கிழவியாரின் வரவேற்பின் போது பண்டிதர் ஐயா அவர்களின் முகம் பெரிதும் விபமிதமடைந்திருந்தது. இற்றைக்கு நாற்பதாண்டுகளுக்கு முன் தனங்கிளப்பில் பண்டிதர் ஐயா அவர்களின் ஆசிரம முன்றலில் நின்றவாறு அந்தக் கிழவியார் வரவேற்ற காட்சி இன்றும் நிழலாடிக் கொண்டே இருக்கிறது பண்டிதர் ஐயா அவர்களுடன் முதன்முதலாகத் தனங்கிளப்புக்குச் சென்றபோது பண்டிதர் ஐயாவுக்கு வயசு ஐம்பது மிகவும் உதாரமான காலம் அது எனக்கு வயசு இருபத்திரண்டு சில நிமிஷங்களில் கிழவியார் இருபெட்டிகளுடன் வந்தார். ஒரு பெட்டி நிறைய ஊர் அரிசிமாவில் பிட்டு. அடுத்த பெட்டியில் அப்பளம், கத்தரிக்காய் வாழைக்காய், மிளகாய்ப் பொரியல் வகைகள் 'அத்துடன் பல இனக் கறிவகைகளும் இருந்தன. ''இரண்டு பேரும் நல்லாய்ச் சாப்பிடுங்கோ மிச்ச சொச்சம் என்று ஒன்றையும் விட்டு விடாதையுங்கோ'' என்று ஓர் அன்புக்கட்டளையையும் விடுத்தார் அம்மையார். கிழவியார் சென்ற பின்னர் ''யார் இந்த ஆச்சி'' என்று பண்டிதர் ஐயாவைக் கேட்டேன் ''எங்கள் குலதெய்வமான காரைத்தூ விநாயகரின் நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு மிகவும் கண்ணுங் கருத்துமாக உழைத்தவர் நமசிவாயம் விதானையாரின் தாயார். புராணக் கதைகள் யாவும் அவவுக்கு மனப்

ஆசிரியமணி
அ. பஞ்சாட்சரம்

பாடம் பெரிய புண்ணியவதி'' என்றார் அந்த அம்மையாரின் விருந்தோம்பும் பண்பை உயிர் உள்ளவரை மறக்கவே முடியாது.

## விசேட பூசை

தனங்கிளப்பு காரைத்தூ விநாயகர் ஆலயத்தில் ஞாயிறு தோறும் விசேட பூசை முற்பகலில் நடைபெறும் 'கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே' என்று திருக்கோணேசுவர ஆலயமூர்த்தி தலம் தீர்த்த விசேடங்களை எடுத்துச் சிறப்பித்துத் திருவாய் மலர்ந்தருளினார் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெருமைகளையும் பெற்றது தனங்கிளப்பு காரைத்தூவிநாயகர் திருவாலயம். காரைத்தூ விநாயகமூர்த்தி வேண்டுவார் வேண்டுவதை ஈந்து அருளுபவர்.

''தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு''
(திருக்குறள்)

குன்றாத விளையுளைச் செய்வோரும், அறவோரும், கேடில்லாத செல்வமுடையோரும் ஒருங்கு வாழ்வதே நாடாவது என்பதற்கிணங்க ஆங்கு மக்கள் வாழ்கின்றார்கள் அத்துடன் ஆலயத்தில் தலவிருட்சமாக வானுறநோக்கி வளர்ந்திருக்கின்றது ஆலமரம். கோயிலின் ஒர்பால் குளமும், நன்னீர்க் கிணறும் அமைந்துள்ளன. அயலில் கடலும் உண்டு இவ்வாற்றால் தீர்த்த விசேடமும் உண்டு என்பது உணரத்தக்கது.

அதிகாலையில் தோய்ந்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து அனுட்டானம் பார்த்துத் திருவீதியை வலம்வருவார்கள் பண்டிதர் ஐயா அவர்கள். இன்னும் பல அடியார்களும் சமுகமளித்திருப்பார்.

ஆலய பூசகருக்கு வைரவேசுவர ஐயர் என்பது பெயர். பிரபலஸ்தர் நுணுவில் மணி ஐயர் என்றால் எல்லோருக்குமே தெரிந்தவர் சிறந்த கடவுள் பக்தர் ஆசார சீலராமாவர் முப்போதுந் திருமேனி தீண்டி விநாயகருக்கு ஐயரவர்கள் செய்கின்ற பூசைமிகவும் அற்புதமாக இருக்கும். காரைத்தூ விநாயகருக்கே ஆட்பட்டவர் அவர் வடமொழி தென்மொழி இருமொழிகளிலும் ஓரளவு புலமை உடையவர்கள். புராணகாரருங்கூட வீபூதிப் பிரசாதம் வழங்குவதுடன் அவர்கள் பக்தர்களுக்கு அளிக்கும் அமுதுதேவாமிர்தம்தான்! சில நிமிடங்கள் ஆலயத்தில் தங்கியிருந்து குருக்கள் அவர்களிடம் விடையும் பெற்றுக்கொண்டு 'பண்டா பஸ்ஸை' எதிர்பார்த்து. பண்டிதர் ஐயா வயல் வரம்புகளில்வேகமாகவும் நிதானமாகவும் நடந்து செல்வார் தான் வளர்ந்த வீடு கடதாசி விளையாடிய பனங்கூடல் முதலான இடங்களைக் காட்டிக் கொண்டே செல்வார் வயல் வரம்பில் நடந்து பழகாத நாங்கள் சில சில சமயங்களில் நெல்லினுள்ளும் புல்லினுள்ளும், மணல்மீதும் நிதானம் தவறி விழுந்ததுமுண்டு.

## பண்டா பஸ்

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து தனங்கிளப்பினூடாக ஒரு தட்டிபஸ் கேரதீவுவரை சென்று மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவது வழககம். அந்த பஸ் வண்டியின் சாரதியின் பெயர் பண்டா என்பதாகும் யாழ்ப்பாணத்தில் இருந்து கேரதீவு வரை உள்ள ஒவ்வொருவரையும் திரு. பண்டா அவர்களுக்குத் தெரியும். நடுத்தர வயதுடைய அவர் மிகவும் நிதானமானவர் பிரயாணிகளிடம் மிகவும் மரியாதையும் காட்டுபவர். யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவு என்றும், கேரதீவில் இருந்து திரும்பும் பொழுது யாழ்ப்பாணம் என்றும் பெயர்ப்பலகையில் பொறிக்கப்பட்டாலும் பிரயாணிகளுக்கு அந்த பஸ் பண்டா பஸ் தான். ஞாயிறு தினங்களில் முற்பகல் பத்து மணி முப்பது நிமிஷம் (10 மணி 30 நிமிஷம்) அளவில் அந்த பஸ் பண்டிதர் ஐயாவின் ஆச்சிரம வாசலில் வந்து நிற்கும் ''ஐயா. வாங்கோ; வாங்கோ முன் சீற்றில் இருங்கோ'' என்று வரவேற்று உபசரிப்பார் பண்டா அவர்கள். பண்டா அவர்களின் கொச்சைத் தமிழில், அன்பு,கனிவு கலந்திருப்பதைக் கண்டு மகிழ்வேன் இவ்வாறு ஞாயிறு தோறும் ஆனந்தம் அடைந்த சந்தர்ப்பங்கள் பல.

## பாத யாத்திரை

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு அடியார்கள் பாதயாத்திரை செய்வது வழக்கம் சைவப்பெரியார் மு. ஞானப்பிரகாசம், பண்டிதர் கனகசபை, நூலகர் சி முருகவேள் உள்ளிட்ட பலர் இந்த யாத்திரைக் குழுவில் பெரும்பாலும் அடங்குவர். பாதயாத்திரைக் குழுவைவழி நடத்தும் பொறுப்பு நாயன்மார்கட்டு திரு. சு பரநிருபசிங்கம் அவர்களிடம் விடப்பட்டிருக்கும் பரமேசுவராக் கல்லூரியின் முன்னை நாள் அதிபரான திரு பரநிருபசிங்கம் அவர்கள் சிறந்த ஒரு நிர்வாகியுமாவர் குசினி வேலையில் இருந்து கும்பாபிஷேக வேலை வரை எந்த வேலையை அவரிடம் ஒப்பித்தாலும் அதற்குரியவர்களைத் தேடிக் கண்டு பிடித்து அந்தந்த வேலைகளைச் செப்பமாகச் செய்விப்பதில் மிகவும் கைதேர்ந்தவர். திரு. பரநிருபசிங்கம் அவர்கள் 1956ல் நல்லூரில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கான பாதயாத்திரை ஒன்று திரு பரநிருபசிங்கம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது குறித்த திருக்கேதீஸ்வரப் பாதயாத்திரை தனங்கிளப்பினூடாகவே நடைபெற்றும் வந்தது.

## புராண படனம்

பாதயாத்திரை செய்வோர் இரவு வேளைகளில் வழியில் உள்ள ஆலயங்களில் தங்கிச் செல்வதுண்டு. அந்தந்த இடங்களில் பெரிய புராண படனமும் முக்கியமாக இடம் பெறும்.

மேற்குறித்த பாதயாத்திரையில் பங்குபற்றும் அடியார்கள் தனங்கிளப்புப் பிள்ளையார் கோவிலில் இரவு தங்குவதற்கு பண்டிதர் ஐயாவின் அநுசரணையில் ஒழுங்கு செய்யப்பட்டது அடியார்கள் சந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு பெரிய புராண படனத்தை நடத்த விரும்பினர் பண்டிதர் ஐயாவையே ஆரம்பித்து வைக்கும்படி வேண்டுகோளும் விடுத்தனர்

''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க'' என்ற பாடலுக்கு உரைசொல்லத் தொடங்கிய பண்டிதர் ஐயா அவர்கள் 'வேதநெறி தழைத்தோங்க' என்ற தொடருக்கு மட்டும் பொருள்சொல்ல முக்கால் மணி நேரத்துக்கு மேலாகி விட்டது. அடியார் கூட்டம் அந்த உரையின் திட்பநுட்பங்களை வெகுவாக இரசித்தது. முழுப்பாடலுக்கும் பொருள் சொல்லி முடிவதற்குப்பலமணி நேரம் பிடித்தது. புராண படனம் பூர்த்தியடைந்ததும் அடியார்கள் கண்ணயர்ந்தார்கள்.

1872-ல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இடம் பெற்ற கந்தபுராண படனம் வெகு பிரசித்தமானது. கவிநயச் சக்கரவர்த்தியான வித்துவ சிரோமணிபொன்னம்பலபிள்ளை அவர்கள் 'வேதக் காட்சிக்கும் ..'என்ற பாடலை வாசிக்க, உரைநயச் சக்கரவர்த்தியான நாவலர் பெருமான் அவர்கள் பயன் விரித்தார்கள் புராணங் கேட்பதில் ஆர்வமுள்ள ஆண்கள் பெண்கள் அனைவரும் மண்டபத்தில் நிறைந்திருந்தார்கள். வேதக் காட்சிக்கும் என்ற முதலையுடைய கந்தபுராணச் செய்யுளுக்குப் பல மணித்தியாலங்களாக உரை சொன்னார்கள்.

[15-ம் பக்கம் பார்க்க]

நினைவுகள் என்றும் மறப்பதில்லை
திருமணம், பிறந்தநாள், மங்கைப் பருவ நீராட்டுவிழா, மற்றும் மங்கள வைபவங்களை தெளிவாக வண்ணக் கலரில் படம் பிடித்துக் கொள்ளவும்,
பாஸ்போட், ஆள் அடையாள அட்டை கறுப்பு - வெள்ளைப்படமாக பிடித்துக் கொள்ளவும்
கஜபதி
(கறுப்பு - வெள்ளை / கலர் படப்பிடிப்பாளர்)
பிள்ளையார்கோவிலடி, களபூமி, காரைநகர்.
03173

# ஓசோன் ஓட்டை

1987-ம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தென் அமெரிக்கக் கண்டத்திலுள்ள சிலி நாட்டிலும், வட அமெரிக்காவிலுள்ள கனடாவிலும் குழுமியிருந்த வளிமண்டல ஆராய்ச்சி நிபுணர்கள் பெரும் பரபரப்புடன் காணப்பட்டனர். அவர்களின் பரபரப்புக்குக் காரணம்: ஓசோன் ஓட்டை.

ஓசோன் ஒரு வாயு. ஒட்சிசன் வாயு மூலக்கூறுகள் ஒவ்வொன்றிலும் இரண்டு ஒட்சிசன் அணுக்கள் உண்டு ஓசோன் மூலக்கூறுகளில் மூன்று ஒட்சிசன் அணுக்கள் உள்ளன. சூரியனிலிருந்து வரும் ஊதாக்கடந்த கதிர்கள் பூமியின் வளிமண்டலத்தின் உயர்ந்த பகுதிகளிலுள்ள ஒட்சிசன் மூலக்கூறுகளைத் தாக்கித் தனித்தனி அணுக்களாக உடைக்கின்றன அந்தச் சுதந்திர ஒட்சிசன் அணுக்கள் இரண்டு அணுக்களையுடைய ஒடசிசன் மூலக்கூறுகளுடன் இணைந்து ஓசோன் மூலக்கூறுகளை உருவாக்கின்றன. இந்த வகையில் உருவாகும் ஓசோன் வாயு வளிமண்டலத்தின் மேற்பகுதியில் ஒரு படையாக பூமியைச் சுற்றியுள்ளது

1983-ம் ஆண்டு தென்துருவத்திற்கு ஆராய்ச்சி நடத்துவதற்காகச் சென்ற பிரித்தானிய விஞ்ஞானிகள் குழு ஓசோன் படைமீதும் தனது கவனத்தைத் திருப்பியது. என்ன ஆச்சரியம். ஓசோன் படையில் ஒட்டை விழுந்திருந்தது. விரிவாக ஆராய்ந்தபோது ஆகஸ்ட் மாதத்தில் ஒட்டை தோன்றுவதையும், நவம்பர் மாதத்தில் அந்த ஒட்டை மறைந்துவிடுவதையும் அவதானித்தனர்.

## தகவல்-குறிப்பு-செய்தி-விபரம் விஞ்ஞானம்

பிரித்தானிய விஞ்ஞானிகளின் அந்த அவதானிப்பு விஞ்ஞான உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஏன் தெரியுமா? ஊதாக் கடந்த கதிர்கள் மனிதர்களுக்குப் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்த வல்லன. அவை தோலில் பட்டால் எரிகாயங்கள் ஏற்படும். புற்றுநோயும் வரும். மனிதனில் மட்டுமல்ல, விலங்குகளிலும் பரம்பரை அலகுகளை விகாரமடையச் செய்யும். இந்த மோசமான ஊதாக கடந்த கதிர்கள் பூமியில் விழாது தடுப்பது ஓசோன் படைதான். அதில் ஒட்டை விழுந்தால்?

ஓசோன் படையில் ஒட்டை விழுவது உண்மையா? ஒட்டை விழும்போது ஓசோன் செறிவு எந்த அளவு குறைகிறது.

ஓசோன் ஒட்டை நவம்பர் மாதத்தில் மீண்டும் நிரப்பப்படுவது எப்படி? ஓசோன் ஒட்டையை நிரப்பும் செயன்முறை தொடர்ந்து நீடிக்குமா?

சிலியின் மலைப்பகுதியிலுள்ள உல்லாசப் பயணிகள் விடுதியான 'பன்ர அரீனஸ்' இல் குழுமியிருந்த 120 விஞ்ஞானிகளும் இந்த ஆய்வைத்தான்

[14-ம் பக்கம் பார்க்க]

# பென்குவின்

# இறக்கை இருந்தும் பறக்க முடியாதது; கற்புநெறி தவறாது அற்புத பறவை

பென்குவின் பறவை ஒரு விந்தைப் பறவை இப்பறவை தென் துருவத்திலே மட்டும் வாழும். 'தென் துருவத்துக் கோமாளி' என்றும் இதனை அழைப்பர். விஞ்ஞானிகள் பலவித விந்தைமிகு பறவைகளை வைத்துப் பரிசீலனை செய்தனர் அப்படிப் பரிசீலனை செய்த பறவைகளில் பென்குவின் முக்கியமானதாகும். டாக்டர் வில்லியம் ஜே எல் சிலேடன் 12 ஆண்டுகளாக இந்தப் பறவையைப் பற்றி ஆராய்ந்துள்ளார். அவரது ஆராய்ச்சியின் முடிவு எமக்கு வியப்பை அளிக்கிறது. பென்குவின் இறகுள்ள பறவை என்றாலும் அது பறக்கமாட்டாதென்று கண்டு பிடித்தார்

மனிதர்களைப் போலவே இந்தப் பறவைகளும் கூடி வாழும் குணம் படைத்தவை. சேர்ந்து பழகும் தன்மையுடையவை மீன்களைப் போல நீந்த வல்லவை மணிக்கு 30 மைல் வேகத்தில் சிறுகடற் பிராணிகளைப் போல நீந்துகின்றன வானை நோக்கிப் பறக்க முயற்சிக்கின்றன ஆர்க் ஆர்க் என்று கத்திக்கொண்டு தாவுகின்றன.

இதனைக் கூட்டில் அடைத்துக் காப்பாற்றுவது மிகக் கடினமானதாகும். எனவே பென்குவின் பற்றிய ஆராய்ச்சி அது வாழும் இயற்கைச் சூழலிலேயே ஆராயப்படத்தக்கது

டாக்டர் ஸ்லேடன் 338 பென்குவின்களைப் பிடித்து இலேசான அலுமினிய வளையத்தை அதன் கழுத்தில் மாட்டி அடையாளம் செய்தார் வேறு 1360 பறவைகளைப் பிடித்து வர்ணம் தீட்டிக குறியட்டார். ஒவ்வொரு பறவைக்கும் ஓர் அடையாள எண் இருந்தது. இரண்டாண்டு காலம் இப்பறவைகளை அவதானித்து வந்தார். இதன் காரணமாக பென்குவின் பறவைகள் பற்றி மக்கள் கொண்டிருந்த கருத்துக்களை மறுதலித்தார். புதிய

## புத்தொளி

தகவல்கள் பலவற்றையும் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இவை உணவுக்காக மாரிக் காலத்தில் கடலிலேயே கழிக்கின்றன. கடலில் காணப்படும் சிறு பிராணிகளைத்தான் இவை உணவாகக் கொள்ளுகின்றன. வசந்த காலம் வந்ததும் அவை முட்டை இடுக் குஞ்சு பொரிப்பதற்கு இருநூறு மைல் தூரம் வரை செல்கின்றன பனிக்கட்டியிலும் இவை வாழ வேண்டியிருக்கும் ஒவ்வொரு ஆண்டும் இப்பறவைகள் முட்டை இடுவதற்குப பழைய இடத்திற்கே திரும்பி வருகின்றன.

பென்குவின் பறவைகள் ஆணும் சரி, பெண்ணும் சரி கற்பு நெறி பிறழாதவை. கடலிலிருந்து குஞ்சு பொரிக்குமிடத்திற்குத் திரும்பி வரும் போது அந்த இடம் பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தாலும் இந்த இடத்தை விட்டு அவை போகமாட்டா. பென்குவின் மூன்று வாரங்களில் இரண்டு முட்டைகளை இடுகின்றன. ஆணும் பெண்ணும் வாரக் கணக்கில் உணவில்லாமலிருக்குமாதலால் அடைகாப்பதை ஆணும் பெண்ணும் மாறி மாறிச் செய்கின்றன. ஆண் இரை தேடச் செல்லும் போது பெண்ணும், பெண் இரை தேடச் செல்லும்போது ஆணும் இருவாரத்திற்கு ஒரு முறை அடைகாக்கின்றன குஞ்சு பொரிக்கமுப்பத்தைந்து நாட்கள் வரை அடைகாக்க வேண்டும்.

குஞ்சு பொரித்ததும் அவற்றிற்கு இறைக்கை முளைக்கும் வரை பெற்றோரே இரை கொடுக்கிறார்கள் தங்களுடைய குஞ்சுகளை மட்டும் தான் அவை கவனித்து இரை ஊட்டுகின்றன. இதனையும் டாக்டர் ஸ்லேடன கவனித்தார். குஞ்சு பொரித்து எட்டு அல்லது ஒன்பது வாரமானதும் குஞ்சுகளைப் பெரிய பறவைகள் கைவிட்டு விடுகின்றன.

குஞ்சுகளுக்கு தாயும் தந்தையும் நீந்தக் கற்றுக் கொடுக்கின்றன என்பது சில ஆராய்ச்சியாளர்களின் கருத்து ஆனல் இவை தாமாகவே நீந்தக் கற்றுக் கொள்கின்றன என்று ஸ்லேடன் கூறினார் முகன் முதலாக அவை நீந்தக் கற்றுக் கொள்வது மிக வேடிக்கையாக இருக்குமென்கிறார் ஸ்லேடன்

பென்குவின் பற்றிஆராய்ச்சி ஏன்? இத்தனை சிரமம் எடுப்பானேன? அறிவியலில் இவை பற்றி அறிவதும் சில உண்மைகளை வெளியிடுவதும் ஆராய்ச்சியாளர் கடமையாகின்றது. பென்குவின் பறவைகள் எவ்வாறு வெப்பத்தை வெளியிடாமல் வைத்திருக்கின்றன என்பதைப் பற்றி ஸ்லேடன் ஆராய்ச்சி செய்தார் கால் வழியாக வெப்பம் குறைந்து போவதைத் தடுக்கக் கூடிய ஒப்பற்றதொரு ரத்தக் குழாய் அமைப்பு பென்குவின் பறவைக்கு இருப்பதைக் கண்டார்.

உப்புத் தண்ணீரைக் கொண்டு மட்டும் இவற்றல் எப்படி உயிர் வாழ முடிகிறது என்பதையும் அவர் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். சாதாரண ஜலதோசம் சம்பந்தமான ஆராய்ச்சிக்கும் அவர் பென்குவினைப் பயன்படுத்துகிறார். பென்குவினின் முழுப் பெயர் அடெலி பென்குவின்.

# இலக்கியத்தில் இனியதொடர்

"தள்ளரிய பெருநீதித்
தனியாறு புகமண்டும்
பள்ளமெனும் தகையானைப்
பரதனெனும் பெயரானை"

கம்பரின் முதல் எழுத்தாகிய "க"வையும் திருவள்ளுவரின் முதல் எழுத்தாகிய "தி"யை எடுத்துத் தமிழுக்குக் கதி கம்பரும திருவள்ளுவரும் என்பார்கள். தமிழில் ஒரு கருத்தை அழகாகவும் விரிவாகவும் சொல்ல முடியும் என்பதைக் கம்பரும் அதே நேரத்தில் தமிழில ஒரு கருத்தைச் சுருக்கமாகவும் அழகாகவும் சொல்ல முடியும் என்பதைத் திருவள்ளுவரும் தத்தம் இலக்கியங்கள் மூலம் செய்து காட்டி இருக்கின்றனர்.

"தள்ளரிய பெருநீதி" எனத் தொடங்கும் இத்தொடர் கம்பராமாயணத்தில் உள்ளது.

வேள்வி முடிந்த பின்னர் இராம இலக்குமணரை மிதிலைக்கு அழைத்துச் செல்கிறார் விசுவாமித்திரர். இராம இலக்குமணரின் தோற்றப் பொலிவைக் கண்ட சனக மகாராஜன் "இவர்கள் யார்" என்று விசுவாமித்திரரிடம் வினவ விசுவாமிததிரர் இராம இலக்குமணரின் குலப் பெரு

## புலவர் ம.பார்வதிநாதசிவம்

மையைக் கூறுகையில் பரதன் பற்றிக் கூறுவதாக அமைந்தது இத்தொடர்.

இத்தொடரின் பொருள் "விலக்குதற்கு இயலாத பெரிய நீதியாகிய ஒப்பற்ற ஆறு தன்னிடத்து வந்து சேர நிறைந்திருக்கிற கடல் என்று சொல்லத்தக்கவன் நற்குணங்களை உடைய பரதன்" என்பதாகும்

பரதனின் குண நலன்களைக் கம்பர் இராமாயணத்திற் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளார். ஆனல் இத்தொடரில் கம்பர் குறிப்பிட்டிருக்கும் முறை இராமாயணத்தில் பின்னர் வரும் சந்தர்ப்பங்களில் பரதன் எப்படி நடந்து கொள்வான் என்பதை விளங்கப் பெரிதும் துணை செய்கிறது.

மனிதன் எத்துறையிலும் நீதியை விலக்காது வாழ வேண்டும் பல துறைகளிலும் நீதியைவிலக்காதவர்கள்கூடப் பொருள் என்று வரும் போது நீதியை விலக்கி விடுவது உலகியற்கை, பொருட்பற்று அத்தகைய ஆற்றல் வாய்நதது.

தசரதரிடத்தும் இராமனிடத்தும் பேரன்பு கொண்ட கைகேயியே பொருள் என்று வரும்போது நீதியை விலக்கி விட்டாள். இராமனுக்குச் சொந்தமான அரச செல்வத்தைத் தன்மகனுக்குக் கொடுக்குமாறு தசரதரிடம் வரம் கேட்டபோதே தள்ளரிய பெரு நீதியைத் தள்ளி வைத்து விட்டாள்

கைகேயி தள்ளி வைத்த பெருநீதி பரதனுக்கும் தள்ளரிய பெருநீதியாகவே விளங்குகிறது

தனக்குச் சொந்தமில்லாத அரச செல்வத்தைத் தனது தாய் தனக்காக நீதிபிறழ்ந்து தனக்குச் சொந்தமாக்க முயற்சி செய்தாள் என்பதை அறிந்தபோதே வெகுண்டெழுந்தான். துடிதுடித்தான். தாயன்பையும் வென்றெழுந்தது அவனது நீதி உணர்வு.

நீதியை ஆறெனவும் பரதனை நற்குணங்கள்நிறைந்தகடலெனவும் கூறியதில் மிகப் பெரும் பொருத்தம் உண்டு ஆற்றுநீர் விரைந்து செல்லும் போது குளங்கள் ஓரளவையே ஏற்றுக்கொள்ளும், அதே போல பெரிய குழிகளும் ஓர் அளவையே ஏற்றுக் கொள்ளும். ஆனல் கடல் மட்டுமே ஆற்றுநீர் முழுவதையும்தன்னகத்தே ஏற்றுக் கொள்ளும். அதனல் தான் ஆறு தன்னை முழுமையாக ஏற்கும் கடலை நாடிச் செல்கிறது அதே போலத்தான் நீதியையும் ஒவ்வோர் துறையில் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனல் அவர்களால் எல்லாத்துறைகளிலும் நீதியை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. பரதனல் முழுமையாக ஏற்கமுடிந்தது

நீதியென்கின்ற ஆறு தன்னை முழுமையாக ஏற்றுக் கொள்ளக்கூடியவர் யார் என்று எங்கும் ஆராய்ந்தது ஈற்றில் பரதனே தன்னை முழுமையாக ஏற்பான் என அறிந்தது எனவேதான் தள்ளரியபெருநீதித்தனியாறு தானகவே பரதனிடம் புகுந்தது. புகுந்த நீதியாகிய ஆற்றைப் பரதனென்னும் கடல் விட்டுவிடவில்லை முழுமையாகவே ஏற்றுக் கொண்டது தள்ளரிய பெரு நீதித் தனியாறு புகமண்டும் பள்ளமெனுந் தகையானல் தான் எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் வீற்றிருக்கும் வள்ளலாகிய இராமனுக்குத் தம்பியாக இருக்க முடியும்

தள்ளரிய பெருநீதி என்னும் இத் தொடரைக் கொண்டே விசுவாமித்திரர் பரதனின் குணநலன் அவனது நிகழ்காலம் எதிர்காலம் அனைத்தையும் சனகனுக்கு விளக்கி விட்டார்.

வைத்திய கலசம்

# மாதவிலக்கு வயிற்றுக்குத்து அவஸ்தையா?

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B S (Cey)

★ பள்ளி செல்லும் இளம் பெண்களையும், இளவயது மங்கையரையும் மாதா மாதம் வருத்தி அவர்களது கல்வியையும் தொழிலையும் பெரிதும் இடையூறு செய்வதுதான் இந்த மாத விலக்கு நேரத்தில் ஏற்படும் வயிற்றுக் குத்து.

★ இது இளம் பெண்களையே பீடித்திருக்கிறது ஆனால் அவர்கள் 'பெரிய பிள்ளை'யாகும் போதோ, அல்லது அதைத் தொடரும் ஆரம்பமாதங்களிலோ இருப்பதில்லை. பெரும்பாலும் 'பெரிய பிள்ளை' யாகிய ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்தின் பின்னரே உண்டாகிறது ஒரு சில வருடங்களின் பின் இவ்வயிற்றுக் குத்து தானாகவே குறைந்து, மறைந்து வருகிறது. மணமாகிக், குழந்தை பெறும் வரை இது டலருக்கு நீடிக்கக் கூடும். மணமாகிக் குழந்தை பெருத சிலரில் முப்பது வயதிற்கு மேல் கூட நீடிக்கலாம்.

★ மாதவிலக்கு ஏற்படுவதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன்னரே பெரும்பாலும் ஆரம்பித்து விடும் இவ்வயிற்றுக்குத்து பொதுவாக 12 முதல் 24 மணி நேரத்திற்கு மேல் நீடிப்பதில்லை. அடிவயிற்றின் நடுப் பகுதியில் ஏற்படும் இக்குத்துடன், நாரி உளைவும் ஏற்படலாம் மிகச் சிலரில் தொடைப் பகுதியிலும் உளைவு பரவக் கூடும் ஓங்காளம், வ ந்தி, தலையிடி, சிடுசிடுப்பு, கோபம், மயக்கம் வயிற்றோட்டம் போன்றவையும் சிலருக்கு உண்டாகலாம்.

★ மாதவிலக்கு நேரத்தில் ஏற்படும் அசௌகரியங்கள் பெரும்பாலும் எல்லாப் பெண்களையும் தாக்கக் கூடுமாயினும், அதிகமானவர்களுக்கு அது பொறுத்துக் கொள்ளக் கூடியதாகவும், அவர்களது தினசரி வேலைகளையும், கடமைகளையும், இடையூறு செய்யாத அளவில், குறைவாகவே இருக்கிறது மிகக் குறைவானவர்களுக்கே (சுமார் 5%) இது மிகக் கடுமையாகவும், வைத்திய உதவியை நாடவேண்டிய அளவிலும் இருக்கிறது.

★ பல பெற்றோர்கள், இப்பிரச்சனை உள்ள தமது பெண் குழந்தைகளை, மாதவிலக்கின் போது குளிக்க வேண்டாம் என்றும், பள்ளிக்கூடத்திற்கோ ரியூசனுக்கோ செல்ல வேண்டாம் என்றும்,சைக்கிள்ஓடவேண்டாம் என்றும்தடுக்கிறார்கள். பலவித உணவுக் கட்டுப்பாடுகளையும் விதிக்கிறார்கள். இவை தவறானவை. நீங்கள் உங்கள் மகளுக்கு இத்தகைய கட்டுப்பாடுகளை விதிக்காதீர்கள். அவள் வழமைபோல் குளிக்கவும், விரும்பியதைச் சாப்பிடவும், போதிய அளவு நீர் அருந்தவும், தனது தினசரிக் கடமைகளையும் வேலைகளையும் செய்யவும், போதிய அளவு தூங்கவும் அனுமதியுங்கள்

★ வயிற்றுக் குத்து அதிகமாயிருந்தால் இவ் விரண்டு பரசிட்டமோல் மாத்திரைகளை ஆறு மணிநேரத்துக்கு ஒரு தடவை வீதம் கொடுக்கலாம். பொதுவாக ஒரு நாளைக்கு அல்லது இருநாட்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கலாம். பனடோல், செட்டமோல் ஆகிய பெயர்களில் பரடசிட்டமோல் கடைகளில் கிடைக்கும் இதை வீட்டு வைத்தியமாகச் செய்யலாம், எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

★ மெபனமிக் அசிட்–'பொன்ஸ்டன்' வைத்தியர்களால் இப்பொழுது அதிகம் உபயோகிக்கப்படுகிறது ஆனால் அவற்றை வைத்திய ஆலோசனையுடனேயே உட்கொள்ள வேண்டும்.

★ சில மனோவியல் காரணங்களால் இவ்வகை வயிற்றுக் குத்து மோசமாகலாம். நெருங்கிய உறவினர்களுக்கு இவ்வகை குத்து இருப்பதால் ஏற்படும் உள் பனப்பீதி காரணமாகலாம். 'மாதவிலக்குக் குத்து ஏற்படுவது பாலுறுப்பில் அல்லது இனவிருத்தி உறுப்பில் இருக்கும் இயற்கைக்கு மாறான வேறுபாட்டினாலா?' என்ற தவறான ஐயப்பாட்டினால் உண்டாகும் மனக் கிலேசமும் காரணமாகலாம். எனவே இது பரம்பரை நோயல்ல என்பதையும், உறுப்புகளில் உள்ள வேறுபாடுகளால் இது ஏற்படுவதில்லை என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

★ ஒரு சிலரில், முக்கியமாக நடுத்தர வயதுப் பெண்களில் சிலவகைக் கட்டிகள், வளர்ச்சிகள், அல்லது அழற்சி காரணமாகவும் மாதவிலக்கின்போது வயிற்றுக் குத்து ஏற்படலாம். இவற்றை சில நுணுக்கமான பரிசோதனைகள் மூலம் வைத்தியரால் வேறுபடுத்தி அறியமுடியும்.

★ கருத்தடை மாத்திரைகளை உபயோகிப்பவர்களுக்கு மாதவிலக்கு வயிற்றுக் குத்து ஏற்படுவதில்லை ஏனெனில் இவர்களுக்கு பெண் கருமுட்டை உற்பத்தியாவது தடை செய்யப்படுகிறது. இதை வேறு முறையில் சொல்வதானால் மாத விலக்கின் போது வயிற்றுக் குத்து ஏற்படுகிறவர்களுக்கு மாதாமாதம் கருமுட்டை உற்பத்தியாகிறது. எனவே இக்குத்து உள்ளவர்கள் எதிர்காலத்தில் மணமுடித்த பின் கர்ப்பமுறவும் குழந்தை பெறவும், நிறைந்த வாழ்க்கை வாழவும் வாய்ப்புள்ளவர்கள் என்பது இனிப்பான செய்தியல்லவா?




## புதிய கற்பித்தல் முறை

ஒருநாள் என் பாட்டியார் ஆசிரியரைப் பார்த்து "நம்முடைய பேரன் படித்துப்படித்துத் தொண்டை வறண்டு போகிறதே! இனி மேல் உம்முடைய மகன் கனகசபை பாடம் படிக்கட்டும். அவன் படிக்கிறதைக் கேட்டு என் பேரன் கல்வி கற்றுக்கொள்ளட்டும். என் பேரனுக்குப் பாடந்தெரியா விட்டால் அவனுக்கு அச்சம் உண்டாவதற்காக உமது மகனைப்பலமாக அடியும் என்றார்.

எனக்குப் பாடம் தெரியாத போதெல்லாம் ஆசிரியர் தம்மகன் கனகசபையை அடிப்பார். அவன் இல்லாதபோது ஆசிரியர் தம் முதுகிலும் அடித்துக்கொள்வார். நான் பாடத்தை ஒழுங்காகப் படித்த நேரமுமில்லை. கனகசபை அடிபடாத நேரமுமில்லை.

ஒரு நாள் ஆசிரியர் தம் மகன் கனசபையின் முதுகில் அடித்தபோது அவன் அழுதுகொண்டு "ஐயா! என் முதுகு ஒரு குற்றமும் செய்யவில்லையே! இவ்வளவுபடும் வயிற்றுப் பிழைப்புக்குத்தானே! ஆகையால் வயிற்றிலடியுங்கள்" என்றான்.

## விஞ்ஞானத்தில் புரட்சி

பெரும்புரட்சி ஒன்றையே விஞ்ஞான சிந்தனையில் தோற்றுவித்தவர் மேதை ஐன்ஸ்டீன். வான அண்டங்கள் தொடங்கி மின்னணுக்கள்வரையில் டெலிவிஷன் தொடங்கி வானவெளிப் பிரயாணங்கள் வரையில் அவருடைய சித்தாந்தங்களின் விளைவுகள் விஞ்ஞான ஆராய்ச்சியில் வியாபித்திருக்கின்றன.

அணுகுண்டு சாத்தியமானது அவரது சித்தாந்தத்தின் பலன்தான் இத்தகைய ஐன்ஸ்டீன் இசைப்பிரியர், வயலின் கலைஞர், சமாதான வாதி, காந்தியைப்போற்றியவர் எளிய வாழ்க்கையேஎன்றும்வாழ்ந்தவர். மிகவும் நொடித்த யூதக் குடும்பம் ஒன்றில் பிறந்து தம் அறிவாற்றலால் உலகெலாம் போற்றும் மகோன்னத நிலையை அடைந்தவர்.

இத்தகையவர் அப்பேர்பட்ட விஞ்ஞானப் புரட்சியை செய்துள்ளார் என்பது வியப்பானதே!

## முருகனின் ஆறுமுகங்கள்பற்றி திருமுருகாற்றுப்படை

● பேரிருளால் மறைக்கப்பட்ட உலகம் அவ் இருள் குற்றம் அகன்று விளங்கும் பொருட்டுப் பலவாகிய சுடர்களையும் தோன்றச் செய்தது ஒரு முகம்.

● ஒருமுகம் தன் அன்பர்கள் தன்னை வாழ்த்துங்கால் அதற்குப் பொருந்தி அவர்க்கு இனிமையாக ஒழுகி அவர் வேண்டும் பொருள்களை முடித்துக் கொடுக்கும்.

● மற்றொரு முகம் மந்திரத்தை ஓதுதலோடு மெய்ந்நூல் கூறிய முறையில் பிறழாத சான்றோருடைய வேள்விகட்கு இடையூறு நேராதபடி நினைக்கும்

● ஒரு முகம் நூல்களாற் காட்டமுடியாமல் எஞ்சிய பொருள்களைத் தன் அன்பர்கள் காவலுறும்படி ஆராய்ந்துணர்த்தித் திங்கள் போல திசைவிளக்கும்.

● மற்றொரு முகம் மேற்சென்ற போரிடத்தே நூழிலாட்டி வெகுளியோடு அசுரர் முதலியோரை அழித்து மறக்கள வேள்வியை வேட்டது.

● மற்றொரு முகம் குறவருடைய சிறுமியாகிய வள்ளியோடு மகிழ்தலைப் பொருந்திற்று.

## எதிர்ப்பில் வளருவீர்

உலகில் நாம் ஒரு பட்டம்; நம்மைக்கீழே இழுக்கா விட்டால் நாம் மேலே போக முடியாது. நாம் ஒரு பறவை; காற்று அடிக்கா விட்டால் வெளியில் பறக்க முடியாது. நாம் ஒரு பந்து, பலமாக ஓங்கிக்கீழே அடிக்க வில்லையாயின் நாம் மேலே உயர முடியாது.

எனவேதான் பெர்னாட்ஷா "என்னை எதிர்ப்பு ஆற்றல்கள் படுபாதாளத்தில் தள்ள முயன்றன. அதன் காரணமாகவே நான் வானளாவ உயர்ந்து விட்டேன்" என்று கூறினர்.

இவ்வாறு ஆரம்பத்துன்பம், தோல்வி ஆகியவை கொதிக்கும் மனோநிலை உள்ளவை எவ்விதம் விண்மீன்களை இருட்டு ஒளிவிடச் செய்கிறதோ அதேபோன்று எதிர்ப்புகள் ஒருவனை ஒளி விடச்செய்யும். அவை அவனுடைய மனோ நிலையைக் குளிரச் செய்தவதற்குப் பதிலாகக் கொதிக்கச் செய்து கொண்டிருக்கும்.

## வியப்புக்குரிய 'லக்ஸபான'

'லக்ஸபான' என்ற பெயரை இலங்கையில் அறியாதவர்களே இல்லை எனலாம்! 'லக்ஸபான' என்றால் மின்சாரம்; மின்சாரமென்றால் 'லக்ஸபான' என்னுமளவிற்கு அவ்வளவு பிரபல்யம் பெற்றுவிட்டது அந்த 'லக்சபான' நீர் வீழ்ச்சியின் பெயர்! இந்த நீர் வீழ்ச்சி மூலம் பெறப்படும் மின்சாரம் முழு நாட்டிற்கும் மின்னொளி வழங்குவதுடன் பல்வேறு அத்தியாவசிய தேவைகட்கும் பயன்பட்டு வருகின்றது.

அந்த நீர்வீழ்ச்சிக்கு இந்தப் பெயர் இன்று நேற்று ஏற்பட்டதல்ல; பலநூறு வருடங்களுக்கு முன்பு வழ்ந்த முன்னோர்களால் இடப்பட்ட பெயராகும் அது!

லட்சம் விளக்கு என்ற பொருளைத்தரும் இந்தநீர் வீழ்ச்சி பின்னொரு காலத்தில் நாட்டுமக்களுக்கு லட்சோப லட்சம் (மின்) விளக்குகளை அளிக்கப்போகிறது என்ற தூர நோக்குடன் அதற்கு 'லக்ஸபான' என்று பெயர் சூட்டிய அந்த முதல் மனிதனின் தீர்க்க தரிசனம்தான் வியப்புக்குரியதாயுள்ளது!

கதிர் மாணிக்கம்

## திருமணம் பற்றி வள்ளுவரும் மந்திரமும்

திருவள்ளுவர் திருமணம் பற்றிக் கூறுபோது "மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு" என்கிறார். ஒருவன் ஒருத்தியுடன் கூடிச் சுகம் பெறமட்டும் திருமணம் நிகழ்வதில்லை விருந்தோம்பி, சுற்றம் காத்து நல்லமக்களைப் பெற்றுப் பரபபரையை செழிப்போடு வளரச் செய்யவே திருமணம் நிகழ்கிறது என்கிறார்.

திருவள்ளுவர் சொன்ன இதே கருத்துத்தான் திருமணத்தின்போது அந்தணர் கூறும் மந்திரத்திலும் உள்ளது. பெண்ணின் தந்தை தன் மகளை மணமகனிடம் தாரைவார்க்கும் போது சொல்லும்மந்திரம்:

ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்தம்
ஹேம பீஜம் விபாவஸோ
அநந்தபுண்யம் பலதம்
அதஸ்ஸாந்திம் ப்ரயச்சமே என்பது.

இம் மந்திரத்தின் பொருள்; நன்மக்களைப் பெறுவதற்காகவும், இந்த ஆடவனும் இந்தக் கன்னியும் இணைந்து சகல இல்லற நற்கருமங்களைச் செய்யும் பொருட்டும் நான் இந்தக் கன்னியைத் தனம் செய்கிறேன் என்பதாகும்.

# காலங்கள் மாறும்



கே.எஸ்.ஆனந்தன்

## அத்தியாயம் ஆறு

மகிழ்ச்சி மனித மனங்களை பலவீனப்படுத்தி அவர்களை சிறுபிள்ளைகளாக்கி விடுவதுண்டு. அதனால் என்ன பேசுகிறோம் என்ன செய்கிறோம் என்று தெரியாது கன்னா பின்னா என்று உளற ஆரம்பித்து விடுகின்றனர் துன்பம் மனிதனை சிந்திக்கத் தூண்டுகின்றது. மனத் தெளிவை ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக புதிய பாதைகள் பிறக்க வழி ஏற்படுகின்றது. மனித வாழ்வில் நாம் காணக் கூடிய சாதாரண நிகழ்ச்சிகள் இவை. இவற்றையெல்லாம் அநுபவ வாயிலாக உணர்ந்தவன் மாசிலாமணி. எதையும் சமநிலைப்படுத்தும் மன உணர்வுகளோடு போராடிப் பழக்கப்பட்டு விட்டான். ஆனாலும் புதிய பிரச்சனைகள் தோன்றும் போது அவற்றைப்பற்றி சிந்திக்காதிருக்க அவனால் முடியவில்லை.

தாயின் இழப்பு - அதற்குரிய செலவுகள் மகளின் படிப்பு-பரீட்சை-அவளுடைய வாழ்க்கையின் எதிர்காலம் அவளுடைய அந்தஸ்துக்கேற்ற மாப்பிளைக்கு ஏற்ற சீதனம் இவற்றை எல்லாம் ஒருவாறுசமாளித்துக்கொண்டு போனாலும் அவன் மனத்தை குடையும் ஒரு கேள்வி தொக்கி நின்றுகொண்டேயிருந்தது...?

அருண்மொழியின் அழகு-படிப்பு அந்தஸ்து இவைகளுக்காக அவளை மணம் முடிக்க பலர் முண்டியடித்து முன் வரலாம். அப்படி வருபவர்களின் மனதில்...நினைத்துப் பார்க்கவே அஞ்சினான் மாசிலாமணி.

''யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் வினையேன் அழுதால் உன்னை பெறலாமே'' என்ற மணிவாசகரின் அமுத வாக்கியங்கள் அவன் மனதில் ஊற்றுப் பெருக்காகியது. வாய் விட்டே பாடினான் மனம் நெக்குருகி விழிகள் நீரைப் பெருக்கியது....

முடிவேயில்லா வெட்ட வெளியில் சிறகடித்துப் பறப்பது போன்றும்-சிறகொடிந்து அதல பாதாளத்துக்குள் விழுந்து கொண்டிருப்பது போன்றும் அபூர்வ உணர்வுகள். எவ்வளவு நேரமாய் அப்படிப் பாடிக் கொண்டிருந்தானோ அவனுக்கே நினைவில்லை. மனைவி ஞானம் வந்து 'என்னங்க' என்று அழைத்த போது தான் திடுக்கிட்டு எழுந்தான்.

''ஞானம் ......''என்று தடுமாறினான்.

''என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறீர்கள''?

''ஒன்றுமில்லை''

'எதற்கும் இப்படித்தான் சொல்லுவீர்கள் அப்புறம் அங்கே இங்கே என்று......''

''ஞானம் எல்லாவற்றையும் யோசித்தேன். முடிவு என்னவாகும் என்று தெரியாது ஓர் அந்தர வெளியில் டநப்பது போன்றிருந்தது.''

''எதைப்பற்றி...''

''அருண்மொழியின் எதிர் காலம்பற்றி'

''அதைப்பற்றி ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்! அவள் கொடுத்து வைத்தவள். சுவிஸில் நிக்கிற உங்கடை சின்னக்காவின் பெடியன் மகேந்ரன் கட்ட வேண்டும்மென்று வீட்டுக்கு அடிக்கடி எழுதுறானும். சரசுமச்சாள் சொன்னா அதுக்கென்ன அவன் விரும்பினால் செய்து வைக்கலாம தானே சின்னக்காவோ அத்தானோ உங்களுக்கெதிராக...'' என்று அவள் கூறிக் கொண்டிருக்கும் போதே மாசிலாமணி சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்''

''உன்னைப்போல பைத்தியக்காரி யார் இருக்கிறார்கள்?''

''இப்ப அப்படித்தான் சொல்லுவீங்கள்''

''கோவிக்காதை ஞானம் எதையும் தீர யோசித்துப் பார்க்க வேணும். அவன் எழுதினான் என்பதற்காக நாமும அந்த முடிவுக்கு உடனே வந்திடக் கூடாது. அவன் என் அக்கா பையன் நீ மறுத்தாலும் நான்தான் இந்தச் சம்பந்தத்தை செய்ப விரும்புவேன். ஒரு பிரச்சனையும் வாராது''

''அது எனக்கும் புரியுது எங்கடை சொல்லை மீறி அருண்மொழியும் பேச மாட்டாள். எங்கடை பிள்ளைக்கு வெளிநாடு போற வாய்ப்பும் இருக்கு''

''உண்மைதான் ஆனால் கல்யாணம் செய்துகொள்ளப் போவது அருணமொழியே தவிர-நீயல்ல''

''என்ன சொல்லுறீங்கள்?

'பைத்தியக்காரி அவள் பட்டதாரியாகப் போகிறாள் அவனோ சுருட்டுக்குப்போய் திரிந்தவன் இன்று வெளிநாட்டுக்குப்போய் நாலுகாசு சம்பாதித்துவிட்டால்......''

''அவள்விரும்பினாலும்நீங்கள் விடமாட்டியள்போலிருக்கே''

பணத்தைக் கொண்டு மனிதர்களை எடைபோட்டால் கசாப்புக் கடைக்கு ஆடுமாடு விற்கிறமாதிரித் தான் மனிதர்களையும் விற்க நேரிடும். என்ன இருந்தாலும் அருண்மொழி படித்துப் பட்டம் பெறப்போகின்றாள்-படிப்பிக்கின்றாள் அவள் அழகிற்கும் அறிவிற்கும் ஏற்ற ஒருவனை இறைவன் இனிமேல் தான் படைக்கப் போறானா? அது மட்டுமில்லை ஞானம் நாங்கள் அவளைப்படிப்பில்லாத பெண்ணாக அடுக்களையே தஞ்சம் என வளர்த்திருந்தால் நீ சொன்னதுபோல செய்து வைக்கலாம். அவளும் மறு பேச்சுப் பேசமாட்டாள் என்ன இருந்தாலும் படித்து வேலைபார்க்கிறாள் அவளுக்கு என்று ஒரு மனம்— அவளுக்கு என்று சில உணர்வுகள் அவளிடம் இல்லாமல் போய் விடாது அவள் சம்மதிக்காத எந்த ஓர் விடயத்தையும் நான் அவளிடம் திணிக்கமாட்டேன். அவள் எதிர்காலத்தை அவளே தீர்மானித்துக்கொள்ளட்டும்''

''உங்கள் பிள்ளையைப்பற்றி உங்களிடம் உயர்வான எண்ணங்கள் இருப்பது எனக்குப் புரியாமல் இல்லை. நான் பெற்றவள் நல்லாயிருப்பது எனக்கும் பிடிக்கமில்லையா? ஆனால்...... ஆனால் '' என்று அவள் அழ ஆரம்பித்துவிட்டாள்

''ஞானம். இதுதானே எனக்கு பிடிப்பதில்லை''

''உங்கடை கதையாலை என் பிள்ளைக்கு ஒரு நல்லவாழ்வு கிடைத்தாலும் எங்கடை ஆட்கள் சும்மா இருப்பினமோ''

'பைத்தியம் அவர்கள் என்ன செய்வினம்? நீ ஏன் அப்படி எல்லாம் நினைக்கிறாய்? ஒன்றும் நடக்காது. நீ பயப்படாதே ஞானம்'

''எப்படி பயப்பிடாமல் இருக்க முடியும்? தினம் தினம் நான் செத்து மடிகின்றேன்''

''பைத்தியம் உலகத்தில் தவறு செய்யாதவர் யார் இருக்கின்றார்கள். நாங்கள் என்ன கொலை; கொள்ளை செய்தோமோ? நன்றாக யோசித்துப் பார்ஞானம். அன்று நீ இருந்த சூழ்நிலை. நான் உன்னை ஏமாற்றி விட்டுப் போயிருந் தால் உன் நிலை எப்படி இருந்திருக்கும்? நான் உனக்கு சத்தியம் செய்து தந்தபடி நடந்து கொண்டேன். அருண்மொழியின் தோற்றம் தான் நான் கூட்டிக்கொண்டு வருவதற்கே முதற் காரணம் இல்லையெனில்.........?''

''அதையெல்லாம் இப்ப கதைத்து என்ன பிரயோசனம். விட்டுட்டு நடக்கவேண்டியதைப் பாருங்க. நாளைக்கு ஊருக்கு போறதுதானே?

''நாளைக்குப்போனால்தான் நல்லது. அநதியேட்டி முடித்துகொண்டுளதுக்கும் ஓர் முடிவைத்தேடுவோம். பிள்ளையின் கலயாண விடயமாய் யாருடனும் நீளதுவும் அங்கே கதைத்துப்போடாதை. இவன் பால சிங்கம்தான் சின்னக்காவின் பெடியனுக்கு தூபம் போட்டிருக்கான் என்னதான் நாம் எப்படி நடந்தாலும் விதியை மாற்ற முடியாது ஞானம்'' என்று கூறிவிட்டு எழுந்தவன் முற்றத்துக்கொடியில் காயப் போட்டிருந்த துவாயை எடுத்து உதறி தோளில்போட்டுக்கொண்டு கடைத்தெருவை நோக்கி நடந்தான்.

நந்தாவதிக்கு ஏன் தான் அப்படி நடந்துகொண்டோம் என நினைத்தபோது வெட்கமாகக்கூட இருந்தது ஹோலில் எல்லோரும் கதைத்து கொண்டிருந்த சமயம் அருண்மொழியின் கையைப் பற்றி பின்புறமுள்ள அறைக்கு கூட்டிச் சென்றதும் அவளிடம் அவளுடைய பெற்றோர்பற்றியும், குடும்பம் பற்றியும் விசாரித்து தெரிந்து கொண்டதையும் நினைக்கும்போது தன்னை நினைந்து தானே வெட்கினாள் தான் பெற்ற மகளைவிட அழகும், அறிவும் நிரம்பிய ஒரு பெண்ணிடம் பொறுமை ஏற்படுவதுதான் பெண்ணியல்பாயினும் அவளைத்தான் பெற்ற பிள்ளைபோலப் பாவித்து, உபசரித்து, அன்புகாட்டிய சுபாவம் அவளுடையபரந்த தாய்ப் பாசத்தின் ஒரு தனித்தன்மை போலும் பெண் என்ற நிலையிலிருந்தும் தாய் என்ற உயர் நிலையின் விநோதமான பிரதிபலிப்பாகவிருக்குமோ?

அவர்கள் கதைத்துக் கொண்டிருந்த அறைக்குள் திடீரென நுழைந்த சமரசிங்காவுக்கு என்ன பேசுவது என்று தோன்றவில்லையாயினும் அவருடைய இயல்பான குணம்தான் தலைதூக்கியது.

''ஏன் நந்தா இந்தப் பெண்ணை மட்டும் தான் உனக்கு பிடிச்சிருக்கா?''

''யார் சொன்னது?''

''அப்புறம் நீங்கள் இரண்டு பேரும் மட்டும் ஏன் இங்கே வந்து கதைக்கணும்''

''நீங்கள் பேசிக்கொண்டிருந்தீர்கள் வேறையாரை யாவது கதைக்கவிட்டீர்களா? அதுதான் இவளை மட்டும் அழைத்துக்கொண்டுவந்தேன்.

''சுத்தப்பொய் இந்தப் பெண்ணுடைய அழகு உன்னை மயக்கியிருக்கு அப்படித் தானே? ஏன் அழகில மயங்கி நீ.....?''

''நீங்கள் சுத்தமோசம், சிறுசுகள் இருக்கிற இடத்தில் இப்படியா கதைபபது?'' என்று கூறி அவளையும் அழைத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

ரகு மேலே போய்விட்டான். மற்றவர்கள் சிரித்துக் கதைத்துக்கொண்டிருந்தனர்.

இருளுக்கும், தனிமைக்கும் ஓர் ஒற்றுமையுண்டு. எந்த விடயமும் அகற்குள்ளே தானிருக்கும். வெளிக்குத் தெரிவதில்லை. ஜன்னலில் நின்று வெளியுலகைப் பார்த்துக் கொண்டிருந்த ரகுவின் மனதில் பல்வேறு நினைவோட்டங்கள் திடீரெனத் தன்எழுந்து வந்தகால் அவர்கள் தன்னைப் பற்றி ஏதாவது நினைத்தால் .. நினைத்துவிட்டுப் போகட்டுமே என்று மனதைத் தேற்றிக்கொண்டான்.

அங்கொன்றும், இங்கொன்றுமாக மின்விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. இடைக்கிடையே கார்கள் வெளிச்சத்துடன் சென்று கொண்டிருந்தன மலைநாட்டின் உயர்ந்த இடங்களிலிருந்து பார்த்தால் மேலும், கீழும் அலங்கார சோடனைகளுடன் இயற்கை அன்னை காட்சியளிப்பதைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலிருக்கும். அப்படித்தான் ரகுவரனும் பார்த்துக் கொண்டு நின்றான். எத்தனையோ நாட்கள் இப்படி நின்றிருக்கிறான் என்றைக்கும் சலிப்புத்தட்டியதில்லை.

கீழிருந்து மேலே ஒரு கார் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது இருளைக் குடைந்து கொண்டு ஒளிபாய்ச்சியபடி முன்விளக்குகள் பிரகாசித்தன அந்த வெளிச்சத்தில் பல்கலைக்கழக ஹஸ்டலின் மாடி தெரிந்தது. அதைப்பார்த்ததும் அவனுடைய மனக் குரங்கு அங்கே தாவியது படிக்கும்போது அந்த விடுதியில் மாணவர்கள் அவனை எப்படியெல்லாம் கேலிபண்ணியிருப்பார்கள் அவன் வேதனைப்பட்டிருப்பான். ஆனாலும் அதில் ஒரு தெளிவு, முதிர்ச்சி,

## சமுக நவீனம்

நம்பிக்கை, மனோதிடம் யாவையும் பெற்றுக்கொண்டான்

ஒருநாள் சகமாணவர்களின் கேலியும், தொல்லையும் உச்சக்கட்டத்தையடைந்து இருந்தது அன்றுடன் அவர்கள் தொல்லையும் நீங்கிவிட்டிருந்தது அதை நினைத்தால் இப்பவும் அழுகையும், சிரிப்பும் ஒன்றாய் வரும் ரகுவிற்கு.

''டேய் ரகு என்னதான் இப்படிப் படிக்கிறாய் நாங்கள் படிக்காத படிப்பாடா ''ஒருவன் அவன்படிக்க குறிப்புப் புத்தகத்தைப்பிடுங்கி எடுத்துக்கொண்டே மேசைமீது உட்கார்ந்துகொண்டான்.

''இவனா? இவன் படிக்கவில்லையடா சிறீ, புத்தகத்தை அரித்துத்தின்னும் புழுமாதிரி அரிக்கிறான்.

''கோபால் இவன்ரை பர்சனலிட்டி''எனக்கிருந்தா இந்த வாசிற்றியில் அரைவாசி அழகிகளை என் காலடியில் சிக்க வைத்திருப்பேன் ''இன்னொருவன்.

''எதுக்கும் அனுபவிக்கக் கொடுத்து வைச்சிருக்கணும். இவனுக்கு பர்சனலிட்டியைக் கொடுத்த கடவுள் மற்றைய உணர்ச்சிகளை அறுத்துவிட்டார்'' என்றான் முஸ்லீம் இளைஞன அகமது.

''என்னடா இங்கே கலாட்டா?'' என்று கேட்டுக் கொண்டே வந்த மரியதாசுடன் மேலும் நான்குபேர் சேர்ந்து உள்ளே நுழைந்தனர்.

'''அடபாவமே இவனை துன்புறுத்துவதே உங்களுக்கு பொழுது போக்காகி விட்டது. ஏண்டா ரகு இவங்களுக்கு இரண்டு 'டிசும், டிசும்' கொடுத்து அனுப்பத் தெரியாதா? இந்த உடம்பை வைச்சுக்கிட்டு ஏண்டா இப்படி இருக்கிறே'' என்றான் தேகபுஷ்டியுடன் விளங்கிய சுதகர்

எல்லாவற்றிற்கும் ஒரு புன்னகையே பதிலாக பார்த்துக் கொண்டிருந்தான் ரகு

''மச்சான் இவனைக் கோபித்து பயனில்லை. இவனுக்கு சூடு சொரணையே இல்லையடா சிறிதான் கூறிறன்

''ஏன்டா அப்படிச் சொல்லுகிறாய்?'' மரியதாஸ்

தமிழனாய் பிறந்து ஒரு சிங்கள முதலாளியின் தயவில் வாழ்ப்பவனுக்கு எப்படியடா ரோஷம், மானம், சூடு, சொரணையிருக்கும் '' என்று சிறியே அவனுடைய பலவீனமான பகுதியில் தாக்கி விட்டான்.

''அது இல்லாமலிருக்கலாம் பரவாயில்லை இவன் ஏண்டா இப்படி ஒதுங்கியே இருக்கிறான்'' மரியதாஸ்

''ஓசியில் சாப்பாடு- படிப்பு இப்படியிருப்பவன் வேறு எப்படியடா இருக்கமுடியும்.

''சமரசிங்கா பெரிய முதலாளியாச்சே அவருடைய பணம் சும்மா கிடைக்குது நல்லா 'என்ஜோய்' பண்ணுறதை விட்டிட்டு இப்படிக் கஞ்சத்தனம் கூடாதடா ரகு'' என்றான் சிங்கள நண்பன் காமினி.

ஏன்டா காமினி சமரசிங்காவிற்கு பெட்டைகளிருக்கா?'' மரியதாஸ்.

''டேய் தாஸ் அந்தாளுக்கு ஒரே ஒரு பெண்தாண்டா ஆனால் கொஞ்சம் பிளாக் ஒரு 'தேட்டிவைவ்' போடலாம்டா'' காமினி

''அதுதான்டா இவன் இப்படி சுருண்டு கிடக்கிறன். அந்தப் பெண்ணையும், சொத்தையும் அடையத்தாண்டா இவன் இப்படி வேடம் போடுகிறான்'' சிறி.

[14-ம் பக்கம் பார்க்க]

# மூவேந்தர் புகழ்பாடும் முத்தொள்ளாயிரம்

**இலக்கியக் கட்டுரை**

முடியுடை மூவேந்தரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட ஓர் ஒப்பற்ற சிற்றிலக்கியமே முத்தொள்ளாயிரமாகும். இந் நூல் எழுந்த காலம் பற்றி இலக்கிய ஆய்வாளரிடையே கருத்துவேறுபாடுகள் உள. இந் நூலாசிரியர் சங்கச் சான்றோருட் பிற்பட்ட காலத்தவர் எனக் கருதும் சிலர் இது கி பி 5-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தோன்றியிருக்கலாம் எனக் கருதுகின்றனர். வேறு சிலர் கி. பி. 6-ம் நூற்றுண்டிற்கும், 9- ம் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலமாகிய பல்லவராட்சிக் காலத்தில் தோன்றியதெனக் கூறியுள்ளனர்.

இந் நூல் ஆசிரியர் பெயரும்,வரலாறும் தெரியவில்லை. ஆனுல் சிவன், முருகன், பற்றிய குறிப்புகள் முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் சிலவற்றில் இடம் பெறலால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவராக இருந்திருக்கலாம்எனக் கொள்ளலாம்.

''மடங்கா மயில் ஊர்தி
மைந்தனை நாளும்
கடம்பப் பூக்கொண்
டேத்தி ...'' என்ற பாடல்

அடிகள்இதனைத் தெளிவுபடுத்தும்நீதிக்கருத்துக்களைப் புலப்படுத்துதற்குச் சங்கமருவியகால அறநூல்களில் பயன்படுத்திய வெண்பா யாப்பினை முத்தொள்ளாயிர ஆசிரியர் காதலையும், வீரத்தையும் பாடுதற்குக் கையாண்டிருப்பது அவர் ஒரு தலைசிறந்த புலவர் என்பதைக் காட்டுகின்றது. ஏனெனில் காதல், விரம், இரக்கம், துன்பம் போன்ற பல்வேறு உணர்ச்சிகளை வெண்பாவில் புலப்படுத்துவது எல்லார்க்கும் எளிதன்று.

## இன்றுள்ள பாடல்கள்

முத்தொள்ளாயிரம் சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர் பற்றித் தனித்தனி தொள்ளாயிரம் பாடல்களாக மொத்தம் 2700 பாடல்களைக் கொண்டதெனச் சிலர் கூறுவர். ஆனுல் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் சேர, சோழ, பாண்டியர் ஒவ்வொருவருக்கும் 300 பாடல்கள் வீதம் 900 பாடல்களே இருந்திருக்க வேண்டுமென்று கொள்வர்,மூலநூலின் மொத்தப் பாடல்கள் எவ்வளவாக இருப்பினும் இன்று கிடைக்கப் பெற்றவை மிகச் சிலவே. மறைந்த செய்யுட்கள் போக இதற்குரிய 108 செய்யுட்கள் மட்டும் புறத்திரட்டில் தொகுக்கப்பட்டுள்ளன இவற்றில் சில முத்தொள்ளாயிரத்திற்குரியவை எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கின்றது. இந் நூலுக்குத் தெளிவான விளக்கமும், உரையும் எழுதிப் பதிப்பித்த இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் இத்தகைய ஐயப்பாட்டினைத் தரக்கூடிய பாடல்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

காவிய நலங் கனிந்து விளங்கும் முத்தொள்ளாயிரம் ஓர் இலக்கிய சாகரம். அதற்குள் மறைந்து கிடப்பதோ கிடைத்தற்கரிய முத்துக்கள். அவை யாவும் ஆசிரியரின் கற்பனையில் உதித்த சொல்லோவியங்கள். அவை பயில்தோறும் நூனயம் பயப்பன.

## காதலும் வீரமும்

கவிச்சக்கரவர்த்திகள் பலர் தாம் பாடிய காவியங்களிலும், பிரபந்தங்களிலும் காதலையும், வீரத்தையும் ஒருங்கே பாடியிருப்பது போல இந் நூலாசிரியரும் மூவேந்தரின் வீரத்தையும் அவர்கள் மீது மகளிர் கொண்ட காதலையும் சுவைபடப் பாடியுள்ளார். மன்னரின் தோற்றப் பொலிவு, வீரச்செயல், வென்றி, யானைமறம், குதிரையின் வேகம், எயில்கோடல், நாட்டு நகரவளம், படைப்புலமளித்தல் பற்றிய பாடல்கள் மன்னரின் வீரத்தை எடுத்துக்காட்டுவன. மன்னன் வீதியில் உலாவரும்போது அவனைக்கண்டு மயங்குதல், தோழிக்குரைத்தல், தூதனுப்புதல், பிடியொடும், குதிரையொடும் பேசுதல் முதலியன தலைவியின் காதலையும், ஆற்ருமையையும் வெளிப்படுத்துவன.

காதலைப்பற்றிய பாடல்களில் கைக்கிளைத்திணை பற்றியனவே அதிகம் உள. எனவே மூல நூலிலும் கைக்கிளைச் செய்யுள்களே அதிகம் இருந்திருக்க வேண்டுமென்று பேராசிரியர் எஸ் வையாபுரிப் பிள்ளை அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.தொல்காப்பியச் சூத்திரத்தின் உரையில் பேராசிரியர் என்பவர் ''கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் பலவாயினும்'' என்று எழுதியிருப்பதும் மனம் கொள்ளத்தக்கதாகும்.

சி. து. இராஜேந்திரம் B. A., M.Ed.

## சேரனைப் பாடியது

இந் நூலைப் படிப்பவர் இதன் கவிச் சுவையில் ஈடுபடாது இருத்தல் இயலாது. அத்துணை கற்பனைச் செறிவுள்ள இனிய பாடல்களைக் கொண்டது.படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. தொகுக்கப்பெற்ற பாடல்களில் அதிகமானவை பாண்டிய மன்னன் பற்றியதாகும். மூவேந்தரின் சிறப்பினையும், பெருமையினையும் ஆசிரியர் ஒரே பாங்கில் பாடியிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

சேரனது புகழ் உரைக்க வந்த ஆசிரியர் அவனது நாட்டுவளம் பற்றிக் கூறுகின்ருர்.

''அள்ளல் பழனத்து அரக்
காம்பல் வாய் அவிழ
வெள்ளம் தீப்பட்ட தென
வெரீ இப்—புள்ளினம் தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்
கும் கவ்வை உடைத்
தரோ
நச்சிலை வேல் கைக்கோதை
நாடு.''

சேரநாட்டின் ஒரு பகுதியில் சேருக இருக்கும் வயல்களே அதிகம். அவ்வயல்களைச் சூழவுள்ள குளங்களிலே முளைத்தெழுந்த செவ்வாம்பல் முகை அவிழ்த்தன. அதைக்கண்ட பறவைகள் நீருக்குள் நெருப்புத்தான் எழுந்து விட்டது என்று அஞ்சித் தம் குஞ்சுகளைச் சிறகுகளால் அணைத்து ஆரவாரிக்கின்றன. இவ்வாறு பறவைகளின் ஆரவாரமே சேரநாட்டில் கேட்கும். கோதையின் நச்சு வேலுக்கு அஞ்சிய பகையரசரின் ஆரவாரம் கேட்பதில்லை. இவ்வாறு நாட்டு வளத்தைமட்டுமன்றி சேரமன்னனின் வீரத்தையும் நீதி பிறழாத செம்மையான ஆட்சியையும் ஆசிரியர் மிகத் துல்லியமாகப் புலப்படுத்திவிடுகின்ருர்

இவ்வாறு யாவரும் போற்ற அரசு செய்த சேரமன்னனே அஞ்சா நெஞ்சினன். பெருவீரன். அவனுக்குத் திறை செலுத்த மறுத்தனர் சில சிற்றரசர். மறுத்தது மட்டுமன்றி அவனுடன் போரிடவும் துணிந்து வந்துவிட்டனர். அவர்களை விளித்து சேரனது படைத்தலைவன் கூறுகின்ருன்.

'பல் யானை மன்னீர்படுதிறை
தந்துய்ம்மின்
மல்லல் நெடுமதில் வாங்கு
வில்—பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோ
ரும் வானவன்
வில் எழுதிவாழ்வார் விசும்பு'

''சேரனது வில்லெழுதி விண்ணவர் கூட எம் மன்னனுக்கு அடிபணிந்து நிற்கின்றனர். நீங்கள் எம்மாத்திரம்? நீங்கள் உயிர் பிழைக்க விரும்பின் சேரனுக்குக் கொடுக்க வேண்டிய கப்பத்தைச் செலுத்திச் சேரன் வில்லினை உங்கள் மதில் மீது எழுதி அவனது தலைமையை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்ருன் படைத்தலைவன். சேரன் வீரன் மட்டுமல்லன் கருணையுமுடையவன். இரத்தக் களரியொன்று ஏற்படுவதைத் தடுக்குமுகமாகவே படைத்தலைவன் மூலமாகப் பகையரசரைப் பணிந்துபோகும்படி வேண்டிக் கொண்டான்.

## சேரனின் களிறு

சேர மண்ணின் மன்னன் மட்டுமன்றிஅவனதுகளிறுகூட ஆற்றல் உடையதாகவே இருந்தது ஒருமுறை சேரன் தன் பகைவரை வெற்றிகண்டு போர் முடித்து வந்தான். ஆனுல் அவனது சீற்றம் இன்னும் தணியவில்லை. கண்கள் சிவந்தே இருந்தன. அவனுடைய களிறுகூட அவனைப் போன்றே காணப்பட்டது. போர்களத்தில் மாற்றரின் வெண்கொற்றக் குடைகளைப் பறித்தெறிந்தஆத்திரம் அடங்காத களிறு தன் பழக்க தோஷத்தால் இரவு வேளையில் விண்ணில் தவழும் வெண்ணிலவை வெண்கொற்றக் குடையெனத் தப்புக் கணக்குப் போட்டுஅதனைப் பற்றி இழுக்க விண்ணை நோக்கித்தன் கையை நீட்டுமாம்.

''வீறு சால் மன்னர் விரி
தாம வெண்குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால்
—தேருது

[14–ம் பக்கம் பார்க்க]

# இலங்கையின் முதல் பொதுத்தேர்தல்

1947-ம் ஆண்டு இலங்கையில் நடந்த முதற் பொதுத் தேர்தல் ஒரே நாளில் நடைபெறவில்லை. தேர்தல் பல நாட்களாக நடைபெற்றது 1947 ஆகஸ்ட் மாதம் 23- ந் திகதி ஆரம்பித்த பொதுத் தேர்தல் செப்டம்பர் 20 ந் திகதி வரை நடைபெற்றது தேர்தலின் கடைசி முடிவுகள் செப்டம்பர் 23–ம் திகதியே வெளியாயின. இத்தேர்தலில் 8 அரசியல் கட்சிகளும் சுயேட்சையாளர்களும் போட்டியிட்டனர். அப்போதைய பாராளுமன்றத்தில் 101 பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். இவர்களில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 95, மிகுதி ஆறு பேரும் நியமன உறுப்பினர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும், சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்த போல்ஷிவிக், லெனினிஸ்ட் கட்சியும், தமிழ் காங்கிரஸும் பலம் வாய்ந்த அரசியல் கட்சிகளாக அப்போது விளங்கின. முதன் முறையாக இலங்கை இந்திய காங்கிரஸும் தேர்தல் களத்தில் குதித்தது ஐக்கிய தேசியக் கட்சி திரு. டி. எஸ் சேனநாயக்கா தலைமையில் தேர்தலில் போட்டியிட்டது. ஐ தே. கட்சி 76 தொகுதிகளில் 98 வேட்பாளர்களைப் போட்டிக்கு நிறுத்தியது. லங்கா சமசமாஜக் கட்சி டாக்டர் என் எம். பெரேரா தலைமையில் 28 தொகுதிகளில் போட்டியிட்டது–

டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா தலைமையில் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி பத்து வேட்பாளர்களைப் பத்துத் தொகுதிகளில் நிறுத்தியது. தமிழ் காங்கிரஸ் தலைமைப் பதவியை திரு ஜி ஜி பொன்னம்பலம் ஏற்றிருந்தார் அவரது தமிழ் காங்கிரஸ் கட்சி ஒன்பது தொகுதிகளில் ஒன்பது வேட்பாளர்களை நிறுத்தியது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 13 வேட்பாளர்களை 13 தொகுதிகளில் நிறுத்தியது. இலங்கை இந்திய காங்கிரஸ் ஏழு வேட்பாளர்களைப் போட்டியிட வைத்தது. சுதந்திர சோஷலிசக் கட்சி சார்பில் ஏழு பேர் போட்டியிட்டனர்.

**கண்ணோட்டம்**

அக்காலத்தில் தொழிற் சங்க வானில் விடிவெள்ளியாகப் பிரகாசித்த திரு. ஏ. ஈ. குணசிங்காதொழிற் கட்சியின் சார்பில்ஒன்பது தொகுதிகளில் வேட்பாளர்கள் நிறுத்தியிருந்தார் சுமார் 75 தொகுதிகளில் சுயேட்சை வேட்பாளர்கள் 175 பேர் போட்டியிட்டனர்.

இருபத்தெட்டு நாட்களாக நடைபெற்ற பொதுத் தேர்தலின் முடிவு வெளிவந்ததும் ஐ தே. கட்சி 42 இடங்களில் வெற்றிவாகை சூடியது திரு. டி. எஸ் சேனநாயக்கா இலங்கையின் முதலாவது பிரதமராக வேண்டுமானுல் ஏனைய கட்சிகளின் உதவியை நாட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார். லங்கா சமசமாஜக் கட்சி 10 தொகுதிகளிலும், போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி 5 தொகுதிகளிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 3 தொகுதிகளிலும் தொழிற் கட்சி ஒரு தொகுதியிலும் வெற்றியீட்டின.

தமிழ் காங்கிரஸ் கட்சி 7 பாராளுமன்ற உறுப்பினர்களையும் இலங்கை இந்திய காங்கிரஸ் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களையும் தமதாக்கிக் கொண்டன. சுயேட்சை உறுப்பினர்கள் இருபது பேர் வெற்றி பெற்றனர். சுதந்திர சோஷலிஸ்டுகளில் ஒருவர் பாராளுமன்றப் பிரதிநிதியானுர்.

1947 பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்களின்முழுத் தொகை 300 ஆகும் இவர்களில் புத்தளத்தில் போட்டியிட்ட வேட்பாளர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார் தேர்தல் களத்தில் இறங்கிய ஐ தே. கட்சி 7,44, 054 வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றது. லங்கா சமசமாஜக்கட்சி கட்சி அடிப்படையில் 2,04,020 வாக்காளரின் ஆதரவைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றது. போல்ஷிவிக் லெனினிஸ்ட்கட்சி பெற்ற மொத்த வாக்குகள் 1,13,'913 ஆகும்.

வடக்கிலும் கிழக்கிலும் சக்தி வாய்ந்த கட்சியாகத் திகழ்ந்த தமிழ்க் காங்கிரஸ் 82,499 வாக்காளாரின் ஆதரவைப் பெற்றது. இலங்கை இந்தியக் காங்கிரசிற்குக் கிடைத்த வாக்குகள் 72,230 ஆகும். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 13 இடங்களில் போட்டியிட்டு மூன்று ஆசனங்களைப் பெற்றதோடு 70,361 வாக்குகளையும் பெற்றுக் கொண்டது.

இத்தேர்தலில் பல புதுமுகங்கள் பாராளுமன்றம் வந்தனர், அப்போது அமைச்சரவைக்கு வந்த புதுமுகங்களில் திரு.ஜே. ஆர் ஜெயவர்த்தனுவும் டட்லி சேனநாயக்கவும் குறிப்பிடத்தக்கவர்கள் 1930 ஆம் ஆண்டிலிருந்தே தொழிலாளர் மத்தியில் செல்வாக்குடன் விளங்கிய திரு.ஏ ஈ. குணசிங்கா அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

**புந்தொளி**

தமிழ் காங்கிரசின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் வவுனியாவில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி. சுந்தரலிங்கமும், மன்னாரில் ஐ.தே. கட்சி வேட்பாளரை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்ற சுயேட்சை வேட்பாளர் சி.சிற்றம்பலமும் அமைச்சரவையில் இடம் பெற்றனர்.

இவர்களில் சி.சுந்தரலிங்கம் பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் நெருங்கிய நண்பராக விளங்கினுர். ''அரசர் சேனநாயக்காவின் தலைமைப் புரோகிதர்'' என அழைக்கப்பட்டவர் சுந்தரலிங்கம் அவர்கள் கணிதப் பேராசிரியராக இருந்த காலத்திலிருந்து டி எஸ்.ஸிக்கு அரசியலில் வழி நடத்தியவர் இவர்.

செனற் சபை மூலமாக இருவர் அமைச்சரவைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். திரு ஒலிவர் குணதிலக்காவும் கலாநிதி லலித் ராஜபக்ஸாவும் இவர்களிருவராவர்.

1937 ம் ஆண்டு செப்டம்பர் 24 த்திகதி கண்டி மாநகர் விழாக்கோலம் பூண்டது கண்டியிலுள்ள அரச மண்டபத்தில் இலங்கைத்தேசாதிபதி சேர் ஹென்றி மொங்மேசன் மூர் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் திரு டி எஸ் சேனநாயக்காவிடம் இலங்கைப் பாராளுமன்றத்தின் முதலாவது பிரதமர் பதவியைக் கையளித்தார்.

## தொடர் காவியம்

# காவேரி

காரை. செ. சுந்தரம்பிள்ளை

### 6

## கண்ணன்

கொழும்பி லிருந்தொரு வாகனம் - கண்ணைக்
கொள்ளை யடிக்கும் எழிலுடன்
வழமை போலே புறப்பட்டது - பல
வர்த்தகர் சுற்றவர் மற்றவர்
அழகு மிகும் இளங் கன்னியர் - என
யாவரும் யாழ்நகர் நோக்கியே
தொழுது பயணம் தொடங்கினர் - மழைத்
தூறலும் ஆரம்பமானது.

அடுத்த கிழமை அரேபியா - செல்லும்
ஆயத்தம் யாவும் முடிந்ததால்
விடுத்தவோர் அம்பென மீண்டுமே - இனி
வேண்டுவ செய்த பிற்பா டொரு
படுத்த படுக்கையில் உள்ளதன் -தந்தை
பாதம் வணங்கி விடைபெற
எடுத்த முடிவுடன் கண்ணனும் -பஸ்ஸில்
ஏறிப் பயணம் தொடர்ந்தனன்

காற்றென வாகனம் சென்றது -சில
காதம் கழிந்தபிற் பாடு; முன்
சாற்றிய வண்ணமே நின்றது -வந்த
சாரதி யோடு பயணிகள்
ஆற்றினர் கொண்ட பசியினை -பின்னர்
ஆனை மடுவும் கடந்தனர்
ஈற்றினில் புத்தளம் தாண்டியே -நடு
இரவினில் வில்பத் தடைந்தனர்

வானத்திலே மின்னல் பூத்தது இடி
வானைப் பிளந்து கர்ச்சித்தது
கானத் துடன் மழை பெய்தது புயற்
காற்றும் சுழற்றி யடித்தது
மோனத் திருந்த மரமெலாம் -மிகு
மூர்க்கத் துடன் நடமாடின
பூனை யொன்று குறுக்கிட் டது-கரும்
பூதங்கள் போலிருள் சூழ்ந்தது

சாக்குருவி கத்த லானது -நரி
தன்குரல் விட டுளை யிட்ட து
காக்கையும் ஈனக் குரலிலே-எங்கோ
கத்திய வண்ண மிருந்தது
கூக்குர லிட்டது காட்டுநாய் -உடன்
கூடவே கூகை குழறிற்று
தீக்கன வொன்றினைக் கண்டுமே-கண்ணன்
திடுக்கிட் டெழுந்து திகைத்தனன்

வீதியை மீறியே வெள்ளமும் -அங்கே
வேகமாய்ப் பாய்ந்திட லானது
பாதி வழியினில் சக்கரம் -சென்ற
பாதையை விட்டு விலகியே
வாதம் புரிந்திட லானது -அதை
மழையில் நனைந்தவர் தள்ளிப்பின்
ஓதும் பயணம் தொடர்ந்தனர் -குளிர்
ஒன்றினால் மட்டும் நடுங்கினர்

வில்பத்தைத் தாண்டும் பொழுதிலே -மிக
வேகமாய் வந்த ஜீப் ஒன்றிலே
புல்லர்கள் கூட்டமாய் வந்தனர் -கையில்
பிடித்த துவக்குடன் நின்றனர்
எல்லோரும காசு நகையெலாம் -இதோ
இப்பொழுதே தாரு மென்றனர்
கொல்லுவோம் யாரும் மறைத்திடில் -என்று
கூறினர், யாவும் கொடுத்தனர்

ஆண்களே கீழே இறங்குங்கள்- கையை
ஆகாயம் நோக்கி உயர்த்துங்கள்
நாங்களே இந்நாட்டு மன்னர்கள்- உம்மை
நாயினைப் போலவே கொல்லுவோம்
நீங்கள் நினைப்பது போலவே- இந்த
நிலத்தில் நடமாட லாகுமா
வாங்கடா என்றே உறுமினர்- சாட்டு
வழியில் நிரையாய் நிறுத்தினர்.

பெண்கள் அலறித் துடித்தனர்- சிறு
பிள்ளைகளு மோல மிட்டனர்
கண்கள் கலங்கிய வண்ணமாய்- சிலர்
கைகட டி வாய்பொத்தி நின்றனர்
புண்படு முள்ளத்த ராகவே- அப்
புலையரின் முன்னே யிருந்தவர்
என்படும் என்படும் எம்முயிர்- என
ஏங்கிய வண்ணம் நடுங்கினர்.

புல்லர் சுடவும் தொடங்கினர்- அந்த
போது வலிமைசேர் கண்ணனும்
வல்லமை யோடவர் துப்பாக்கி- ஒன்றை
வலிதிற் பிடுங்கியே சுட்டனன்
கொலைப்பட் டாரிரு தீயர்கள்- மற்றக்
கொலைஞரோ காலையைத் தீர்த்தனர்
செவ்வப் புதல்வன் மறைந்தனன்- அவன்
சீர்த்தியால் நாட்டில் உயர்ந்தனன்.

[தொடரும்]

# நெல்லி - சர்வநோய் நிவாரணி

ஒருமனிதருடைய ஆரோக்கியத்திற்கு மூலகாரணம் அவனுடைய உடம்பில் ஓடும் சுத்த இரத்தந்தான் ரத்தம் கெட்டு விட்டால் வியாதிகள் உண்டாகின்றன. அவற்றைத் தடுக்கும் சக்தி அல்லது எதிர்க்கும் சக்தி சரீரத்தில் குறைந்து விடுகிறது இதன் விளைவு இளமையிலேயே முதுமை தென்படுகிறது. குறித்த அந்நியப் பொருளே அமிலம் என்பது மனிதனின் ஆரோக்கியத்துக்கு கடுமையான எதிரியாக யூரிக்கமிலம் இருக்கிறது.

ஆப்பிள், ஒலிவ், நெல்லிக்காய் இந்த மூன்று பொருள்களும் ஆரோக்கியத்துக்கு திங்கு விளைவிக்கும் பொருள்களை அப்புறப்படுத்தும் சக்தி வாய்ந்தவை என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். முதல் இரண்டு வஸ்துக்களைக் காட்டிலும், நெல்லிக்காய் நம் தேசத்தில் எக்காலத்திலும், எவ்விடத்திலும்சுலபமாகக் கிடைக்கிறது.

ஆயிரம் வருடங்களுக்கு முன்பே ஆயுர்வேத சாஸ்திரத்தில் நெல்லிக்காயை மிகவும் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். இதை ஒரு ரசாயனம் என்றே சொல்லி இருக்கிறார்கள். எந்த வஸ்து எக்காலத்திலும் எந்த உருவத்திலும் எல்லோருக்கும் உபயோகமுள்ளதாக இருக்கிறதோ, எது சரீரத்தில் ஒவ்வோர் அங்கத்துக்கும் புத்துயிர் தருகிறதோ, எது எல்லா வியாதிகளையும் தீர்க்கும் சக்தி வாய்ந்ததோ எது ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் தரக்கூடியதோ அதை ரசாயனம் என்கிறார்கள். இந்த எல்லாக் குணங்களும் பொருந்தியது நெல்லிக்காய். ஆகையால் இதை ரசாயனம் என்று சொன்னால் மிகையாது.

இந்தியப் பெண்மணிகள் நெல்லிக்காயைஐசுவரியத்தின் சின்னம் என்றும், ஆரோக்கியத்தின்சௌபாக்கியம்என்றும் கருதி கார்த்திகை மாதத்தில் வரும்உத்தான துவாதசியன்று நெல்லிக்கிளையை துளசிக்கன்றுடன் வைத்துப் பூசிக்கிறார்கள். சரீரத்தை பலப்படுத்தும் ஆறு சுவைகளில் இனிப்பு, புளிப்பு, கைப்பு, துவர்ப்பு, உவர்ப்பு ஆகிய ஐந்தும் நெல்லிக் காயில் உள்ளது.

இனிப்பும், உவர்ப்பும் பித்தத்தையும், புளிப்பு வாயுவையும், துவர்ப்பும் கைப்பும் கபத்தையும் போக்கக் கூடியவை. வாத, பித்த, கபம் ஆகிய மூன்று தோஷங்களையும் போக்கக் கூடிய சக்திநெல்லிக்காயில் இருப்பதால் இது மிகவும் சிறந்தது. ஆயுர்வேத வைத்தியத்திற்கு இது மிகவும் ஏற்றது இதில், ஏ. பி. சி., ஆகிய 3 விட்டமின்கள் இருக்கின்றன. மற்றக்காய் கறிகளைப்போலன்றி நெல்லிக்காய் வாடினாலும் விட்டமின் குன்றுவதில்லை. 50 மில்லிகிராம் சி விட்டமினும் ½ அவுன்ஸ் நெல்லிக்காய் ரசத்தில் கிடைக்கிறது. உலர்ந்த நெல்லியைவிட பச்சை நெல்லிக்காய் உபயோகிப்பது நல்லது.

நெல்லிக்காயை அரைத்து உருண்டையாக உருட்டி உலர வைத்து, அந்த மாத்திரையைச் சாப்பிட்டால் ஆறாத காயங்கள் நன்றாகக் குணமாகும். பல்லில் ஏற்படும பயோரியா வியாதிக்கு மிகவும் ஏற்றது நெல்லி இலையின் சாற்றைக் கொப்பளித்து, நெல்லிக்காயை உடகொண்டால் இநத வியாதி சீக்கிரம் குணமாகிவிடும். குழந்தைகளுக்குக் கோணலாக முளைதத பற்களுக்கும், காலத்தில் முளைக்காத பற்களுக்குங்கூட நெல்லிக்காய் மிகச் சிறந்தது. கர்ப்பிணிகள் முதலிலிருந்து 9 மாதம் வரையில் காலையிலும், மாலையிலும், ஒவ்வொரு நெல்லிக்காய் அல்லது அந்த அளவு நெல்லி முள்ளி உட்கொண்டால் அந்தச் சமயத்தில் ஏற்படும் வாந்தி நின்று நன்றாகப் பசி எடுக்கும்.

நெல்லிக்காய் சாப்பிடுவதனால், இரும்பும் சுண்ணாம்பும் சரீரத்துக்குச் சேர்ந்து கர்ப்பிணிகள் ஆரோக்கியமுள்ளவர்களாகிறார்கள். ரத்த விருத்தியும் ஏற்படுகிறது. தவிர கர்ப்பத்தில் இருக்கும் சிசுவுக்கும் நல்ல புஷ்டிகரமான ஆகாரம் கிடைக்கிறது. ஒரு பெரிய நெல்லிக்காய், முட்டையை விட அதிக சக்தி கொடுக்கும் தன்மை வாய்ந்தது. குழந்தைகளின் ஆகாரத்திலும் நெல்லிக்காயைச் சேர்த்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் அநேகவிதமான நோய்கள் கிட்டவே நெருங்கா. சரீரத்தில் ஒவ்வொரு அங்கமும் மலர்ச்சி அடைகிறது. எனவே, குழந்தை ஆயுள் முழுவதும் பலசாலியாகவும் ஆரோக்கிய முள்ளவனாகவும் இருக்கிறான்.

மாணவருக்கு நெல்லிக்காய் மிகமுக்கியமானது. மாணவர்களின் ஞாபகசக்தியை வளர்த்து கண்பார்வையையும் நன்றாக தெளிவாக்குகிறது.

சரீரத்தை நெல்லிக்காய் ஆரோக்கிய முள்ளதாக்குவதுடன், புத்திக் கூர்மையும் ஏற்படுகின்றது. நெல்லிக்காய் மட்டுமன்றி அதன் ஒவ்வொரு பாகமும் உபயோகமுள்ளது. இதன் மரக்கட்டை வீடு கட்டவும், கலப்பை முதலிய உழவுயந்திரங்கள், துப்பாக்கி முதலியவற்றுக்கும் உபயோகமானது. இந்த மரம் வெயில், பனியில்வாடி வதங்காது விலங்கு பட்சிகளாலும் இதற்கு ஆபத்து ஏற்படமாட்டாது. மழைக் காலத்தில் தான் நெல்லிக்கன்றை நடவேண்டும். இது மிகவும் நிதானமாக வளர்வதால், காய்க்க 8 அல்லது 10 வருடங்கள் ஆகும் முற்ற முற்றக் காய்கள் அதிகரிக்கும்.

தொகுப்பு— க. கனகராசா
ஆக்கம்— "மஞ்சரி"

## கந்தபுராணம் பாடிய

# கச்சியப்பர்

யாழ்ப்பாணக் கலாசாரம் ஒரு தனித்துவமானது காரணம் திருவாசகமும், கந்த புராணமும் கலந்த ஒன்றே யாழ்ப்பாணக் கலாசாரமாகும். யாழ்ப்பாணத் தமிழர்களிடையே திருவாசகமும், கந்தபுராணமும் காலூன்றிய அளவுக்கு இவை இரண்டும் தோன்றிய தமிழ்நாட்டில்கூட வேரூன்றவில்லை கந்தபுராணம் படித்துப் பயன்சொல்லும் பழக்கம் இன்றும் யாழ்ப்பாணத்தில் விரிவடைந்து வருகின்றது. கந்தபுராணம் பாடி அரங்கேற்றம் பெற்ற காஞ்சிபுரம் குமரகோட்டத்தில்கூட கந்தபுராணம் படிக்கப்படுவதில்லை.

ராம நாமத்தின் மகிமையைப் பரப்பவே கம்பராமாயணம் செய்யப்பட்டதாகக் கம்பர் கூறுகின்றார். ராமநாமமாகிய மருந்தை இலக்கியமாகிய சர்க்கரைக்குள் கம்பர் வைத்துக் கொடுத்துள்ளார். சிலர் சர்க்கரையை மாத்திரம் சாப்பிட்டுவிட்டு மருந்தாகிய ராமநாமத்தை உமிழ்ந்து விடுகிறார்கள். கந்தபுராணமும் இத்தகையதே கந்தபுராணத்தின் இலக்கிய நயம் கம்பராமாயணத்தின் இலக்கிய நயத்திற்கு எவ்வகையிலும் குறைந்ததல்ல. புராணத்தைப்பற்றிச் சிலரிடையே தப்பான கருத்து நிலவுகின்றது. புராணம் என்றால் புழுகு என்பது அவர்கள் கூறும் கருத்து. சாமானிய மக்களுக்கு விளங்காத வேத உண்மைகளைக் கதை ரூபமாகச் சாமானியரும் விளங்கிக்கொள்ளும் வகையில் பூதக் கண்ணாடிபோல் பெருப்பித்துக்கூறுவன புராணங்கள்.

கச்சியப்பர் முருக கோட்டத்து முருகனுடைய அருள் பெற்றே கந்தபுராணம் பாடினார். முருகன் 'திகடசம்' என்று அடியெடுத்துக்கொடுத்தான், அன்றாடம்தாம் பாடிய பாடல்களைத் திருக்கோயிலினுள்ளே வைத்துத் திருக்காப்பிட்டுச் செல்வார் அடுத்த நாள் காலையில் வந்து பார்க்கும்போது சிலஏடுகள் கலைந்து பாடல்கள் திருத்தம் பெற்றிருக்கும். கந்தனே அடி எடுத்துக் கொடுத்து கந்தனே திருத்தம் செய்து அரங்கேற்றத்தின் போது கந்தனே தோன்றி உண்மையை வெளிப்படுத்திய பெருமை கந்தபுராணம் ஒன்றிற்கே உரியதாகும்.

கச்சியப்பருக்கு ஒரு தனிப் பெருமை உண்டு தமிழகத்தின் திவ்வியநூல்களை ஆக்கித் தந்த கம்பர், சேக்கிழார் போன்ற மகாகவிகள் வைதிக மரபில் நன்கு ஊறியவர்கள். எனினும், அவர்களுடைய வேத ஞானம் நேர்முகமானதன்று. வேத அப்பியாசத்தில் அதிகாரம் பெற்றிருந்த கச்சியப்பரோ அருமறைகளில் நேர்முகமான அறிவு பெற்றிருந்தார். இருபத்தெடு ஆகமங்களிலும் அவர் நீந்திவிளையாடியவர். இதனால் அவரது வாக்குக்கு ஒரு தனிக் கம்பீரமும், கட்டுப்பாடும் உண்டு.

இலக்கண இலக்கிய ஞானத்தோடு சாஸ்திர ஞானமும் இருந்தால்தான் கச்சியப்பரின் வாக்கைப் பூரணமாகப்புரிந்து கொண்டு அதன் நடையழகு, தொடையழகு, சொல்லினிமை இவற்றோடு பொருளாழத்தையும் அனுபவிக்க முடியும்.

இத்தகைய கச்சியப்பரின் குருபூசைத் தினத்தில் முருகபக்தர்களும், ஏன்? சைவர்கள் எல்லோருமே கொண்டாட வேண்டிய தினமாகும் முருகன் ஆலயங்கள் எல்லாவற்றிலும் அன்றையத் தினம் விசேட பூசை, அன்னதானம், கந்தபுராண உபந்நியாசம், கந்தபுராணப் பஜனை ஆகியன செய்து மக்கள் உள்ளத்தில் கச்சியப்பருடைய நினைவை உண்டாக்குதல் சாலச் சிறந்தது.

கந்தபுராண விழா என்று எல்லா இடங்களிலும் விழா எடுத்து மாணவர் மத்தியில் பேச்சுப் போட்டி, புராணம் வாசித்தலில் இசைப்போட்டி, பயன் சொல்லும் போட்டி ஆகியன வைத்தல் கந்தன் புகழைப் பரப்புவதற்கு ஏற்ற வழியாகும். கச்சியப்பருடைய திருஉருவப் படத்தை பெருந்தொகையில் அச்சிட்டு மக்களிடையே பரப்புதல் கச்சியப்பரை நினைவு கூருதற்கு ஏற்றதொரு வழியாகும். கச்சியப்பர் இன்றும் கந்த புராணத்துள்ளே வாழுகின்றார்.

# இந்துபோர்ட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்

க.சி.குலரத்தினம்

**22**

## கல்வி விசேஷ ஆணைக்குழுவும் இராசரத்தினம் அவர்களும்

இரண்டாம் அரசாங்க சபையின காலம் 1936 முதல் 1941 வரையிலாதல் வேண்டும். ஆனால் இரண்டாம் மகாயுத்தம் கிழக்கு நாடுகளில் தீவிரமடைந்தமையால் தேர்தல் நடத்துதல் சாத்தியமாகாதெனக்கருதிய ஆங்கில அரசாங்கம், இரண்டாம் அரசாங்க சபையின் காலத்தை நீட்டித் தேர்தலைப் பின்போட்டுவிட்டது

இரண்டாம் அரசாங்க சபையில் கல்வி மந்திரியாயிருந்த கனம் கன்னங்கரா அவர்கள் தமது கல்வி நிர்வாகக் குழுவின் அங்கத்தவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். அக்குழுவில் நடேசபிள்ளை அவர்கள் விடயங்கள் அறிந்த விற்பத்திமானாய் மதிப்புப் பெற்றிருந்தார். கல்வி மந்திரியார் சேர். இராமநாதன் அவர்களின் பெருமைக்குத் தலைசாய்த்திருந்த பெருந்தகை எனவும் கருதலாம்.

அரசாங்க சபைக்கு வெளியில் கல்வி மந்திரியார் மதிப்புக் கொடுத்திருந்த தமிழருள் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள், இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்கள், அகில இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் செயலாளர் கு. நேசையா அவர்கள் முதலாகச் சிலர் புகழ் பெற்றிருந்தார்கள். யாழ்ப்பாணத்து வாலிப மாநாட்டினர், ஆசிரிய சங்கம் மூலம் பல முன்னேற்றத் திட்டங்களை முன்னோடிகளாய் வெளிப்பகர்ப்புச் செய்திருந்தார்கள்.

இரண்டாம் அரசாங்க சபைக் காலத்தில் மகாயுத்தம் செய்த சீரழிவுகளிற் பார்க்க எங்கள் நாட்டகத்தில் நாமே செய்துகொண்ட கெடுபிடிகள் பலவாகும். அன்று 1940ஆம் ஆண்டளவில் ஆங்கில ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி அதிபராயிருந்த எச். எஸ். பெரேரா என்னும் பெரியார் சும்மா இருந்துகொள்ள மாட்டார். ஐந்தாம் வகுப்பில் பரீட்சை நடத்தி புலமைப் பரிசில் வழங்கும் அளவில் கண்ட பெறுபேறுகளை பெரிய ஆராய்ச்சி எனக் கூறி அறிக்கையொன்றை வெளியிட்டார். அதில் ஆங்கிலப் பாடசாலைப் பிள்ளைகளின் விவேக ஈவுபற்றி வெகுவாகப் புகழ்ந்து அவர்கள் 72% பெறுபேறு பெற்றார்கள் என்றும், சிங்கள தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் சுய மொழிப் பாடசாலைகளில் 52% பெறுபேறு பெற்றார்கள் என்றும் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதனைக் கருத்தூன்றிக் கவனித்த வேதமுத்து என்னும் விற்பத்திமான், அக்காலத்தில் ஆசிரிய சங்கச் செயலாளராயும் சென்யோன்ஸ் கல்லூரி ஆசிரியராயும் இருந்த திரு. கு. நேசையா அவர்களைக் கொண்டு பலத்த கண்டனங் கலந்த அறிக்கை ஒன்று எழுதுவித்து. விவேகத்துக்கு ஆங்கில மொழி அவசியந்தானோ எனக் கேட்கச் செய்தார். ஆங்கில அரசின் பாராமுகத்தாலும், மாற்றாந்தாய் மனப்பான்மைப் போக்காலும் இலங்கைக்கல்வி முறையில் பல சீர்கேடுகளிருந்தன. இலங்கைக் கல்வித் திணைக்களம் நடத்திய பரீட்சைகளில் கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு அவர்கள் மதம் "ஸ்கிறிப்சர்" என்னும் பெயரில் பாடமாயிருந்த வேளையில் பௌத்தம், சைவம் இடம் பெறவில்லை.

தமக்கு ஒரு எதிர் காலம் உண்டு, அதுவரைக்கும் பொறுத்திருப்போம் எனக் காத்திருந்த பண்டார நாயக்க அவர்கள், 1938ம்-ஆண்டளவிலேயே சிங்கள மகாசபை என ஒரு நாடறிந்த சபையை உருவாக்கியிருந்தார். சிங்கள மொழிக்கு ஏற்றங் கொடுத்தல் வேண்டும் எனக் கருதியிருந்த வேறு இளைஞர்கள் சிலர் 17-12-1938 இல் பாணந்துறையில் நடைபெற்ற தேசிய மகாசபைக் கூட்டத்தில் எல்லாம் சிங்களமயமாதல் வேண்டும் எனக் குரலெழுப்பிக் குழப்பமும் செய்தார்கள் ஜெயவர்த்தனா வன்னிநாயக்க ஆகியோர் இளைஞர்களை வழி நடத்திச் சென்றார்கள் என்பர்.

பின்னர் தேசிய மகாசபைத் தலைவராயும், இரண்டாம் அரசாங்க சபை முதல்வராயும், உள்நாட்டு மந்திரியாராயும், களனித் தொகுதி அங்கத்தவராயும் இருந்த சேர். டொனபாரன் ஜயத்திலக அவர்கள் இந்தியாவுக்குத் தானிகராகப் போனதும, உள் நாட்டு மந்திரிப்பதவி அருணாசலம் மகாதேவா அவர்களுக்குக் கிடைத்தமையும், களனித் தொகுதியில் 1943 ஆம் ஆண்டு நடைபெற்ற உபதேர்தலில் ஜெயவர்த்தனா அவர்கள் பிரதிநிதியானதும், அவர் அரசாங்க சபையுட் பிரவேசித்ததும் முதல்வேலையாக 1944 – ல் இலங்கை முழுவதற்கும் சிங்களமே அரசகரும மொழியாதல் வேண்டுமெனப் பிரேரித்ததும், சபையிலிருந்த நல்லவர்கள் இல்லை, இல்லை, தமிழும் எனத் திருத்தப் பிரேரணை கொண்டுவந்ததும், இலங்கையில் சிங்களமும், தமிழுமே அரசகரும மொழிகள் என 27 அங்கத்தவர் சாதகமாகவும், இருவர் பாதகமாகவும் வாக்களித்தபோது ஜெயவர்த்தனா அவர்கள் நானுங் கூட என்று சாதகமாகக் கையுயர்த்தினார்.

இலங்கையை 1796 முதல் கைவிடாமல் இறுகப்பிடித்திருந்த பிரித்தானியா, 1943 ஆம ஆண்டிலே தன் பிடியைத் தளர்த்துவதற்கு உடன்பாடு தெரிவித்தது. அந்த வேளையில் கல்வி மந்திரிமார் இலங்கைக் கல்விக் கொள்கையில் ஏதோ மாற்றஞ் செய்வதற்குத் துணிந்து ஒரு விசேஷ ஆணைக்குழுவை நியமித்து, விசாரணைகள் செய்து அறிக்கை தயாரிக்குமாறு பணித்தார். நாடெங்கும் உள்ள பெரியவர்கள் கல்விமான்கள் முகாமையாளர்களிடம் அபிப்பிராயங்கள், அறிவுரைகள், ஆலோசனைகள் கேட்டு வந்த ஆணைக்குழுவினர், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தாரையும் கண்டார்கள்.

### தட்டிக்கேட்ட சைவத் தமிழ்ச் சங்கம்

தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி என்னவோ எல்லாம் செய்வான் என்றாற் போல, அன்றைய அரசாங்கத்தின் செயல்களைத் தட்டிக் கேட்பதற்கு ஒரு சங்கம் இருந்ததே என்று சைவத்தமிழர்கள் எல்லோரும் பெருமைப்பட்டனர். கல்வி விசாரணைக் குழுவினர் தயாரித்த அறிக்கை மிகப் பரந்தது. அதைப் பற்றிச் சுருக்கமாகத் தானும் கூறுவதாயினும் அது பெரிதாகிவிடும்.

பாடசாலைகளின் முகாமை பற்றிக் கல்விமந்திரியார் விளக்கங் கேட்டபோது, இராசரத்தினம் அவர்கள் விடுத்த பதிலும், விண்ணப்பமும் விதுரன் பேச்சுப்போல விவேகபூர்வமானது விதுரனும் அன்றைய பெரும்பான்மையினரிடம் சிறுபான்மையினருக்காக உரிமை கேட்டுப் பரிந்துரைபேசிய கதையே பாரதம்.

நாட்டை ஆளும் அரசாங்கம் நாட்டிலுள்ள பாடசாலைகளை எடுத்துநடத்துதல் பற்றிச் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. ஆனால் முன்னர் 1923-ஆம் ஆண்டில் புறமதத்தவர்கள் எடுத்துக் காட்டிய முறையில் தத்தம் மதக்கொள்கைகளை அவரவர் மதம் அறிந்த அவரவர் மதத்தினரே போதித்தல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் தன் சமயம் சம்பந்தமாக நேரிய, சீரிய முறையில் அறிந்துகொள்வதற்குச் சந்தர்ப்பமும், வாய்ப்பும் அமைதல் வேணடும். அது பிளளையின் பிறப்புரிமையுமாகும். சைவ சமயப் பிள்ளைகளுககுச் சைவச்சூழல்இன்றியமையாது அமைதல் வேண்டும் அது கட்டாய தேவையுமாகும்.

புறமதப் பாடசாலைகள் எம் மதப்பிள்ளைகளை மதமாற்றஞ் செய்யும் தொழிற்சாலைகளாக அமைதல் ஆகா. மதமாற்றம் செய்யும் மகத்தான சடங்கு இதுவரைகாலமும் உல்லாசமாக நடைபெற்றுவந்தது போதும், இனிமேல் நிலைமை மாறி அமைதல் அவசியமாகும். முன்னர் அவர்கள் எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல வழிகாட்டுவோம், உடுபுடைவை, சம்பளம் நாளும் நாம் தருவோம், நாம் சொல்வதைக்கேளும் என்றெல்லாம் போதித்துள்ளார்கள். சாதனை குறைவாயே இருந்தது.

புறமதப்பாடசாலைகள் புதிதாக அமைந்தால் உதவி வழங்குதல் பற்றி விசாரணைக் குழுவினர் கேட்டபோது, இராசரத்தினம் அவர்கள் நகைச்சுவையாக, அவர்கள் ஏற்கனவே போதிய 'பாடசாலைகளை அமைத்துள்ளார்கள் அவர்கள் இன்றைய சூழ்நிலையில் ஒரு சில பாடசாலைகளை மூடுகின்றார்களே யன்றித்திறக்கமுற்படுவதாகத் தெரியவில்லை என்று கூறித் தாங்கள் விலைக்குப்பெற்ற பாடசாலைகளின் விபரங்களை விளக்கினார்.

இவ்வாறாக விசாரணைக் குழுவினரிடையிருந்த மதிப்புக்கும் வணக்கத்துக்குமுரிய லெகொக் அவர்களும் வார்டன் சேரம் அவர்களும் சில விளக்கங்கள் கேட்டபோது. இராசரத்தினம் அவர்கள் சொன்னவை: அரசாங்கத்தின் உதவியினாலேயே நாட்டவர் தத்தம் மக்களைப் பாதுகாத்துக்கொள்ளுதல் சுலபம். சிலர் தங்கள் சட்டங்கள் கொண்டு தங்கள் மந்தைகளைக் கட்டுப்படுத்தும் முறைபோலல்லாமல், நாங்கள் அரசாங்கத்தின்சட்டங்கள் மூலமாகவே எங்கள் மந்தைகளுக்குப் பாதுகாப்புக் கோருகிறோம். ஆட்டிடையன் ஒருவன், தவறிப் போன தன்னுடைய ஆட்டைத் தேடிப்போவதில் என்ன தவறு இருக்கிறது? என்று கேட்டார்.

இதற்குப் பெரியவர்கள் இருவரும் ஒரே குரலில் தாங்கள் தற்காலச் சூழலில் பிள்ளைகளை மதமாற்றஞ் செய்வதில்லை என்று கூறியமை கேட்ட இராசரத்தினம் அவர்கள், பிள்ளைகளை உங்கள் வழியில் திசை திருப்புவதற்கு வாய்ப்பாக, வேலையற்ற சைவாசிரியர்களுக்கு வேலை கொடுத்து வழிப்படுத்திவைத்திருக்கிறீர்கள். இங்ஙனம் வேலைவாய்ப்புப் பெற்றதோடு வேறு பெயர்கள் பூண்ட எங்கள் ஆசிரியர்களின் பெயர்கள் எம்மிடம் உண்டு அவர்கள் ஒரு காலத்தில் சைவசமயத்திற்கு மீண்டும் வரவும் கூடும் என்றார்.

### பாடசாலைகளைத் தரப்படுத்தல்

பாடசாலைகளைத் தரப்படுத்தும் விடயமாகக் கேள்வி எழுந்தபோது,இராசரத்தினம் அவர்கள் கூறியபதில் கனிஷ்ட தராதரப்பத்திர வகுப்பு அல்லது எட்டாம் வகுப்புவரையிலாவது தாய்மொழிக்கல்வி அமைவானது அதற்குப் பின்னரும் வேண்டிய அளவுக்குத் தாய்மொழிக் கல்வியைத் தொடரலாம். கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் சார்பில் சாட்லர் என்பவர் தலைமையிலான குழு சமர்ப்பித்த சில தகவல்களைச் சான்றாக எடுத்து விளக்கினார்.

எட்டாம் அல்லது ஒன்பதாம் வகுப்புவரை எல்லாப் பாடசாலைகளும் ஒரே தன்மையாய் அமைதல் ஏற்புடையதாகும் என்றும், கல்வி இலவசமாகக் கிடைத்தல்வேண்டும், அது தாய்மொழியில் அமைதல் வேண்டும் என்னும் முடிவை இராசரத்தினம்அவர்கள் வரவேற்றுப் பாராட்டினார். இந்த முடிவு முன்னர் யாழ்ப்பாணத்து வாலிபர் மாநாட்டினர் கொண்ட முடிபாகும் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்து வாலிபர் மாநாட்டினரே முற்போக்குத் திட்டங்களை முறையாக வகுத்தமையோடு இலங்கையில் இலவசக் கல்விக்கும் குரல் கொடுத்து, யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவை மூலம் ஒலி பரப்பியும் வந்தனர்.

தமிழ்ப் பிள்ளைகளைப் பொறுத்த அளவில் இராசரத்தினம் அவர் அப்போதிருந்த சூழ்நிலையை முன்னிட்டு, மூன்றாம் வகுப்பில் ஆங்கிலத்தையும், ஆறாம் வகுப்பில் சிங்களத்தையும் ஆரம்பிக்கலாம் என்றார் அன்றி ஆறாம்வகுப்பிலிருந்து எல்லாப் பிள்ளைகளுக்கும் கமத்தொழில், கைத்தொழில் பாடங்களை அதிக சிரத்தையோடு கற்பித்தல் வேண்டுமென்று வற்புறுத்தினார்

அன்று 1940 ஆம் ஆண்டளவில் எச் எஸ். பெரேரா அவர்கள் தரப்படுத்த முயன்ற வகுப்பு பொருத்தமானது அல்ல என்றும், ஐந்தாம் வகுப்பின் வயது தக்ககாலம் அல்ல என்றும் கூறினார். பிள்ளைகளின் பொதுவுளச்சார்பை அக்காலத்திலே போதியளவுக்கு அறிந்துகொள்ளவோ, மட்டிடவோ முடியாது என்றும், பிள்ளைகளின் நாட்டம் எந்தப்பக்கத்தில் அமையும் என அக்காலத்தில், அப்பருவத்தில் அறிந்தறிதல் இயலாது என்றும் கூறினார் தரப்படுத்தும் பரீட்சையை வேண்டுமானால் கனிஷ்ட தராதரப்பத்திர வகுப்பில் வைத்துக் கொள்ளலாம். பிள்ளைகள் இயன்றவரை எட்டாம் வகுப்புவரையாதல் படிக்க வசதி செய்து கொடுத்தல் வேண்டும் என்றார். எதிர்காலத்துக்குகந்த நல்ல குடிமக்களை உருவாக்குவதாயின் கல்வியாண்டு நீடிக்கப் பெறுதல் வேண்டும் என்றார்.

### ஆசிரியர்க்குரிய பெருமை

இன்னும் ஆசிரியர்களின் சம்பளமும் படி உயர்வும், பதவியுயர்வும் ஒரே படித்தாய் அமைதல வேண்டும என்றும் ஆசிரியர்களின் சம்பளம் தராதரத்திற்கு அமைவாகவே அளிக்கப்பெற வேண்டும் என்றும் கூறினார். ஆசிரியர்களின் நியமனம், வேலை மாற்றம் முதலியன சம்பந்தமாகத் தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களின் பிரதிநிதி, முகாமையாளரின் பிரதிநிதி, கல்வித்திணைக்களத்தின் பிரதிநிதி ஆகியோரைக் கொண்ட அதிகாரக்குழுவொன்று கட்டாயமாக இருத்தல் அதிக நன்மை பயக்கும் என்றும் அவர் தீர்க்கதரிசனமாகக் கூறியிருந்தார்.

இவ்வாறாக விசாரணையின் மத்தியில் உரையாடலின் போது தகவல் அறியும் வகையிலும் கேள்விகள் எழுந்தன. துவிபாஷா பாடசாலைகளைப் பற்றி விசாரணையாளர் கேட்டபோது,இராசரத்தினம் அவர்கள் தமது முகாமையிலுள்ள துவிபாஷா பாடசாலை ஆசிரியர்கள் தக்க பட்டதாரிகள் என்றும், ஆங்கிலப் பயிற்சி பெற்றவர்கள் என்றும், கூறி அவர்கள் சேவை முன்மாதிரியானவை; பெறுபேறுகள் வியக்கத்தக்க முறையில் கிடைக்கின்றன சிறப்புச் சித்திகளும் உளவென்று புள்ளி விபரங்களோடு எடுத்து விளக்கினார். துவிபாஷா பாடசாலையில் பயின்றவர்கள் அரசாங்கத்தில் பெரும் பதவிகளில் இருக்கிறார்கள் என்றும் சுட்டிக் காட்டினார்.

### நம்பிக்கையில் பாதுகாவலர் (F, D)

மதமாற்றத்திற்கு அரசாங்கம் மேலும் இடமளிக்கலாகாது என்றும். நல்லரசாங்கம் என்றால் நம்பிக்கையின் பாதுகாவலராக இருத்தல் வேண்டும் என்றும், இராசரத்தினம் அவர்கள் கேட்டுக்கொண்டபோது; மந்திரியார் அவர்கள் மதம்மாறியவர்களின் பெயர்கள், அடையாளங்களைத் தமக்குக் காலந்தோறும் அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்

நம்பிக்கையின் பாதுகாவலர் என்பது ஆங்கிலத்தில் "டிபெண்டர் ஒவ் த பெயித" defender of the faith என்னும் கருத்தில் நானூற்றெண்பதாண்டுகளுக்கு முன் F D என வழங்கிய ஒரு பட்டமாகும். அது மன்னர்க்காகியிருந்து பெரியவர்களுக்கும் வழங்கியது உண்டு

பலமதப் பிள்ளைகள் படிக்கும் பொதுவான பாடசாலைகளில் ஆசிரியர்களின் நியமனம் பற்றி மந்திரியார் கேட்டபோது, இராசரத்தினம் அவர்கள், மாணாக்கரின் வீதப்படி நியமித்துக் கொள்ளலாந்தானே என்று கூறி, அதுவே நீதியானது நடைமுறைக்கு உகந்தது. பட்டாங்கில் உள்ளது அதுவே அமையும் என்று நீதியால் வந்த தருமநெறியை விளக்கினார்.

[14-ம் பக்கம் பார்க்க]

# துர்க்கா துரந்தரி

## ஆலயப் பணியில் சாலவும் உயர்ந்தவர்



தமிழையும், சைவத்தையும் தன்னிரு கண்களாகப் போற்றி நித்தம் நித்தம் சமூக சமயப் பணி புரிந்து வருபவர் துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இன்றைய தமிழ்ப் பெண்களின் கலங்கரை விளக்கமாகத் துலங்கும் துர்க்காதுரந்தரிஅவர்களுடன் நடத்திய சம்பாஷணை, இங்கு ஆறு கேள்விகள்-பதில்கள் வடிவத்தில் பிரசுரமாகின்றது.

**கேள்வி:**

ஒரு பெண் கலை என்றும்–தொழில் என்றும் – சேவை என்றும் வெளி உலகில் வலம் வரும் போது அவளுக்கு ஏற்படும் சோதனைகள், போராட்டங்கள் சொல்லில் அடங்கா. அதுவும் திருமணம் ஆகாத பெண்ணுக்கு இந்நிலை அதிகம்; இந்த நிலையில் நீங்கள் இளமைக் காலம் தொட்டு இன்றுவரை சகல துறைகளிலும் தன்னிகரற்று. சிறந்து விளங்குகின்றீர்களே... இது எப்படி சாத்தியமாகின்றது? எல்லாவற்றையும் கடந்து எப்படி உங்களால் தனித்துவமாக இயங்க முடிகின்றது.

**பதில்:**

என்னைப் பொறுத்தவரை நான் குடும்பத்தில் மூத்தவள். ஆண் சகோதரர்கள் இல்லாத நிலை, எனவே நானே ஆணாகவும் பெண்ணாகவும் இயங்க வேண்டிய சூழல். சிறுவயதில் இருந்தே கல்வியில் அதிக ஆர்வம் – சமூகப் பணியில் ஈடுபட வேண்டும்; என்னால் ஆனதை சமூகத்திற்கு செய்ய வேண்டும் என்ற உத்வேகம் தான் என்னை வளர்த்தது ஆனால் அதே சமயம்என் கல்வி வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பலபக்கங்களில் இருந்தும் எதிர்ப்புக்கள் கட்டுப்பாடுகள் கிளம்பத்தான் செய்தன. ஆனால் என்னிடம் உதித்ததைரியமும், துணிவும் அவற்றை தகர்த்தெறிய எதிர்ப்புக்களே என் கல்வி வளர்ச்சிக்கு ஊக்குவிப்புக்கள் காரணியாக அமைந்தன போராட்டமே என் வெற்றிக்குக் காரணம். பெண் உயர் கல்வி கற்கக் கூடாது என்ற அடக்கு முறை எனக்கு முட்டுக்கட்டையாக இருந்த போது என் விடாமுயற்சியும்-என் பெற்றோர் எனக்களித்த ஊக்கமும் நான் உறுதியுடன் செயற்பட முக்கிய காரணமாக இருந்தன. அது மட்டுமல்ல, கல்வி அறிவுப பணி செய்யும் ஆர்வத்துடன் அசையாத தெய்வ நம்பிக்கையும் நல்லதை நினைத்து – நல்லதே செய்ய வேண்டும் என்ற உள்ளமும் தான் என் பணிகளில் ஏற்படும் சோதனைகளையும், போராட்டங்களையும்எதிர்த்து அனைத்தையும் தாங்கி என் துறைகளில் சிறந்து விளங்க பக்க பலமாக இருந்தன! தன்னம்பிக்கையே என் பலம்.

**கேள்வி:**

தற்காலப் பெண்கள் சகல–துறைகளிலும் முன் நிற்கின்றனர். ஆனால் தங்கள் ஆற்றலையும், அறிவையும் ஒரு எல்லை வரையே விஸ்தரித்து வைத்துள்ளனர். உங்களைப் போன்றவர்கள் போல் இன்றைய தலைமுறையில் எவரும் உருவாகவில்லை என்று தெரிகின்றது இந்த முடங்கல் எதனால் ஏற்பட்டது என்று கூற முடியுமா?

**பதில்:**

பெண்கள் தாம் கற்ற கல்வி பெற்ற அறிவு தனக்கும்–தன்னைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் பயன்தரும் வண்ணம் செயல்படாது –சமூகத்திற்கும் நாட்டிற்கும் உதவக் கூடிய வகையில் செயல்பட வேண்டும். வேலை வாய்ப்புப் பெறவும்–பணம் சம்பாதிக்கவும் தான கல்வி அறிவு என்ற நினைப்பை மாற்றி சமூக முன்னேற்றத் திறகுத் தங்கள் அறிவை பயன்படுத்த முன்வர வேண்டும். அது மட்டுமல்ல... பெண்கள் தங்கள் குறுகிய மனப்பான்மை – குறுகிய வட்டத்தில் இருந்தும் வெளிவந்து சமூகப்பணியில் ஈடுபட வேண்டும். வீட்டிற்குமட்டுமல்ல சமூகத்திற்கும நாட்டிற்கும் பெண்களின் கடமைகள்–பணிகள் அவசியம்; இந்த முடங்கல்களுக்குக் காரணம் பெண்களுக்கு சமூக பிரக்ஞை இல்லாமையே.முதலில் பெண்களுக்கு மனத்திருபபம் ஏற்படவேண்டும். இலைமறை காயாக சமூகப் பணிகளில் ஈடுபடும் பெண்கள் வெளிவர வேண்டும்.

...ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் – சைவத்திற்கும்-தமிழுக்கும் – சமூகப்பணிககும் சேவையாற்ற முன்வர வேண்டும் எதிர்படும் எதிர்ப்புக்களை எதிர்கொண்டு முன்வர வேண்டும்.

**கேள்வி:**

இக் கால கட்டத்தில் பெண் உரிமைக் குரல் கொடுக்கும் பெண்கள் பலர் திருமணம் என்பது மாபெரும் கட்டு என்றும் திருமணத்தால் தாங்கள் தனித்துவமாக இயங்க முடியாது என்றும். தங்கள் இலட்சியம்-குறிக்கோள் ஆற்றல்கள் யாவும் திருமணத்தால் பாதிக்கப்பட்டுவிடும் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் அப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

**பதில்:**

ஒரு பெண்ணுக்கு திருமணம் நிச்சயம் தேவை. பெண்ணின் முன்னேற்றத்திற்கு திருமணம் என்றும் தடையில்லை தனது கடமைகளை நிறைவு படுத்த திருமணம் உதவி புரிகின்றது. தனக்குப் பக்க பலமாக நின்று செயல்பட்டு தனது கடமை-காரியங்களை நிறைவேற்ற பெண்ணுக்கு ஒரு துணை அவசியம்! திருமணம் பொறுமை-சகிப்புத் தன்மை, கடமை உணர்ச்சி என்பவற்றைப் பெண்களுக்கு ஊட்டுகின்றது. அதுவே பெண்கள் தனித்துவமாக இயங்க ஊக்குவிப்புக் காரணியாக இருக்கின்றது. சமூகத்தின் கல் நெறிகளுக்கு நின்று பிடிக்க முடியாதவர்கள்–துணிவுடன் செயலாற்ற திருமணம் அவசியம்! ஒவ்வாத திருமணத்தால் பாதிப்புகள் ஏற்படத்தான் செய்யும். தலைவிதி– தோஷத்தால் எதிரான குடும்பம், கணவன் அமையலாம்-ஆனால் அவற்றை நமது முயற்சியினால் மாற்றி அமைத்து-அவற்றை எல்லாம் கடந்து நின்று செயல்பட வேண்டும்!

**கேள்வி:**

பல வெளிநாடுகளுக்குச் சென்று தமிழையும், சைவத்தையும் பரப்பி உங்கள் முத்திரையை பதித்த நீங்கள் அங்கு வாழும் பெண்களுக்கும் நம்நாட்டுப் பெண்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை-வேற்றுமைகளைக் கூறமுடியுமா?

**பதில்:**

மலேசியா–சிங்கப்பூர் பெண்கள் சமய விடயங்களில் நம்மைப் போன்றே கோவில் நிர்வாகம்,கூட்டுவழிபாடு. வாரம் தோறும் வீடுகளில் சென்று பிரார்த்தனை புரிதல் போன்றவற்றில் அதிக ஆர்வம் உடையவர்கள். நமது சமயக் கலைகள் சிலவற்றிலும் ஈடுபாடு கொண்டவர்கள். சமூகப்பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். வெள்ளைக்காரப் பெண்களுக்கும் நம் கலை-கலாசார விடயங்களில் ஈடுபடவும அறிந்து கொள்ளவும் ஆர்வம் அதிகம். ஆனால் நாம் சமூகப் பணிகளில் காட்டும் ஈடுபாட்டைவிட பல மடங்கு அவர்கள் ஈடுபடுகின்றனர் சமூகரீதியில் ஆன எவ்வித பாதிப்புகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் அவர்கள் செவிசாய்ப்பதில்லை. பொதுப் பணிகளில் மும்முரத்துடன் ஈடுபடுவார்கள். நம்மைப் போன்று மற்றவர்களில் தங்கி இருப்பது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை, சமூக ஒதுக்கீடுகள் எதுவும் அவர்களிடை இல்லை. தொழில்–கல்வி ரீதியில் நம்மை விட அதிக முன்னேற்றம். காரணம் அவர்களிடையுள்ள தன்னம்பிக்கையும் தன் காலில் நிற்கவேண்டும்–யாரையும் சார்ந்து வாழக் கூடாது என்ற எண்ணமும் தான்.

அது மட்டுமல்ல. நெறி தவறிய பெண்களையோ– விதவைகளையோ அவர்கள் ஒதுக்குவதில்லை. சமூக அங்கீகாரம் அவர்களுக்கு நிறைய உண்டு,விதவைகள்,மறுமணம், விவாகரத்துப் பெற்றவர்களுக்கு உரிய உரிமைகள்–சுதந்திரம்- பாதுகாப்பு என்பன பெருமளவில அளிக்கப்படுகின்றன. பெண்களில் பொருளாதார முன்னேற்றம் அதிகம் பெண்கல்வி அதிக வளர்ச்சி– சகல துறைகளிலும் நம்மை விட அதிக ஈடுபாடும் முன்னேற்றமும் அதிகம். வயோதிபர்கள் கூட தன்னம்பிக்கையுடன் சார்ந்து வாழாது– உலக நாடுகளுக்கு பணம் சேகரிப்பது போன்ற விடயங்களில் ஈடுபட்டு–தனித் தனியே செயல்படுவது. சமூக சார்ப்பான பணிகளில் ஈடுபடுவது சிறப்பான விடயம். நம்மைப் போன்று குடும்ப வாழ்க்கை, பாச– உறவு, பிணைப்புகள் தான் அவர்களிடை அருகியுள்ளது.

பேட்டி கண்டவர்

ஊரெழு தர்ஷினி

# மங்கையர் மஞ்சரி

**கேள்வி:**

தலைமுறை இடைவெளி என்பார்களே... அந்த ரீதியில் அக்காலப் பெண்களுக்கும் இக்காலப் பெண்களுக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடுகள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:**

கட்டுப்பாடுகள் தேவை– அவை வரவேற்கப்பட வேண்டியவை ஆனால் அது நியாயமான, தகுதியான கட்டுப்பாடுகளாக இருக்க வேண்டும். இக் காலத்தினரிடையே உள்ள நாகரிக போலித்தனங்களும் தான்தோன்றித்தனமாக செயல்படும் தன்மைகளும், ஆடம்பர மோகமும் இலக்கு இல்லாத நடைமுறையும் கண்டிக்கப்பட வேண்டியதே. இக்கால கட்டத்தினரின் கல்வி வளர்ச்சி. தொழில் முன்னேற்றம் சமூக சிந்தனையும் ஈடுபாடும் வரவேற்புக்குரியது சமூக பிரக்ஞை அதிகம் உள்ளவர்களாக இருந்தாலும்.. அநாவசிய வேகம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் உழைப்பின் மகிமை அறியாது பணத்தை விரயம் செய்யும் தன்மை – துஷ்பிரயோகம் செய்யும் செயல் தடை செய்யப்பட வேண்டும். பழமையும்-புதுமையும் ஒன்றுபடவும் வேண்டும். காலத்திற்கேற்ப மாறவும் வேண்டும்.

**கேள்வி:**

சைவத்திற்கும் – தமிழுக்கும் பெண்கள் ஆற்ற வேண்டிய கடமை; ஆன்மீகத் துறையில் அவர்களின் பங்கு என்ன?

**பதில்:**

ஆத்மீகத் துறையில் நிறைய ஈடுபாடு கொண்டவர்களாக பெண்கள் திகழ்கின்றனர். மேலும் பணி புரிய பெண்கள் முன்வர வேண்டும். திருமுறை ஓதுதல், பிரார்த்தனை புரிதல்–கூட்டுப்பிரார்த்தனை செய்தல், ஏழைகளுக்கு உதவுதல்– கல்வி சைவத்தை பரப்பும் பணியில் ஈடுபடுதல்– அன்னதானங்களை வழங்குதல் என்பனவற்றில் முழுமூச்சாக ஈடுபட வேண்டும். கதாப்பிரசங்கங்கள்–பேச்சுக்கள் மூலம் சைவ நெறிகளை பரப்புதல் என்பனவற்றில் ஆர்வம் காட்ட வேண்டும் ஆனால் தனித்தனி லாபம்தேடும் நோக்கோடு அல்லாமல் தன்னல நோக்கோடு அல்லாமல் பிரார்த்தனை- வழிபாடு - சேவை யாவும் சமூகத்திற்கும் – நாட்டிற்கும் பயன் தரும் வகையில் பெண்கள் தம் பங்கை அளிக்க வேண்டும். சிறுவயதில் இருந்தே ஆத்மீகத் துறையில் ஆர்வம் காட்ட வேண்டும் ஞானம் உள்ளவர்கள் அதிக பங்களிப்பை அளிக்க வேண்டும். பெண் சேவை என்பது பேச்சோடு மட்டுமல்லாது செயல் வழிகளிலும் செய்து காட்ட வேண்டும். ஆத்மீக ஸ்தாபனங்களுடன் இணைந்து தானும தமது காலத்தையும் – நேரத்தையும் வீண் விரயம் செய்யாது பணி புரிய ஆன்மீகத்துறையில் ஈடுபட வேண்டும். ●

# இளைஞர்காள்! நாடாதீர் சீதனத்தை!

நம்நாட் டிளைஞர்காள்! நாடாதீர் சீதனத்தை
வெம்பியழுங் கன்னியரின் வேதனையை- அம்புவியில்
போக்க மணஞ்செய்து பொன்றுத் துணைகொண்டே
ஆக்கத்தைச்செய்மின் அணைத்து

பணம் நகை வீடு காணி
பகருயர் பொருள் பண்டங்கள்
போன்றசீ தனத்திற் காகப்
பொருத்தமே யில்லாத் தீய
குணங் கொளும் அழகுமிக்க
குமரிகள் தம்மை யிங்கே
குணம்மலி இளைஞர் சில்லோர்
கட்டிமார் அடிக்கின்றார்கள்;
குணமுள குற்றம் அற்ற
கூடிய பொருத்தம் வாய்ந்த
கொடுக்கச்சீ தனமே யில்லாக்
குமரிகள் தம்மை நல்ல
குணம் நிறை அறிவு மிக்க
குலத்துள இளைஞர் சில்லோர்
குறைவற மணம்பு ரிந்து
குறைவின்றி வாழ்கின் றாரே!

கூடுநல் லெழிலைக் கொண்ட
கொடுக்கச்சீ தனமே யில்லாக்
கோதிலாக் குமர்கள் தம்மைக்
குணத்தொடு மணமே செய்ய,
வீடுடன் நகையுங் காசும்
விரும்பிடும் இளைஞர் சில்லோர்
''வேண்டவே வேண்டாம்'' என்று
வரிக்கவே மறுக்கின்றார்கள்;
பீடுடை யிந்தக் கன்னிப்
பெண்களோ கண்க லங்கிப்
பேதலித் துருகி நெஞ்சம்
புண்பட்டே மெலிகின் றார்கள்;
நாடுறை இளைஞ ரே!இந்
நங்கையர் நிலையைக் கொஞ்சம்
நன்குணர்ந் தோர்ந்து பார்மின்!
நன்மையைச் செய்மின்! நன்கே.

★ முருகசூரியன்

# இருவித அடையாள அட்டை

## இரண்டும் இருவிதம்

நெதர்லாந்தில் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு அடையாளக் கார்ட் வழங்கும் திட்டம் இப்போது அமுலுக்கு வருகின்றது. உதைபந்தாட்ட அரங்கில் நிலவும் காடைத்தனதலை எதிர்த்து முறியடிக்கும் வகையில் உதைபந்தாட்டச் சங்கம் அந்நாட்டில் இத்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

இத்திட்டம் தமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது என உதைபந்தாட்ட ரசிகர்கள் எதிர்த்து வருகின்றுர்கள் பன்னிரண்டு டாலர்கள் பெறுமதியான அடையாள அட்டை வைத்திருக்கும் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு மட்டுமே இந் நாட்டின் நான்கு உயர்மட்ட உதைபந்தாட்ட கழகங்கள் பங்கு பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ள முடியும்.

கார்ட்டுகளை வாங்க வேண்டாமென ரசிகர்களை நாம் கேட்டு உள்ளோம் என ரசிகர்கள் சங்கத்தின் உப தலைவர் செம் வான்ஹெஸ்ட் தெரிவித்தார்.

### காடைத்தனம்

1985ஆம் ஆண்டு பெல்ஜியத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட கலவரத்தின்போது 39பேர் கொல்லப்பட்டனர். கடந்த ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற ஐரோப்பிய கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகளின் போது பல வீதிச் சண்டைகள் இடம் பெற்றன.

உதைபந்தாட்ட ரசிகர்கள் தமக்கு ஆதரவான கோஷ்டி வெற்றி பெறவில்லை என்

வி.என்.எஸ். உதயசந்திரன்

### சலுகை உண்டு

நெதர்லாந்து தேசிய அணி ஆட்டங்களிலும் இவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்த கார்ட்டை வைத்திருப்போருக்கு விளையாட்டு சீருடைகள் விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் சஞ்சிகைகள் சலுகை விலையில் வழங்கப்படும் என்று அந்நாட்டின் உதைபந்தாட்டச் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வகையான கார்ட்டுகள் மூலம் உதைபந்தாட்டக் காடையர்களைத் தடுத்துவிட முடியாது என இத்திட்டத்துக்கு நெதர்லாந்து உதைபந்தாட்ட ரசிகர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ரசிகர்கள் இத்திட்டத்தை விரும்பவில்லை, ஆகவே இந்த

றால் தமக்கு எதிரான கோஷ்டி ஆதரவாளர்களை குத்தியும் வெட்டியும், கொலை செய்தும் இன்பம் அனுபவிப்பது நெதர்லாந்தில் மட்டுமல்ல பிரிட்டனிலும் நடைபெறுகின்றது. உலகிலே மிக மோசமான உதைபந்தாட்ட ரசிகர்கள் பிரிட்டன் ரசிகர்கள் என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் பொருத்தம்.

பிரிட்டன் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிரிட்டிஷ் பிரதமர் பத்திரிகையாளர் மாநாட்டில் அண்மையில் கூறியிருந்தார். உதைபந்தாட்டத்தில் நிலவும்காடைத்தனத்தை முறியடிக்கும் வகையில் இதே மாதிரியான அடையாள அட்டைத்திட்டத்தை ஏற்கனவே பிரிட்டிஷ் அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு மைதானம்

### வீரர்கள் அடையாள அட்டை

இது இப்படி இருக்க சட்டரீதியற்ற குத்துச் சண்டைப் போட்டிகள் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில் குத்துச் சண்டை வீரர்களுக்கு சர்வதேச ரீதியில் அடையாள அட்டைகளை வழங்குவது என உலக குத்துச் சண்டைக் கவுன்சில் தீர்மானித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் அமெரிக்காவின் அட்லாண்டா நகரின் முன்னுள் அதிபார குத்துச்சண்டைவீரர் ஜோர்ஜ் போர்மனுக்கும் பிறேசில் நாட்டு வீரர் மெனுவல் டி அல் மேய்டாவுக்கும் இடையே நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டி சட்டரீதியற்றது என்ற உண்மை தெரிய வந்தது. இதனை அடுத்தே இவ்வகைப் போட்டிகள் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று உலக குத்துச்சண்டைக் கவுன்சில் கூடி முடிவு செய்துள்ளது.

### சட்டரீதியற்றது

போர்மனுடன் மோதிய அல்மேய்டால் முன்னர் தென் ஆபிரிக்காவில் குத்துச்சண்டை போட்டிகளில் ஈடுபட்டவர். இவர் அதிகாரபூர்வமான அங்கீகாரம் இன்றியே போட்டிகளில் கலந்து கொண்டார் என பிறேசில் நாட்டு குத்துச் சண்டை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென் ஆபிரிக்காவில் விளையாடுபவர்களுக்கு உலகப் போட்டிகளில் கலந்துகொள்ள தடை இருந்து வருவதால் இவர்கள் இப்படியான அங்கீகாரம் இல்லாத போட்டிகளை நடத்தி அதில் பங்குபற்றியும் வருகின்றனர் என்ற உண்மை தற்போது தெரியவந்துள்ளது.

உலக குத்துச்சண்டைக் கவுன்சில் தென்ஆபிரிக்காவுடன் தொடர்புகளை துண்டித்துக் கொண்டிருப்பது தெரிந்ததே. இக் காரணங்களினல் அட்லாண்டாவில் நடைபெற்ற போட்டி சட்டரீதியற்றது என இக் கவுன்சில் தெரிவித்துள்ளது. இவ்வகையான குத்துச்சண்டைப் போட்டிகள் நடைபெறுவதைத் தடுக்க வீரர்களுக்கு சர்வதேச ரீதியாக செல்லுபடியாகக் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். இவ் அடையாளயான அட்டை வைத்திருப்பவர்களே சர்வதேச ரீதியாக நடைபெறுகின்ற போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப் படுவர் எனவும் தெரிய வருகிறது.

### கண்டுபிடிக்க சுலபம்

இவ் அடையாள அட்டை வழங்குவதன் மூலம் ஒரு குத்துச் சண்டை வீரனின் உடல் நலம் ஆரோக்கியம், ஆட்டத்தில் ஈடுபடக்கூடிய தகுதி ஆகியவற்றை எடைபோடக்கூடியதாகவும் இருக்கும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதால் குற்றச் செயல் புரிபவர்கள் உதைபநதாட்ட அரங்கிற்குள் செல்வது தவிர்க்கப்படுகின்றது அத்தோடு குற்றம் செய்வதை சுலபமாக அறிந்து கொள்ளவும் உதைபந்தாட்டப் போட்டிகளை சிறப்பாக நடத்தவும் இவ் அடையாள அட்டை முறை உதவுகின்றது.

குத்துச் சண்டை வீரர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதால் அவர்கள்தென் ஆபிரிக்க போட்டிகளில் விளையாடுவதை தடைசெய்வதுடன் தென் ஆபிரிக்காவுக்கு சென்றுவந்த வீரர்களுடன் அங்கீகாரமற்ற போட்டிகளிலும் கலந்து கொள்வதையும் இது தடுக்கின்றது.

அடையாள அட்டைமுறை எதிர்ப்பவர்கள்தான் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என உதைபந்தாட்ட அதிகாரி ஒருவர் கூறினர். எங்கு அளவுக்கு மீறிய சுதந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ அங்குதான் அளவுக்குமீறிய குற்றச் செயல்களும் நடக்கின்றன. இதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் சிறந்த உதாரணங்களாகும்.

# ஐ. நா. சமாதானப்பணி நோபல் பரிசு

வெடிமருந்துகளும், துவக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டதின் பின்னர்தான் யுத்தத்திஞல் அதிகளவு மக்கள் பலியாகத் தொடங்கினுர்கள். மோட்டார் வாகனங்கள், நீராவிக் கப்பல்கள், விமானங்கள், நீர்மூழ்கிக்கப்பல்கள் கண்டுபிடிக்கப்பட்டமையானது சிறிய சண்டைகள் வெகுவிரைவில் உலகப் போராகப் பரிணமிப்பதற்கு ஏதுவாக அமைகின்றன.

கடந்த இரண்டு உலக மகாயுத்தங்களையும் அநுபவத்தில் கண்டநாடுகள் அனுபவித்த வேதனைகளையும், துயரங்களையும் கவனத்திற் கொண்டு எதிர்காலத்தில் இனி ஓர் உலகமகாயுத்தம் ஏற்படாவண்ணம் தங்களுக்கிடையே ஏற்படக்கூடிய பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டதே ஐ நா சபையாகும்.

இந்த அமைப்பானது சமாதானப் பணியினை மட்டும் நோக்கமாகக்கொண்டு செயல்படாது மனிதகுல முன்னேற்றத்திற்கான வேறுபல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு அரும்பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே!

சமாதானப்பணி என்பது அவ்வளவு இலகுவானதல்ல. இதில் ஈடுபட்டிருப்பவர்கள் சிலவேளை தங்கள் உயிரையே அர்ப்பணிக்கவேண்டிய நிலைமையும் ஏற்படலாம்

1947–இல் பலஸ்தீன யுத்தத்தின் போது ஐ. நா. சபையின் நடுவராக கடமையாற்றிய சுவிஸ் நாட்டைச்சேர்ந்த Coont Berna-dotte படுகொலை செய்யப்பட்டார். இருந்தபோதிலும் கூட ஐ நா வின் சமாதானப் பணி எவ்விதமான தடையும் இன்றித் தொடர்ந்தது

ஐ நா. சபையானது சமாதானத்திற்கு எத்தகைய பணியினை ஆற்றியுள்ளது என்பதை சரியாக விளங்கிக் கொள்ளாத சிலர் இதனை ஓர் "பேச்சு மேடை" என்று கூறிவருகின்ருர்கள். ஆனுல் ஐ. நா. தனது வல்லமைக்குட்பட்டளவில் எடுக்கவேண்டிய நட

சி. ரகுலேந்திரன்

வடிக்கைகளை எடுப்பதற்கு எந்த நிலையிலும் பின்நின்றதில்லை.

1948–இல் இந்திய – பாகிஸ்தான், காஷ்மீர் பிரச்சனையின் போதும், 1950– இல் கொரிய யுத்தத்தின் போதும், 1964–இல் சைப்பிரஸ் யுத்தத்தின் போதும், 1960– இல் கொங்கோ பிரச்சனையின் போதும், ஆப்கானிஸ்தான் பிரச்சனையின்போதும் ஐ நா. சமாதானப்படைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன சமாதானப்படையினர் துப்பாக்கிச் சூட்டுக்கும், குண்டுவெடிப்புகளுக்கும் பலியாகிய போதிலும் அதன் பணி இடைநிறுத்தப்படவில்லை. இதன் காரணத்திஞல் இவர்களிடையே நிரந்தர சமாதானத்தினை நிலைநாட்டமுடியாது போனாலும் கூட இச் சண்டையினை மேன்மேலும் பரவாமல் தற்காலிகமாகவாவது சமாதானத்தை நிலைநாட்ட முயல்வது பாராட்டுக்குரியதே!

கடந்த எட்டுவருடங்களுக்கு மேலாக பத்துலட்சம் மக்களைப் பலிகொண்ட ஈரான்–ஈராக் யுத்தமானது வளைகுடாவில் ஏனைய நாடுகள் போக்குவரத்துச் செய்கின்ற உரிமையினைக்கூட பாதித்திருந்தது ஐ நா வின் முயற்சியினுல் அண்மையில் யுத்த நிறுத்தம் செய்யப்பட்டு சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 44 வருடங்களுக்கு மேலாக ஐரோப்பிய நாடுகளில் உள்நாட்டுக் குழப்ப நிலைமையோ, யுத்தமோ ஏற்படாத போதிலும் அது வல்லரசுகளின் ஆயுதப்போட்டியின் களமாக விளங்கலாயிற்று. மத்திய ஐரோப்பாவில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அணுவாயுத கேந்திர நிலையங்களும், நடுத்தர ஏவுகணைகளும் அமெரிக்கா–ருஷ்யாவினை நோக்கி நிறுத்தப்பட்டுள்ளன. இவை பரஸ்பர இராணுவ நிலைகளை மட்டுமல்லாது குடிமக்களையும் இலக்காகவே தான் கொண்டுள்ளன இந்த அணுவாயுதங்கள் ஒரு மில்லியன் ஹிரோஷிமா குண்டுகளுக்குச் சமமானதாகும். இத்தகைய நிலையினுல் ஐரோப்பா எங்கும் ஓர் பயங்கரமான நிலைமையே உருவாகியது மக்கள் பீதியுடன் வாழவேண்டிய நிலைமையாயிற்று. [14–ம்பக்கம் பார்க்க]


# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாக கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre** இல் படித்த மாணவர்களின் கருத்து

✳ உங்கள் பாடத்திட்டம் இலகுவில் விளங்கி கற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

செல்வி பவளமலர்
சிவன் கோவில் வீதி, உருத்திரபுரம்

✳ நான் படித்தவற்றில் இம்முறையே என் போன்ருேருக்கு உகந்தது.

என் நந்தகுமார்
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி

✳ மூன்று மாத கால பயிற்சியை முடித்ததும் எனக்குள்ளே பெருமகிழ்ச்சி ஏற்படவைத்தது உங்களின் ஆங்கில கல்வி முறையே.

அலி – சப்றி
நீரோட்டமுனை, ஓனன்குடா

✳ இப்போது தாராளமாக ஆங்கிலம் பேசக்கூடியதாக உள்ளது. இதற்கான பாராட்டு "பிறைட் ரெயினிங் சென்டரை"ச் சாரும்.

ந. நருலேஸ்வரன்
வைரவ புளியங்குளம், வவுனியா

✳ உங்கள் தபால் பாடவகுப்பில் சேர்ந்த எனக்கு உங்கள் பாடங்கள் நல்ல பலாபலனை அளித்துள்ளது

செல்வி சத்தியதேவி
சண்டுக்குளி, யாழ்ப்பாணம்

எமது கல்வித்திட்டம்பற்றி மேலதிகவிபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
P. O. Box 162 COLOMBO

03175

# சிறுவனின் விவேகம்

ஓர் ஊரிலே தாயும் மகனும் வறுமையால் வாடினர். ஓர் அரக்கன் அவர்களுடைய தந்தையைக் கொன்று அவர்களுடைய பொருள்களை கொள்ளையடித்து விட்டுச் சென்றதாலேயே அவர்கள் வறுமையால் வாடினர்.

உண்ண உணவின்றி வீட்டில் உள்ள பசுவை விற்கும்படி மகனிடம் தாய் சொன்னாள். உடனே மகன் பசுவை வீதிவழியாகக் கொண்டு சென்றான். அவனைக் கண்ட முதியவர் ஒருவர் நான் மாய மரக்கன்று தருகிறேன் இந்தப் பசுவைத் தா என்று கேட்டார். அவன் பசுவைக்கொடுத்து விட்டு மாயமரக்கன்றை வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

தாயிடம் அது மாயமரக்கன்று என்று கூறினான் தாய் அதை வாங்கி எறிந்தாள். நானும், நீயும் சாப்பிடாது சாவோம் என்று கூறினாள். அடுத்தநாள் அந்தச் சிறுவன் மாயமரக்கன்றை எறிந்த இடத்துக்குச் சென்று பார்த்தான். அங்கு மாய மரக்கன்று வானத்தைத் தொடும் அளவுக்கு வளர்ந்து இருந்தது உடனே தன் தாயைக் கூப்பிட்டுக் காட்டினான். அதில் ஏறினான்.

அங்கு ஒரு அரக்கனின் வீடு தோன்றியது. அங்கு சென்று பசியாக இருக்கிறது சாப்பாடு தாருங்கள் என்று கேட்டான். அங்குள்ள கிழவி சாப்பாடு கொடுத்தாள் அவளுடைய கணவன் வந்தபொழுது அச் சிறுவனை ஒளித்துவைத்தாள் அவளுடைய கணவன் எங்கேயோ மனிதவாசம் அடிக்கிறது என்று கேட்டான். அந்தக் கிழவி நேற்று வாங்கிய இறைச்சி என்று பொய்க்குச் சொன்னாள். அவன் உறங்கும் பொழுது சிறுவன் மெதுவாகத் தன் வீட்டுக்குச் சென்றான் அங்கு நடந்தவற்றைத் தன் தாய்க்குக் கூறினான். அவனுடைய தாய் அவன் தான் உன்னுடைய அப்பாவைக் கொன்றவன் என்று கூறினாள் உடனே அவன் அந்த மரத்தில் ஏறினான் அங்குள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்லும்போது அரக்கன் கண்டுவிட்டான். உடனே அவனைத் துரத்திச் சென்றான்.

அச் சிறுவன் ஓடிச்சென்று அம்மா கோடாரியைக் கொண்டுவாருங்கள் என்று கூறினான். தாய் கொண்டு வந்துகொடுத்தாள். அவன் அந்த மரத்தை வெட்டி விட்டான் அரக்கன் விழுந்து இறந்தான்.

லோ விஜயநாதன்
(அங்கத்தவர் இல. 68)

## ஆனை உண்ட விளாம்பழம்

சில தேங்காய்கள் உள்ளேகருகிக் கெட்டுப் போய் இருக்கும் அதைத் தேரை மூசுந்தகாய் என்கிறோம் தேரைகள் தேங்காயை மூசப்பதில்லை தேங்காய் நோய்க்குத் தேரை என்றுபெயர்

இதேபோல் ஆனை உண்ட விளாம்பழம் என்பதில் ஆனை என்பது விளாம்பழத்திற்கு வரும் ஒருவித நோயைக் குறிக்கிறது.




## சின்னப் பாப்பா கேட்பாயே!

சின்னஞ் சிறிய பாப்பாவே
சொல்லும் செய்தி கேட்பாயே
நன்மை சேர்க்கும் கல்வியினை
நாடி நீயும் ஏற்பாயே!

காந்தி வாழ்ந்த வாழ் வைப்பார்
கற்றோர் சொல்லும் கருத்தைக்கேள்
சாந்தம் முதலாம் நற்குணங்கள்
தம்மை வாழ்வில் தேடிக்கொள்!

தமிழை விரும்பிக் கற்பாயே
தந்தை தாயை மதிப்பாயே
அமிழ்தை மொழியாய்த் தருவாயே
அன்பே செல்வம் அறிவாயே!

தேக சுகத்தைக் காத்துக்கொள்
தேகப் பயிற்சி நாடிச் செய்
பாகு நிகர்த்த சொல்லாலே
பண்பை என்றும் வளர்ப்பாயே!

பா. மகாலிங்கசிவம்

## மருத்துவக் கண்டுபிடிப்புகள்

1. உஷ்ணமானி — யன்சோ கியூறிஸ்
2. மயிர்த்துளைக் குழாய் — மல்பீசியன்
3. குருதிச்சுற்றோட்டம் — வில்லியம் ஹார்வே
4. நுணுக்குக்காட்டி — அன்ரன் வன்லீயன் கொக்
5. அம்மைப்பால் — எட்வேட் ஜென்னர்
6. விசர்நாய்க்கடிமருந்து — லூயி பாஸ்ரர்
7. றேடியம் — மேரி கியூறி அம்மையார்
8. பென்சிலின் — அலெக்சாண்டர் பிளமிங்
9. டெலஸ்கோப் (தொலைநோக்காடி) — லெனேக்
10. கசநோய்க்கிருமி — றெபேட் கொக்

கு. திருச்செல்வி
(அங்கத்தவர் இல. 27)

## பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 231 பரராசசிங்கம் பரசுகன்
வயது 11, ஹாட்லி கல்லூரி,
பருத்தித்துறை

இலக்கம் 232 தனபாலசூரியர் மைதிலி
வயது 12. கன்னியர் மட
மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்

இலக்கம் 233 யோகராசா ஜெயகாந்
வயது 12, யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பணம்

இலக்கம் 234 சின்னத்தம்பி சுமதி
வயது 12, வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்

இலக்கம் 235 சின்னத்தம்பி சுகந்தி
வயது 09, யாழ் இந்து மகளிர்
ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்

இலக்கம் 236 யோன்பிள்ளை சுசீந்திரன்
வயது 13, உசன் இராமநாதன்
மகாவித்தியாலயம், மிருசுவில்

இலக்கம் 237 சிதம்பரநாதன் நாகதாசன்
வயது 11, திருஞானசம்பந்த
வித்தியாலயம், வட்டுக்கோட்டை

இலக்கம் 238 நளாயினி சந்திரன்
வயது 07, மயிலணி
மகாவித்தியாலயம், சுன்னாகம்

இலக்கம் 239 சுபாஷினி சிறீசுரன்
வயது 11, வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

இலக்கம் 240 துரைரத்தினம் ஜெயதீபன்
வயது 13, ஹாட்லி கல்லூரி,
பருத்தித்துறை.

## விலங்குகள் விதம் விதம்: 20

# நாய்

நாய்கள் படுக்கையில் கனவு காண்பதுண்டு. தூக்கத்தில் காலை ஓடும் பாவனையில் காட்டுவது, வாலாட்டுவது எல்லாம் நாய்களின் கனவில்தான் என உயிரியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

உலகிலே அமெரிக்காவில் தான் மிக அதிகமான நாய்கள் உள்ளன.

தாய்வானில் 'நாய்கள் பந்தயம்' பிரபல்யமானது. இங்கு குதிரை றேஸ்போல் நாய்கள் மீது பந்தயம் கட்டுவார்கள்.

இங்கிலாந்தில் ஆண்டுக்காண்டு நடைபெறும் நாய்க் கண்காட்சி பிரபல்யமானது. இதில் தங்கள் நாய்கள் கலந்து கொள்வதையே பெருமையாகக் கருதுகின்றனர் இங்கிலாந்தினர்.

உலகிலேயே உயரமான நாயினம் ஜேர்மனியில் உள்ள 'கிரேட்டன்' இனமாகும் உலகிலேயே மிக உயரமான நாய் 'டேனிஸ்' என்ற அமெரிக்க நாயாகும். இது 41 அங்குலம் உயரமுடையது.

உலகின் சிறிய நாயினம் 'சிக்குவா' இது அதிகமாக 9 அங்குலத்திற்கு மேல் வளராது இது ஒரு மெக்ஸிகோ நாயினமாகும்.

நாய் 40 ஆண்டுகள்வரை வாழும் திறனுடையது.

அவுஸ்திரேலியாவிலுள்ள 'டிங்காஸ்' இன நாய்கள் குரைப்பதில்லை. நாயின் மூதாதை 'சைனோடிக்டிஸ்' இன விலங்காகும். இது மிக நீளமான வாலை உடையது

எவரெஸ்ட்டை அடைந்த எட்மண்ட் ஹிலரியுடன் சங்கர் என்ற ஒரு 'நாயும்' சென்றது.

துப்பறியும் நாய்கள் வாசனைகளை நுகரும் திறனுடையவை.

எப்படி? நாய்களைப்பற்றி தெரிந்து கொண்டீர்களா?

✶ தி. தவபாலன்

## இதனால் இவர் உயர்ந்தார்

அரிச்சந்திரன் — வாய்மை
கர்ணன் — கொடை
வீமன் — வலிமை
மகாத்மா — அஹிம்சை
தருமர் — பொறுமை
துரியோதனன் — பொறாமை
நாரதர் — கலகம் உண்டாக்குதல்
விஜயன் — வில்வித்தை
மணிமேகலை — துறவு
வசிட்டர் — தவம்
கண்ணகி — கற்பு
ஜவகர்லால் நேரு — தேசசேவை
நளாயினி — பதிபக்தி
ஔவை — கல்வி
கம்பர் — கவிதை
பிரகலாதன் — கடவுள்பக்தி
இராமன் — பெற்றோர் சொற் தவறாமை
பரதன் — சகோதர அன்பு

சிவபுண்ணியம்
காயத்திரி

## இப்படி எழுதாதீர்கள் — இப்படி எழுதுங்கள்

| இப்படி எழுதாதீர்கள் | | இப்படி எழுதுங்கள் |
|---|---|---|
| சமயல் | — | சமையல் |
| வீட்சி | — | வீழ்ச்சி |
| வைக்கல் | — | வைக்கோல் |
| மானிலம் | — | மாநிலம் |
| நொங்கு | — | நுங்கு |
| அருவாள் | — | அரிவாள் |
| செய்நன்றி | — | செய்ந்நன்றி |
| தலகணி | — | தலையணை |
| நிலமை | — | நிலைமை |

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..........................................

வயது: ..........................................

பாடசாலையின் பெயர்: ..........................................

கல்விகற்கும் வகுப்பு: ..........................................

வீட்டு முகவரி: ..........................................

கையொப்பம்: ..........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.......................... ..........................
திகதி — பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

## 12-03-1989 — 18-03-1989

**மேடம்:** பெரியோர் ஆசி, பொருள் நட்டம், வாகன மாற்றம், பெண்களால் கவலை, தூரப்பயணம், இடப்பிரிவு, புத்திரசுகம், பிரிந்தவர் ஒன்றுகூடல், கல்வியால் தொழில், புதுமனைச் சேர்க்கை, பூமி இலாபம்.

**இடபம்:** பணவரவு, வாகன லாபம், தேடியவர் வருகை, மகப்பேறு, புண்ணியவழிபாடு, புதுமனை சேர்க்கை, கல்வியால் தொழில், பிரிந்த காதலர் சேர்வார்கள், வெளியூர் செய்தியால் நன்மை.

**மிதுனம்:** இலட்சுமி கடாட்சம், புகழ்வரும், இளைய சகோதர உதவி, வாகன லாபம், மனை பூமி சேர்க்கை, வெளியூர் போனவர் வருகை.

**கடகம்:** உயர்பதவி, பெரியோர் ஆசி, மங்கள காரியம் நடைபெறும், வாகன லாபம், வாணிபர் கடற்றொழிலாளர் லாபம், இளைய சகோதரர் உதவி, எண்ணியது நடக்கும்.

**சிங்கம்:** புகழ்தேடி வரும், வாகன லாபம், பணவரவு, சுகஜீவியம், மூத்த சகோதரர் வழி உதவி, விவாகம், வெளியூர் செய்தி, மனைவியால் நன்மை.

**கன்னி:** வரவுக்கு மேல் செலவு, வாகன நட்டம் தூரதேசம் போனவர் வரவு, பணம் வரும், காதலர் சேருவர், புத்திரர் மகிழ்ச்சி.

**துலாம்:** பணவரவு, விவாகம், வாகன லாபம், எண்ணியது நடக்கும், காதலர், கலைஞர் மகிழ்ச்சி கடற்றொழிலாளர் நன்மை.

**விருட்சிகம்:** எண்ணியது தடை, பெரியோரால் உதவி, இளைய சகோதரர் உதவி, புதிய தொழில், புண்ணிய காரியம், மங்கள காரியம் நடக்கும்.

**தனுசு:** மாதாவழி உதவி, புத்திரர் சுகம், வாகன மாற்றம், இலட்சுமிகடாட்சம், சுகஜீவியம், எண்ணியது நடக்கும், பெரியோர் உதவி.

**மகரம்:** பிதாவழி உதவி, எண்ணியது நடக்கும், வெளியூர் பயணம், பிரிந்தவர் கூடுவர், கல்வியால் நன்மை, புகழ் தேடி வரும்.

**கும்பம்:** தொழில் மாற்றம், பிரிந்த காதலர் சேரல், வெளியூர் செய்தி, வணிகர், கடற்றொழிலாளர் நன்மை, இயந்திரத் தொழிலாளருக்கும் நன்மை.

**மீனம்:** வாகன சுகம், மங்கள காரியம் நடக்கும், இளைய சகோதரர் வழியுதவி, கடன் பணம்கிடைக்கும், பெரியோர் உதவி.

## இந்துபோர்ட் . . .

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

### பாடப்புத்தகங்கள்

விசாரணைக் குழுவினரோடு வித்தியாவிருத்தி சம்பந்தமாக இராசரத்தினம் அவர்கள் விளக்கங்கள் கூறிவந்தபோது அவர்கள் உன்னிப்பாகக் கேட்டு வந்தார்கள். பாடப் புத்தகங்கள் சம்பந்தமாகப் பேச்சு வந்தபோது நல்ல தரமான புத்தகங்களை நியமித்தால், அவற்றை அடிக்கடி மாற்றத் தேவையில்லை என்றார். தாய்மொழிக் கல்விக்கு ஏற்றம் கொடுத்தல் வேண்டும் எனக்கோரிக்கை எழும் வேளையில் மொழிப் பயிற்சியும் தரமாய் அமைதல் வேண்டும்.

பின்னர் அன்றைய பிரச்சனைக்குரியதும் எல்லோரும் எழுந்தபாட்டில் இராசரத்தினம் அவர்கள்மீது ஏற்றுவதுமான ஆசிரியரின் மாதாந்த உபகரிப்புச் சம்பந்தமாகப் பேச்சு எழுந்தபோது, இவர் உண்மை என்றும் தாம் முகாமைக்குரிய உபகரிப்பு அறவிடுவதுமுக்காலும்உண்மை என்றும்ஒப்புக் கொண்டார் இந்த உபகரிப்பைப்பற்றி மேலும் விளக்கியபோது, ஏறக்குறைய நூறு பாடசாலைகளில் ஆசிரியர்கள் மனமுவந்து தங்கள் வேதனத்தில் நான்கு வீதம் கொடுக்கின்றார்கள் என்றும், சிலர் கொடுப்பதில்லை என்றும் சிலர் ஒழுங்காகக் கொடுப்பதில்லை என்றும் கூறினார்.

[ தொடரும் [

## காலங்கள் . . .

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

''ஏன்டா ரகு அப்படி ஏதும் உனக்கு மனதில இருந்தா சொல்லடா. நாங்கள் இனி மேல் உன் சோலிக்கே வரல'' என்றான் சுதாகர்.

கதிரையை விட்டெழுந்தான் ரகுவரன் அவனுடைய முகத்திலிருந்த புன்னகை மாறி விட்டிருந்தது. அவனுடைய மன உணர்வுகளை புரிந்துணர முடியாது போன நண்பர்களுக்த புத்தி புகட்டியே ஆகவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

''ஏன்டா வெளியே ஓடப் போறியா?'' என்று பாய்ந்து சென்று கதவைச் சாத்திப் பூட்டினான் சிறி.

''சிறிநான் அவ்வளவு கோழையில்லையடா. என்றைக்கோ ஒரு நாளைக்கு என்னை, என் நிலையை நீங்களாகவே புரிந்து கொண்டு என்னை தொல்லைப் படுத்த மாட்டீங்க என்ற ஒரு நம்பிக்கையிலிருந்தேன் அதனாலேதான் மௌனமாயிருந்து உங்கள் வசை அம்புகளை எல்லாம் மலர்க்கணைகளாக தாங்கிக் கொண்டேன். எருதின் வலி காக்கைக்கு தெரிவதில்லை என்பதை நீங்கள் நாளுக்கு நாள் உணர்த்திக் கொண்டே வந்துள்ளீர்கள். இன்றைக்கு என் இதயத்தையே பிய்த்து எறிந்திட்டீர்கள்'' என்று கூறியவன் ஆக்ரோசத்தால் மேசை மீது முஸ்டியால் குத்தினான்.

(வளரும்)

## மூவேந்தர் . . .

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள் மேல் நீண்டும் தன்கை''

களிறு தன் தும்பிக்கையை இடையிடையே மேலே தூக்குவது இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி. அதனைத் திங்களைப் பறித்துப் பங்கம் செய்யத் தன்கையை நீட்டியது எனத் தற்குறிப் பேற்றமாசக் கூறியிருப்பது பாடல் சுவைக்கு மெருகூட்டுகின்றது.

### கதவு படும்பாடு

நாடு காக்கும் காவலனாகிய சேரமன்னன் தன் அழகிய தேரின் மீது பவனிவந்து கொண்டிருந்தான். அவன் வருகையை அனைவரும் ஏற்கனவே அறிந்திருந்தனர் பருவமடைந்த தனது ஒரே மகள் அவன் தோற்றப் பொலிவினைக் கண்டு மனதைப் பறிகொடுத்துப் பின் வருந்தப் போகிறாளே என்றுநினைத்து அவளது அன்னை கதவை அடைத்துச் சென்றுவிடுகிறாள். ஆனால் தலைவியோ மன்னனை ஒரு முறையாவது பார்த்துவிட வேண்டுமென்ற துடிப்பினால் கதவை மீண்டும் திறந்து விடுகிறாள்.

இதனைக்கண்டு விட்ட தாய் அதைத் தாளிட்டு விடுகிறாள். தலைவி சும்மா இருப்பாளா? ஆற்றாமை மீதூரப் பெற்ற அவள் தன் உள்ளம் கவர்ந்த இனியவனை ஒரேயொரு முறையாவது தரிசித்துவிடவேண்டுமென்ற ஆதங்கத்தினால் அதைத்திறந்து விடுகிறாள் இப்படிப் பலமுறை நடந்ததால் கதவின் குடுமியே தேய்ந்து விடுகிறது அக்காலத்தில் அன்னையர் தம் பெண்களை நற்குணநற்செயலுடையவராக வளர்க்க எத்துணையளவிற்கு முயற்சித்தார்கள் என்பதைப் பாடல் விளக்குகிறது.

'தாயர் அடைப்ப மகளிர் திறந்திட
தேயத் திரிந்த குடுமியவே-ஆய்மலர்
வண்டுலா அம் கண்ணிவய மான் தேர்க் கோதையை
கண்டுலா அம் வீதிக் கதவு!'

முத்தொள்ளாயிர ஆசிரியரின் கற்பனையில் உதித்த கதவுக் குடுமிபற்றிய புதுமையான கற்பனையை கலிங்கத்துப்பரணியில் அதன் ஆசிரியர் ஜெயங்கொண்டானும் கையாண்டிருப்பது ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும்.

'வருவார் கொழுநர் எனத் திறந்தும் வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகும் குடுமி விடியளவும் தேயும் கபாடம் திறமினோ'

போருக்குச் சென்றதம் கொழுநர் போர்முடித்து வருவாரோ என மனைவியர் கதவைத் திறந்து மூடிய வண்ணம் கதவுக் குடுமி தேய்ந்து விட்டதாம்.

வீதி உலா வந்த சேர மன்னனைக் கண்ட மங்கையின் மனம் சிறகடித்துப் பறக்கின்றது அவனைப் பற்றிப் பலவாறாக எண்ணி கற்பனை உலகில் சஞ்சரிக்கின்றாள். இவன் யாராக இருக்கக்கூடும்? இந்திரனென்றால் இவனுக்கு இரண்டு கண்தானே? சிவனென்றால் பெருமனாரின் பிறையை இவன் சூடவில்லையே முருகனெனில் இவனுக்கு ஒரு முகம் தானே? மன்னன் கோதை இவர்கள் அத்தனை பேரையும் விட உயர்ந்தல்லவா தோன்றுகின்றான்.

'இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த
அந்தரத்தான் என்னிற் பிறையில்லை-அந்தரத்துக்
கோழியான் என்னின் முகம் ஒன்றே கோதையை
ஆழியான் என்றுணரற் பாற்று'

இப்பாடலில் தலைவியின் ஐக்கியத்தில் பிறக்கும் அழகு இலக்கிய விருந்தாகின்றது.

(அடுத்த வாரம் முடியும்)

## ஐ நா. சமாதானப் . . .

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

ஐ. நா. சபை இந்நிலைமைகளை மாற்றுவதற்குப் பல்வேறு இராஜதந்திர நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அதிக வெற்றியும் கண்டது மத்திய ஐரோப்பாவில் இதுவரை காலமும் மக்களை அச்சுறுத்தி வந்த நடுத்தர அணுவாயுத ஏவுகணைகளை படிப்படியாக அகற்றுவதற்கு வல்லரசு நாடுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் ஏற்றுக்கொண்டன. இந்நிலைமையானது எதிர்காலத்திலும் அணுவாயுதக் குறைப்புகளுக்கும் வழிகாட்டியாக அமையலாம்.

இத்தகைய நிலைமையினால் ஐரோப்பிய மக்கள் மட்டுமல்லாது உலக மக்களே மிகுந்த மகிழ்ச்சியடைகின்றனர். எனவே இதற்காகவேதான் சமாதானத்திற்கான நோபல் பரிசு ஐ நா. சபைக்கு கிடைத்திருக்கின்றது.

ஐ. நா. சபை ஆபிரிக்காவில் இருந்த ஐந்துலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளுக்கு உணவு, உறைவிடம், கல்வி ஆகிய புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டு திறம்பட செயலாற்றியமைக்காக 1954 இல் சமாதானத்திற்கான முதலாவது நோபல் பரிசு வழங்கப்பட்டது.

வல்லரசு நாடுகள் தங்களுடைய வெளிநாட்டுக்கொள்கையினை நிறைவேற்றவும், பிராந்திய சமபல கொள்கையினை அமுலாக்கவும் ஆயுத விற்பனை செய்து வருகின்றன. தனது பொருளாதார நலனுக்காக ஆயுத விற்பனை என்பது இரண்டாம் பட்சமாகவே இருக்கின்றது. அத்துடன் இவை உலகின் பின்தங்கிய நாடுகளுக்கே ஆயுதங்களை விற்பனை செய்வதினால் இந்நாடுகளில் அரசியல் குழப்பநிலைமை ஏற்படவும், யுத்தத்தினால் பெரும் அழிவுகள் ஏற்படவும் காரணமாகிறது

ஐ. நா. சபை நாடுகள் தங்கள் சுய பாதுகாப்பிற்காகவன்றி, ஏனைய நோக்கங்களிற்காக ஆயுதங்களைக் கொள்வனவு-விற்பனை செய்வதனைக் கட்டுப்படுத்தி பின்தங்கிய நாடுகளின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தி செயற்படுவதன் மூலம் உண்மையான சமாதானத்தை அடைவதில் சிரமமிருக்காது என்பதுடன் ஐ. நா சபையானது இதற்கான முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

## ஓசோன் . . .

[5- ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்துகொண்டிருந்தனர். பொககீட் விமானத்தில் குழுக்களாகத் தென்துருவத்தின் மேலாகப் பறந்து சென்று ஓசோன் ஓட்டையைப் பற்றிய பல்வேறு தரவுகளையும் சேகர்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்களின் பெரும் பகுதியினர் மற்றையோர்-2 உளவு விமானத்தில் வளி மண்டலத்திற்கு மேலால் சென்று ஓசோன் ஓட்டை பற்றி உளவு பார்த்தனர்.

கனேடிய நகரமான மொன்ரீலில் கூடியிருந்தோர் வேறுவகையான பணியில் ஈடுபட்டிருந்தனர். ஓசோன் ஓட்டை மேலும் விரிவடையாமல் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்தனர் அவர்கள். 35 நாடுகளின் விஞ்ஞானிகள் அந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் முக்கியமாக ஆராய்ந்தது ஓசோனின் விரோதியை எப்படிக்கட்டுப்படுத்துவது என்பதே. விரோதியை விஞ்ஞானிகள் நன்றாக இனம் கண்டு கொண்டு விட்டனர். உங்களில் சிலர் 'சென்ற்' பாவிக்கக்கூடும். சில 'சென்ற்' போத்தல்களின் வெளிமூடியைத் திறந்துவிட்டுத் தலையில் பெருவிரலால் அமர்த்தினால் 'சென்ற்' வீசியடித்துக் கொண்டு சிறு சிறு துளிகளாக வெளியே வரும். நுளம்பு கொல்லிகள், பூச்சி கொல்லிகள் தீந்தை முதலிய பல பொருட்கள் இத்தகையபோத்தல்களிலும் தகரங்களிலும் அடைத்து விற்கப்படுகின்றன.

விசிறிகளில் குளோரோ புளோரோ காபன்கள் எனப்படும் இரசாயனம் பதார்த்தங்கள் உள்ளன. குளோரீன் வாயுவையும், புரோமீன் வாயுவையும் காபன்களையும் சேர்த்து உருவாக்கப்பட்ட வாயுக்கள். இவை நச்சுத்தன்மையற்றவை. மற்ற பதார்த்தங்களுடன் தாக்கத்திலீடுபடாத சடத்துவ இயல்பையும் உடையவை, இந்த இரசாயனப் பதார்த்தங்கள் ஜெனரல் மோட்டேர்ஸ் என்ற பெயரையுடைய மோட்டார் வாகன உற்பத்திக் கம்பெனியின் இரசாயன நிபுணர்கள் 1928 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது குளிர்ப் பெட்டிகளிலும் குளிராக்கும் சாதனமாகப் பயன்படுத்தப்படும் இவ்விரசாயனப் பொருள் பெருமளவில் இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்த அதிசய இரசாயனப், பொருள்' ஓசோனை அழிக்க வல்லது என்பதை ரோலன்ட். மொலினா என்ற வளிப்பௌதிகவியலாளர்கள் 1974ஆம் ஆண்டில் கண்டுபிடித்தனர். துணிக்கைகள் வளியின் மேற்பகுதிகளில் மிதந்து கொண்டிருப்பதை அவதானித்த ரோலன்ட் அவை அங்கு என்ன செய்கின்றன என்பதை அறிய ஆவல் கொண்டார். அவை ஓசோனை அழிப்பதைக் கண்டு அவர் ஆச்சரியமடைந்தார் ரோலன்ட்டின் அவதானிப்பு உண்மையே என்பது சென்ற செப்ரெம்பர் மாதத்தில் பார்னி பாமல் என்ற அமெரிக்க விஞ்ஞானியால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

அணுக்கள் ஓசோனை எப்படி அழிக்கின்றன என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியாது. வளிமண்டலத்தின் மேற்பகுதிக்கு மிதந்து சென்ற மூலக்கூறுகள் சூரியன் பொழியும் ஊதாக்கடந்த கதிர்களால் உடைக்கப்படுவதாக விஞ்ஞானிகள்கருதுகின்றனர். அப்பொழுது விடுவிக்கப்படும் குளோரீன அணுக்கள் ஓசோனைத் தாக்கி அதிலுள்ளமூன்று ஒட்சிசன் அணுக்களில் ஒரு அணுவை பறித்தெடுத்து குளோரீன் ஓரோட்சைட்டை உருவாக்குகின்றது ஓர் ஒட்சிசன் அணுவை இழந்தஓசோன் மூலக்கூறு ஒட்சிசன்மூலக் கூறாகத் தாழ்த்தப்படுகின்றது. குளோரீன் ஒரொட்சைட்டிலுள்ள ஒட்சிசன் அணு சுதந்திரமான வேறு ஒட்சிசன் அணுவுடன் சேர்ந்துகொண்டு ஒட்சிசன் மூலக்கூறை உருவாக்குவதனால் குளோரீன் அணு மீண்டும் தனித்து விடுகின்றது அந்தச் சுதந்திர குளோரீன் அணு மீண்டும் ஓசோன்மூலக்கூறைத் தாக்கி அதிலுள்ள ஒட்சிசன் அணுவைப் பறித்தெடுக்கும். இந்தத் தாக்கம் சங்கிலித்தொடராக நடந்து கொண்டிருக்கும் உயர் வளிமண்டலப்பகுதியில் விடுக்கப்படும் ஒவ்வொருகுளோரீன் அணுவும் பல ஆயிரம் ஓசோன் மூலக்கூறுகளை அழிக்க வல்லன என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்

மொன்ரீல் நகரில் கூடிய விஞ்ஞானிகள் உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர் உற்பத்தியை இன்றுள்ள அளவிலேயே வைத்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் தீர்மானித்தனர். எல்லா நாடுகளும் உற்பத்தியைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்ற வற்புறுத்தல் இப்பொழுது அதிகரித்து வருகின்றது.

— ஐ எஸ் எஸ்.

## பண்டிதர் ஐயாவின். . .

[4-ம் பக்கத் தொடர்ச்சி...]

நாவலர் பெருமான் அவர்கள் குறித்த கந்த புராண படனத்தோடு ஒப்பிடத்தக்கது தனங்கிளப்புப் பிள்ளையார் கோயிலில் இடம் பெற்ற பெரிய புராண படனம் எனலாம்

### புட்டுக் (பிட்டு) கடகம்

பாதயாத்திரைத் தொண்டர்கள் அதிகாலை ஐந்து மணி அளவில் மீண்டும் தமது பாதயாத்திரையை ஆரம்பித்தனர். காலை ஏழு மணியளவில் கேரதீவை அடைந்தனர். அவர்களும் போய்ச்சேர துவிச்சக்கர வண்டியில் ஒருவர் அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார். துவிச்சக்கர வண்டியின் பின்ஆசனத்தில் பெரியதொரு கடகம் கட்டப்பட்டிருந்தது. கடகத்தை மூடி ஒரு வெள்ளைத்துணி. துவிச்சக்கர வண்டியில் வந்தவர் தொண்டர்களை நோக்கி 'இந்தக் கடகத்தை உங்களிடம் கொடுக்குப்படி கணபதிப்பிள்ளைப் பண்டிதர் தந்தவர்; ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறியவாறு கடகத்தைத் தூக்கி நீட்டினர். தொண்டர்களுக்குப் பெருந்திகைப்பாயிருந்தது. கடகத்தில் அப்படி என்ன இருக்கலாமோ என்ற ஆசங்கை ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுந்தது. தொண்டர் ஒருவர் கடகத்தை வாங்கினுர். இன்னொருவர் மெத்த ஆவலுடன் கடகத்தை மூடி இருந்த வெள்ளைப் புடைவையை இலேசாக நீக்கிப் பார்த்தார். தொண்டர்கள் பேராச்சரியமுற்றுர்கள். கடகம் நிறைய ஊர் அரிசிப் பிட்டும் கறிவகை பொரியல்வகைகளும் கடந்த இரவு தனங்கிளப்புப் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பான முறையில் செவிக்குணவளித்த பண்டிதர் ஐயா அவர்கள் இப்பொழுது வயிற்றுக்கும் உணவு அனுப்பி வைத்தார்களே என்று பெரிதும் இறும்பூதெய்தினுர்கள் தொண்டர்கள்.

தொண்டர்கள் தங்கள் நியம நிட்டைகளை முடித்துக் கொண்டு பண்டிதர் ஐயாவின் அன்பு கெழுமிய பிட்டை உண்ணத் தொடங்கினர் அவர்களுக்கு அந்தநேரம் செம்மனச் செல்வியின் ஞாபகந்தான் வந்தது என்று தொண்டர் ஒருவர் குறிப்பிட்டார்.

வைகைக்கரை அடைப்பதற்குக் கூலியாள் வேஷம் பூண்டு வந்தவரான சிவபெருமான் செம்மனச் செல்வியாரின் பிட்டை.

'பிட்டு நன்றென்று கூறிப்
பிறைமுடி அசைப்பார்
வேடன்
இட்டமென் தசையிற் சால
ஈசனுக் காமி தென்பார்'

என்று சொல்லிச் சொல்லிச் சுவைத்ததுபோல பண்டிதர் ஐயா அனுப்பிவைத்த பிட்டையும் திருக்கேதீசுவரம் பாதயாத்திரைத் தொண்டர்களும் சுவைத்துச் சுவைத்து உண்டனர்.

புட்டுக் கடகக் கதையை எனக்கு இப்பொழுது ஞாபக மூட்டியவர் அப்பொழுது பாதயாத்திரையில் ஈடுபட்ட தொண்டர்களில் ஒருவரான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகர் திரு சி. முருகவேள் அவர்கள் என்பது ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் அகதிகளின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் அகதிகள் இருப்பதையிட்டு ஐரோப்பிய நாடுகள் வெறுப்புத் தெரிவித்த போதும், இப் பிரச்சனை தொடர்பாக பல்வேறு மதஸ்தாபனங்களும், மனித உரிமை நிறுவனங்களும் ஆற்றிய சேவைகளை நாம் நன்றியுடன் நோக்குதல் அவசியம். 1985 ஏப்பிரல் மாதத்தில் இலங்கையிலுள்ள அகதிகள் நிலைபற்றி அறிக்கையிடுவதற்காகவிசேட பிரதிநிதியொருவரை ஒல்லாந்து அரசாங்கம் அனுப்பி வைத்தது. அவர், தமிழ் அகதிகளை தென்னிலங்கைக்கு அனுப்பிவைப்பது மிகவும் பாதுகாப்பானது எனத் தெரிவித்திருந்தார். பல ஒல்லாந்து நிறுவனங்கள் இதற்கெதிராக, வன்மையாக கிளர்ந்தெழுந்தன. முடிவை மாற்றும்படி அரசாங்கத்தை வற்புறுத்தின. இதே போன்று சுவிஸ் அரசாங்கமும் 1984-ஒகஸ்டில் சுவிஸ் பொலிஸ் கணிப்பாளரை, சுவிற்சலாந்திலிருந்து தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்ப வசதியுண்டா என ஆராய்ந்து வருமாறு அனுப்பியிருந்தது. ஒரு தொகுதி சமய மற்றும் மனித உரிமைவாதிகள் இதனைப் பெரிதும் ஆட்சேபித்தனர். இவர்கள் மாற்று அறிக்கையொன்றை வெளியிட்டனர். அதற்குப் பெரிய வரவேற்பும் கிடைத்தது. சுவிஸ் பத்திரிகையாளர்கள் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து திருகோணமலையில் தமிழ்க் குடிமக்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் பற்றியும் தெரிவித்தனர். இதுவும் பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டப் பெரிதும் உதவியது. திருச்சபையினர் கூட அகதிகளுக்குத் தஞ்சம் கொடுத்துப், புகலிடம் மறுக்கப்பட்டவர்களை பாதுகாத்து வைத்திருந்தனர்.

ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் உள்ள தமிழ் அகதிகளின் எதிர்காலம் அவதி நிறைந்ததாகவே தென்படுகிறது.

அவர்களின் நிலைமையை நாம் புறக்கணித்து விடக் கூடாது. அவர்கள் சர்வதேச மனிதாபிமான தரங்களுக்கு ஏற்ப நடாத்தப்பட வேண்டும் என நாம் வலியுறுத்த வேண்டும். முதலாவதாக எந்தவொரு அகதியும் கட்டாயமாக இலங்கைக்கு திருப்பியனுப்பப்படலாகாது. எவரும் கண்மூடித்தனமான வன்முறை நிலைமைக்கு ஆளாகுமாறு கட்டாயப் படுத்தப்படலாகாது. அவ்வாறு செய்வது மனிதாபிமான மற்றதும் கூட.

இரண்டாவதாக, அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான திட்டம் தன்னிச்சையான அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்: அது நாட்டின் நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய பின்னரே. நாட்டின் பல்வேறு பாகங்களில் நிலவும் உண்மையான நிலைமைபற்றி ஐரோப்பிய அரசாங்கங்கள் அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தானிகராலயத்தினுல் அறிவிக்கப்படவேண்டும்.

மூன்ருவதாக, எந்த அகதியும் தான்திரும்பிச் செல்ல விரும்பும்சமூகத்தினுள் கலந்து கொள்ளத்தக்க மாற்று வழிவகைகள் கொடுக்கப்பட்டாலொழிய, தன்னிச்சையாகக் கூட நாடு கடத்தக் கூடாது பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். தொழில் வாய்ப்புகள் கிடைக்கச் செய்யப்பட வேண்டும். பாதுகாப்பான நிலைமையின் கீழ் போதிய குடியிருப்பு வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டும்,

நான்காவதாக, தாமாக விரும்பி இலங்கைக்கு வரும் அகதிகளுக்கெதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடாது. அரசியல் பாரபட்சம், காட்டக் கூடாது இவை இடம் பெருவண்ணம் சுயாதீனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

இறுதியாக, அகதிகளுக்கான ஐ. நாடுகள் ஸ்தானிகராலயம் ஐரோப்பிய நாடுகள் சர்வதேச மனித உரிமைத் தராதரங்களைப் பேணிக் கடைப்பிடிக்கின்றனவா எனவும் அகதிகள்பிரச்சனையைமனிதாபிமானமான முறையில் கையாளுகின்றனவா என்பதையும் உறுதிப்படுத்துவதில் விழிப்பாக இருக்க வேண்டும். தாய் நாட்டுக்குத் திரும்பிய அகதிகளின் நிவாரணவேலைகளைக்கவனிப்பதோடு நின்றுவிடாமல், தற்போது ஐரோப்பியாவிலும் வட அமெரிக்காவிலும் தங்கியுள்ள அகதிகளின் நலனையும் அக்கறையுடன் கவனித்துவர வேண்டும்.

## ஜெயலலிதாவுக்கு ஜானகி 2 கோடி கொடுத்தாரா?

அண்ணு தி. மு. க.வின் இரண்டு அணிகளையும் இணைப்பதற்காக ஜெயலலிதாவுக்கு இரண்டு கோடி ரூபாவை ஜானகி வழங்கிஞரா என்ற கேள்வி தமிழக அரசியலில் பரபரப்பாக எழுப்பப்பட்டுள்ளது.

இது பற்றிய சில தகவல்கள் வெளியானதையடுத்து மத்திய புலனுய்வுத்துறை அதிகாரிகள் சிலர் பூரண விசாரணை நடத்துவதற்காக சென்னை வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக தேர்தல்நடைபெற்ற தினத்தில் பத்து இலட்சமும், கடந்த 14-ம் திகதி 40 இலட்சமும் 16-ம் திகதி 70 இலட்சமும், 27-ம் திகதி மேலும் 40 இலட்சமும் ஜானகியால் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணுநிதி, முன்னுள் அமைச்சர் காளிமுத்து உட்பட மற்றும் பல தலைவர்களும் இவ் இணைப்புக்காக ஜெயலலிதாவுக்கு இரண்டு கோடி ரூபா கொடுக்கப்பட்டதாக குற்றஞ் சாட்டியுள்ளார்கள்.

## ஆர்ப்பாட்டம்

இந்திய போபால் விஷவாயு கசிவு நஷ்டஈடு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நேற்று இந்தியாவிலுள்ள யூனியன் காபைட் அலுவலகத்தின்முன் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. யூனியன் காபைட் அலுவலகத்துள் புகுந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தளபாடங்களை சேதப் படுத்தினர்.

## உகண்டா விமானம் குண்டு வீச்சு

உகண்டா அரசுக்கு சொந்தமான இரு விமானங்கள் கென்யாவின் எல்லை தாண்டிச் சென்று கென்ய நாட்டினுள் இரு குண்டுகளை வீசியதில் இரு கென்ய பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்செயலை வன்மையாக கண்டித்த கென்ய அரசு உகண்டாவின் இத்தகைய மூர்க்கத்தனமான நடவடிக்கை இனியும் தொடர மாட்டாது என தாம் நம்புவதாக எச்சரித்துள்ளது இதே சமயம் கென்ய சுதேசிகள் சிலர் உகண்டா எல்லையை தாண்டிச் சென்று உகண்டா இராணுவ வீரர்கள் சிலரை தாக்கியுள்ளதாயும் தெரிவிக்கப்படுகின்றது.


1989-ம் ஆண்டு பட்ஜெற் வருமுன் முந்துங்கள்

உங்களுக்கு தேவையான 'சிசில்' உற்பத்தி சாமான்களை உடனடியாக பெற்றுக்கொள்ளுங்கள்.

● குளிர் சாதனப் பெட்டி-
8 கன அடி ரூ. 12,300
6 கன அடி ரூ. 11,150

● டீப்பிறீசர்கள்:
10, 14, 16 கன அடிகள்
விலை ரூ. 19,000 முதல் 23,300

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெற்
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
03216



3-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சாம்பசிவம் சற்குணவதி

மலர்வு: 15-04-1942
உதிர்வு: 14 02-1986

3-வது திதி: 12 - 03 - 1989

அன்பின்ஒளி விளக்காய் அறிவின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பொக்கிஷமாய் எங்கள் குடும்பத்தின் குலதெய்வமாய் விளங்கி எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனுடன் சங்கமித்த எனதருமை அக்காவே! நீங்கள் இவ்வுலகை விட்டுச் சென்று ஆண்டுகள் மூன்று கடந்தாலும் நீங்கள் கட்டிய மனக்கோட்டையெல்லாம் கனவாய் கலைந்தாலும் என்றும் எம் நெஞ்சில் உங்கள் நினைவுகள் மாருது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிருேம்.

சரவணை மேற்கு, வேலணை.
தம்பி, தாய், கணவன், பிள்ளைகள், மாமா, மைத்துனன், மைத்துனிமார். மருமக்கள், அன்பு அண்ணன்.
03262



தேசிய ஹோமியோபதி சங்கம்
(NATIONAL HOMEOPATIC ASSOCIATION)

சகல பதிவுபெருத ஹோமியோபதி வைத்தியர்கள் யாவரும் அரச பதிவு பெறும் பொருட்டு எம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்
தேசிய ஹோமியோபதி சங்கம்
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
03255



L M L VESPA T5

L M L Vespa ஸ்கூட்டர்கள் வாங்க விரும்புபவர்கள் முற்பணம் செலுத்திஞல் ஏப்ரல் முதல் வாரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
03318

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
**வீடியோ விகோன்ஸ்**
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# கிராமசேவகர்களுக்கு விரைவில் சம்பள உயர்வு

கிராமசேவகர்கள் தொடர்ந்தும் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழே இருப்பார்கள். இவர்கள் மாகாண அரசின் கீழ் கொண்டுவரப்படமாட்டார்கள்.

பழைய கிராமசேவகர்களுக்கும், புதிதாக கிராமசேவகர்களாக நியமிக்கப்பட்ட பயிர்ச்செய்கை, விசேஷ சேவை உத்தியோகத்தர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சர் யு. பி. விஜேகூன் தெரிவித்துள்ளார்.

தற்போது 4,437 கிராம சேவகர்கள் உள்ளனர் என்றும், 6,126 விசேஷ சேவை அதிகாரிகளும், 3,417 பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் கிராமசேவகர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்,

புதிய கிராம சேவகர் பிரிவுகள் உருவாக்கும் வேலை மே மாதத்துக்கு முன்னர் முடிவடையும்.

## 20 பேர் பலி

(ஒட்டோவா)

அறுபது பேருடன் தன்சானியாவிலிருந்து சென்ற கனடிய விமானம் ஒன்று புயலில் சிக்கி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருபது பேர் பலியானதாக தெரியவருகிறது

## வடகிழக்கு பகுதி ..

இல் நீதிபரிபாலனத்துறையை மீண்டும் வழமைபோல இயங்கச் செய்வது பற்றி ஆலோசனை நடத்தவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக 'ஹல்ஸ்டோர்ப்' வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக தமிழ்ப் பகுதி நீதிமன்றங்கள் இயங்காதிருப்பது தெரிந்ததே. இங்குள்ள பல நீதிமன்றங்கள் கடந்த கால தாக்குதல் சம்பவங்களால் தாக்குதலுக்குள்ளானதும் குறிப்பிடத்தக்கது.

# இரு கிரிக்கெட் போட்டிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன

சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையே நேற்று தொடர்ந்து நடைபெற்ற கிரிக்கெட்போட்டி கடும் மழை காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு மிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி இந்துக் கல்லூரி மைதானத்துக்கருகே நடத்தப்பட்ட குண்டு வெடிப்பையடுத்து இடை நிறுத்தப்பட்டது.

## இரு விமான ...

தம் முப்பத்தி மூன்று பேர் வரை கொல்லப்பட்டனர். கனடாவில் பயணிகள் ஜெட் விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதால் இருபத்தி மூன்று பேர் உயிரிழந்தனர். பெருநாட்டின் தலைநகர் லிமாவில் விமானம் ஒரு கட்டடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதால் பத்துப் பேர் பலியானுர்கள்.

## ஜனாதிபதி...

சென்றதாக அமெரிக்காவிலுள்ள சில நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனை விட இருநூற்றி அறுபது மில்லியன் டாலர் மோசடி சம்பந்தமாக மற்றெரு வழக்கும் இங்குள்ள நீதிமன்றம் ஒன்றில் இவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மதுரை...

மருங்காபுரியில் பதினைந்து பேர் போட்டியிடுகின்றனர். வாக்குச் சீட்டுகள் இன்று காலை எண்ணப்பட்டு மாலையில் முடிவுகள் அறிவிக்கப்படும்.

## அரச ஊழியருக்கு...

வழங்கப்படவேண்டிய ஆயிரம் ரூபா முற்பணமும் இதற்குள் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடகிழக்கு...

அதிகாரங்களுக்கு ஜனாதிபதி காட்டும் அக்கறை, இலங்கையிலுள்ள இந்தியப்படையினரின் நிலைமைகள் மற்றும் சேதமடைந்தவற்றைத் திருத்துவதற்கு கனரக இயந்திரங்களை தந்துதவுதல் என்பன பற்றி அவர் பேச்சு நடாத்துவார்.

## ஜானகி...

ரூபா பணத்தை வங்கிகளில் மோசடி செய்ததாக தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டை மத்திய புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

# காலமானுர்கள்

## திருமதி மகேஸ்வரன் விமலாதேவி

இலக்கம் 8. சிறும்பியடி ஒழுங்கையில் வசிக்கும் திரு. செல்லையா மகேஸ்வரனின் (மனோ) அன்பு மனைவி, விமலாதேவி 09.03.89 வியாழக்கிழமை காலமானுர். இவர் கோண்டாவில் வி. இரத்தினசபாபதி – திருமதி செல்லம்மா.இரத்தினசபாபதி ஆகியோரின் அன்பு மகளும் புங்குடுதீவைச் சேர்ந்த காலம்சென்ற கலால் பகுதி உத்தியோகத்தர் க.செல்லையா, திருமதி கமலாட்சி செல்லையா ஆகியோரின் அருமை மருமகளும், சிவனேசன் (U.K.), இந்திராதேவி (இந்தியா), றேணுகாதேவி, ஜெயநேசன் (I.P.T) றசிதாதேவி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுலோஜனு(U.K.) குகனேசன்(CANADA) விசாகபவன், (MALDIVES) சுமித்திரா ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று (12 03.89) ஞாயிற்றுக்கிழமைஅவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

8. சிறும்பியடி ஒழுங்கை
யாழ்ப்பாணம்

தகவல்
மகேஸ்வரன்
(மனோ)

03363

## திருமதி அனு லட்சுமி நவரத்தினம்

(இளைப்பாறிய தலைமை ஆசிரியை, சாவகச்சேரி)

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியை அனு லட்சுமி நவரத்தினம் 11.03.89 காலை காலமானுர் அன்னுர் காலஞ்சென்ற அமரர் S. S. E நவரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அல்பிரட், ஜோய் (ஆசிரியை, டிறிபேக்கல்லூரி) விக்ரர் (லண்டன்) பெஞ்சமின் நவரத்தினம் (இயக்குனர் றேடியன் ரயர் தொழிற்சாலை), தர்மா நவரத்தினம் (இயக்குனர் ஷப்ருஸ்), பிராங் (அவுஸ்திரேலியா), கிருபா நவரத்தினம் (ஈஸ்ரேன் என்ஜினியரிங் கல்முனை) ஆகியோரின் அருமைத் தாயாரும் மாகிறெற், சங்ரோ அரியதேவா (விக்கினேஸ்வர வித்தியாலயம், கைதடி), ஐவி, புவனேஸ்வரி, றூபா, ஹெலன், றஞ்சித ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னுரது இறுதி ஆராதனை 13-ம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

"நவலின்"
நுணுவில் கிழக்கு
சாவகச்சேரி

தகவல்
பெஞ்சமின் நவரத்தினம்

03336

V. J. S. Express
சொகுசு பஸ் சேவை
கொழும்பு - யாழ் - கொழும்பு

● 01. 03. 1989 இலிருந்து எமது சேவை காங்கேசன்துறை வரை நடைபெறுகின்றது.
தினசரி காலை 6. 15க்கு காங்கேசன்துறையில் இருந்து பஸ் புறப்படும்.

ரிக்கட் கிடைக்கும் இடங்கள் :

★ இராஜேஸ்வரி ரேடேஸ்
காங்கேசன்துறை

★ Lanka Filling Station
113, Main Street, Jaffna

★ Royal Pharmacy
156, Hospital Road Jaffna

03346

# காலமானுர்கள்

## சின்னத்தம்பி மகாதேவன்

தோற்றம்: 8 - 9 - 1952

மறைவு: 16 - 2 - 1989

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், அரசடி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகாதேவன் 16 – 2 – 1989 வியாழக்கிழமை சவுதி அரேபியாவில் மாரடைப்பினுல் காலமானுர். அன்னுர் தெய்வநாயகியின் அன்புக் கணவரும், சசிமாலா, விஜி, சுதர்சன், யுவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னத்தம்பி, சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகனும் வீரன் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், நேசமலர், கந்தசாமி, தங்கராசா, தேவராசா, அருந்தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுபத்திரை, புஸ்பரத்தினம், இராசரத்தினம், பரமேஸ்வரி, சாந்தினி, சந்திரா, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னுரின் இறுதிக் கிரியைகள் 12 – 3 – 89 ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் நடைபெறும்.

உற்ருர் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
1-ம் ஒழுங்கை,
நல்லூர்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

03362

## திருமதி பொன்னம்பலம் பவளரத்தினம்

திருமதி பொன்னம்பலம் பவளரத்தினம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மலாயன் பெஞ்சனியர் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி, ராஜமலர், ராஜசிம்மன் (U. K.), மகேஸ்வரி (U. K.), சரோஜினி, பரமேஸ்வரன்(U. K.),ராஜசிங்கம்(U. S. A.) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜதுரை, ஆனந்தநடராஜா, கதிரவேலு (U. K), வெ. யோகேஸ்வரன் (முன்னுள் பா. உ ), Dr. சாரதா (U K.), Dr. ஜோதி (U. K.), ஆன். (U. S. A.) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரன், சியாமளா, நிரஞ்சலா, ரமணன், சங்கரி, சிவபாலா, சிவராஜசிங்கம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னுரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுகிழமை (12-3-89) மாலை 3-00 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

முன்பு அறிவிக்கப்பட்டபடி நேற்று மரணச்சடங்குகள் தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெருததையிட்டு மனம் வருந்துகின்ருேம்.

இல. 5/1,
பண்டாரக்குளம் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்
திருமதி ராஜமலர் ஆனந்தநடராஜா

03365

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கிராண்ஸி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகம் இயந்திரத்தில் 12-03-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது